# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 240 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 08, சனிக்கிழமை 23.07.2016


**கூட்டுப்படைத் தாக்குதல்களால் சிரியாவில் 77 பொதுமக்கள் சாவு**



பக். 15

## நடுவானில் காணாமற்போனது இந்திய விமானம்

புதுடில்லி. ஜூலை 23
இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானம் 29 பேருடன் நடுவானில் காணாமற் போயுள்ளது.
வங்காள விரிகுடாக் கடலுக்கு மேல் பறந்துகொண்டிருந்தபோது, நேற்றுக் காலை விமானம் காணாமற் போனதாக விமானப்படை மக்கள் தொடர்பு பக்.05

# நலன்புரி முகாம்களை மூடினால் மட்டும் மீள்குடியேற்றப் பிரச்சினை முடிந்துவிடாது

## ஏதிலிகளாக உள்ள 8,000 குடும்பங்களுக்கும் பதில்வேண்டும் என்கிறார் குணபாலசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
பன்னாடுகளைத்திருப்திப்படுத்துவதற்காக முகாம்களை மூடி மீள்குடியேற்றப்பிரச்சினையைத்தீர்க்க முடியாது. முகாம்களுக்கு வெளியே 8 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.
ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை முழுமைப்படுத்துமாறு யாழ். மாவட்டச் செயலருக்கு ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவு குறித்தே அவர் இதைத் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியமராமல் நலன்புரி நிலையங்களில் இன்னமும்971குடும்பங்கள்வசிக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்காக 971 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிதியிலிருந்து 150 குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்கும் பணிகள் காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்குச் சொந்தமான காணியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் குடும்பங்களுக்கு சொந்தக் காணிகள் எவையும் இல்லை. பக்.05

# தல்செவனவுக்கு முன்பாகப் போராட்டம் நடத்த இளைஞர்களுக்குத் தடை

## வவுனியாவிலிருந்து வந்த இளைஞர்களை கைது செய்வோம் என மிரட்டி விரட்டியது பொலிஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 23
நல்லாட்சிக்கான அரசில் பொலிஸாரின் தலையீடுகள் அதிகமாக உள்ளன. தல்செவனவில் கவனவீர்ப்புப் போராட்டம் செய்தால் கைதுசெய்யப்படுவீர்கள். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை மீறி போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை.
இவ்வாறு குற்றஞ்சாட்டினர் வடக்குக்கான இளைஞர் அமைப்பினர்.
மக்களுடைய காணிகளை விடுவிக்கக் கோரி வடக்குக்கான இளைஞர் அமைப்பினரால் நேற்றுக்காலை வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் பேரணியானது, நேற்று மாலை இராணுவத்தினரின் காங்கேசன்துறை தல்செவன பகுதியிலும் இடம்பெறுவதாக திட்டமிடப்பட்டது. இதன்படி நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்த வடக்குக்கான இளைஞர் பக்.23



## அதிபர்கள் நேற்று கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 23
பாடசாலைகளை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைக் கண்டித்தும், உடனடியாகப் பொருத்தமான பாடசாலைகளை வழங்கக் கோரியும் புதிதாக சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர்கள் அணி திரண்டு கொழும்பில் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.
மூன்றாம் தவணை ஆரம்பிக்கும்போது, புதிதாக சேவைக்குள் உள்வாங்கப்பட்ட அதிபர்களுக்குப் பாடசாலை வழங்கப்படவேண்டும். அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு மாறாக எந்தவொரு நியமனமும் வழங்கக்கூடாது. இவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் சகல அதிபர்களையும் நாடளாவிய ரீதியில் ஒன்று திரட்டி மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவோம் எனவும் பிரதமரின் செயலாளரிடம் அதிபர்கள் வலியுறுத்தினர். (விரிவு பக்கம் 06)

# நான் இனவாதியல்லன் நல்லிணக்கவாதியேதான்

## சொல்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் கூரே

கொழும்பு, ஜூலை 23
இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயற்படும் என் மீது இனவாத சாயத்தைப் பூசும் வகையில் எனது கருத்துக்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. நான் இனவாதியல்லன். நல்லிணக்கவாதியே.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே. பத்தரமுல்லையில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று தமிழ்ப் பத்திரிகைகளின் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார் வடக்கு மாகாண ஆளுநர்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை பல்லின, மத, கலாசாரம், மொழிகளைக் கொண்ட ஒரு நாடு. இந்த நாட்டில் மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற போர் காரணமாக பக்.25

## யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் மைதானம்

யாழ். மாவட்டத்தில் 400 மில்லியன் ரூபா செலவில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானமொன்று அமைக்கப்படவுள்ளது. 50 பரப்பு காணியில் கட்டப்படவுள்ள இந்த மைதானத்தின் கட்டுமானப் பணிகள் நவம்பர் மாதம் ஆரம்பமாகி, 3 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (விரிவு: பக்கம் 27)

# கொன்ஸ்டபிள், இளைஞன் சங்குப்பிட்டியில் மர்மச் சாவு

## நடந்தது விபத்தா என்று பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, ஜூலை 23
பூநகரி – சங்குபிட்டிப் பாலத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் உட்பட இருவர் சடலமாக மீட்கப்பட்டனர் என பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குருணாகலைச் சேர்ந்த அரம்பேபொல (வயது – 28) என்பவரும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த கதிரவேலு கவிராஜ் (வயது – 25) என்பவருமே சடலமாக மீட்கப்பட்டனர் என பக்.25

# மாணவர்கள் அச்சமின்றி கற்றலைத் தொடரலாம்

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு உத்தரவாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகமும் பேரவை உறுப்பினர்களும் ஆணைக்குழுவும் கூட்டுப் பொறுப்பாக இருக்கும். மாணவர்கள் குழப்பங்கள் இன்றிக் கற்றல் செயற்பாடுகளைத் தொடர முடியும்.
இவ்வாறு உத்தர பக்.05



## யாழ்ப்பாணத்தில் இப்போதும் தமிழீழ நீதித்துறையே உள்ளது

கொழும்பு, ஜூலை 23
யாழ்ப்பாணத்தில் தமிழீழ நீதித்துறையே இன்றும் காணப்படுகின்றது. தென்னிலங்கைக்கு ஒரு சட்டமும் வடக்குக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.
தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில், பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற சிங்கள மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அரச கட்டடங்கள் உள்ளிட்ட அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தனர். இதேபோன்ற செயற்பாடே தற்போதும் ஆரம்பமாகியுள்ளது என கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார். (விரிவு: பக்கம் 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கன்குளம் கிராமத்தில் 74 குடும்பங்களுக்குக் காணி

முல்லைத்தீவு, ஜூலை 23
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 74 குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.



இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிராம அலுவலகர் அலுவலகத்தில் நடைபெற்றது.
இதன்போது பனிக்கன்குளம் கிராம அலுவலர்பிரிவுக்குட்ப்பட்ட 43 பேருக்கு தலா 1 ஏக்கர் மேட்டுக்காணிக்கான அனுமதிப்பத்திரமும் 29 பேருக்கு தலா அரை ஏக்கர் காணிக்கான அனுமதிப் பத்திரமும் 02 பேருக்கு தலா 1 ஏக்கர் வயல் காணிக்கான அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டன.
அடுத்த கட்டத்தில் அனுமதிப் பத்திரம் வழங்கவுள்ளவர்களுக்கான காணிக் கச்சேரியும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் மற்றும் பனிக்கன்குளம் கிராம அலுவலர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.
(வ-ரி7)



# சிறுவர் துர்நடத்தைகள் தொடர்பில் பொலிஸில் முறையிட மக்கள் தயக்கம்

## சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 23
முல்லைத்தீவில் இடம்பெறும் சிறுவர் துர்நடத்தைகளை பொலிஸார் அம்பலப்படுத்துகின்றனர். இது சமூக கலாசாரத்தை பாதிக்கும் என்று கருதி பெருமளவான துர்நடத்தைகள் வெளியில் வராது மறைக்கப்படுகின்றன.
இவ்வாறு சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி திரு. நிர்த்தனரூபன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கமைய முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவா பாதுகாப்பும் சிறுவர்களுக்கு ஏற்படும் துர்நடத்தைகளிலிருந்து அவர்களை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று மாலை இடம்பெற்றது.
கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், கரைதுறைப்பற்று பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்திகாரிகள், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் சட்டத்தரணிகள் என பலரும் கலந்து கொண்டனர்.
மாவட்டத்தை சேர்ந்த சிறுவர்களுக்கு இருக்க கூடிய பாதிப்புக்கள், அவர்கள் எவ்வாறான சூழ்நிலையில் துர்நடத்தைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது, சட்ட நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.
"பொலிஸாருக்கு தெரியபடுத்த வெண்டிய விடயம் ஒனறு உள்ளது. சிறுவர்களுக்கான குற்றங்கள் முல்லைத்தீவில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அது வெளிவருகின்ற வீதம் தான் குறைவாக உள்ளது. அதற்கு சமூக விழுமியங்கள் - சமூக கலாச்சாரங்கள் என்பன ஒரு காரணமாக அமைகின்றன.
துர்நடத்தைகள் தொடர்பில் முறைப்பாடுகள் வந்தால், அவை மிகமிக இரகசியமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தோடு அவை இரகசியமாகவே நீதிமன்றுக்கும் கொண்டுவரப்படவேண்டும். அவ்வாறு நீதிமன்றத்துக்கு ஒரு பிரச்சினைவரும் போது, சட்டத்தரணிகள் மிகவும் இரகசியமாக செயற்படவேண்டும். பாதிக்கப்பட்டவரும் இயன்றளவு நீதிமன்றத்திற்கு சமுகமளிப்பதை குறைத்து கொள்ளவேண்டும்.
பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருந்தாலும், சில விடயங்களை அவர்கள் அம்பவலப்படுத்துகின்றார்கள் என முல்லைத்தீவில் குற்றஞ் சாட்டப்பட்டது. இதனால் பலர் இந்த விடயங்களை பொலிஸாருக்குத் தெரியப்படுத்துவதில்லை. பொலிஸாருடைய நடவடிக்கைகள் மக்களுடைய கலாசாரத்தை பாதிக்காதவாறு அமையவேண்டும். அத்தோடு பாதுகாப்பானதாகவும் நகர வேண்டும் - என்றார் சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி நிர்த்தனரூபன். (வ-21,ரி7)

# மீள்குடியேற்றச் செயலணியை கலைத்துவிடவேண்டும் அரசு

## நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 23
அரசால் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண மீள்குடியேற்றச் செயலணியை உடனடியாக கலைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியது.
அரசின் தான்தோன்றித்தனமான இந்தச் செயலணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, வடக்கு மாகாண சபையோ, வடக்கு மக்களோ ஏற்றுக்கொள்ளப்போவதில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொது எதிரணியின் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் அவர் உரையாற்றினார்.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண மீள்குடியேற்றம் தொடர்பாக அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், சுவாமிநாதன் உள்ளிட்டோர் அடங்கிய செயலணி ஒன்று அரசால் உருவாக்கப்பட்டது. வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பான அரசின் இந்தச் செயலணியில் வடக்கு மாகாண முதலமைச்சர் உள்வாங்கப்படவில்லை. வடக்கு மக்களின் ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உள்வாங்கப்படவில்லை. வடக்கு மாகாண சபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் புறக்கணித்தே அரசால் இந்தச் செயலணி அமைக்கப்பட்டது. இதன் செயற்பாடுகள் எப்படி நியாயபூர்வமானதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியும்?
அதனால்தான் அரசினால் தான்தோன்றித்தனமாக உருவாக்கப்பட்ட இந்தச் செயலணிக்கு எதிராக வடக்கு மாகாணசபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.
வடக்கில் முன்னெடுக்கப்படும் ஒரு விடயத்துக்கு அந்த மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களைப் புறக்கணித்து தீர்மானங்களை எடுப்பதுதான் நல்லாட்சியா? அல்லது அரசின் நல்லிணக்கமா? வடக்கு மாகாண சபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புறக்கணித்து மீள்குடியேற்ற செயலணி அமைத்த அரசின் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
அரசின் இந்த மீள்குடியேற்ற செயலணியில் உள்ள அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்குக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் எனக் கூறப்படுகிறது. அவர் இந்தமுறை வன்னி மாவட்டத்தில் எடுத்த வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கவேண்டும். அதுமட்டுமன்றி, அவர்மீது நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான ஒருவர் இந்தச் செயலணியில் எவ்வாறு இடம்பெற முடியும்? - என்றார். (வ-4)



கொக்கிளாய் தமிழ் மீனவர்களுடைய உரிமை நிலை நாட்டப்பட்டதை அடுத்து கொக்கிளாய் கடற்கரையில் தமிழ் மீனவர்கள் தங்களுடைய வாடிகளை அமைத்து வருகின்றனர். மீனவர்களுடைய வாடியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் நேரடியாக சென்று பார்வையிட்டார். (21)

# அனுமதியின்றி இயங்கிய மருந்தகங்களுக்கு பூட்டு

## யாழ்ப்பாண நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம் யூலை 23
அனுமதிப்பத்திரமில்லாமல் இயங்கி வந்த இரண்டு மருந்தகங்களையும் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றையும் மூடுமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றால் நேற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது.
யாழ்ப்பாண நகரப் பகுதியில் இயங்கும் மருந்தகம் ஒன்றுக்கும் திருநெல்வேலி பகுதியில் இயங்கும் உணவகம் மற்றும் மருந்தகம் ஆகியவற்றுக்கு எதிராக யாழ்ப்பாண உணவு மற்றும் மருந்து பரிசோதகரினால் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. நிறுவனத்தின் உரிமையாளர்கள் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர். உணவகத்துக்கெதிராக 10 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றுக்கு அபராதமாக 20 ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், திருத்த வேலைகள் முடிவடையும் வரை உணவகத்தை மூடுமாறும் கட்டளையிட்டார்.
ஏனைய இரண்டு மருந்தகங்களுக்கும் 15 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அனுமதிப் பத்திரமில்லாததால் அவற்றை மூடுமாறும் நீதிவான் மன்றம் கட்டளையிட்டது. அத்துடன் குறித்த மருந்தகங்களில் சோதனையிட்டு கால [illegible] காரணப்படின் [illegible] அது தொடர்பாக நீதிமன்றுக்கு அறிக்கை முன்வைக்குமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-103)

# அரசியல்வாதிகளுக்கு அஞ்சாமல் அதிகாரிகள் பணியாற்றவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23
அரசியல்வாதிகள் அச்சுறுத்தல்கள் விடுத்தால்கூட, அச்சமின்றி அரச அதிகாரிகள் பணியாற்ற வேண்டும்.



இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கான கலந்துரையாடல் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.
மக்களுக்கான சேவையின்போது அரசியல்வாதிகளினதோ அல்லது அமைச்சர்களதோ அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால்கூட அரச அதிகாரிகள் அச்சமடையக்கூடாது. உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அன்றி, எதற்கும் அச்சமின்றிப் பணியாற்ற வேண்டும்.
உங்கள் கடமையைத் துணிந்து புரியலாம். எந்த ஊழல் மோசடிகளுக்கும் இடம்கொடுக்கலாகாது. உங்கள் கடமைக்கு இடையூறாக அரசியல்வாதிகள் தலையீடு செய்தால், துணிந்து முறையிடுங்கள். உங்கள் பணியை நேர்த்தியாக வழங்குங்கள். அதற்காக நல்லாட்சி அரசு பாடுபடும் என்றார் ஜனாதிபதி. (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உடன் விற்பனைக்கு

கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகிலுள்ள பலசரக்கு வியாபார நிலையத்தில் உள்ள பலசரக்குப் பொருள்கள், தளபாடங்கள் உட்பட உடனடியாக விற்பனைக்கு உண்டு.

077 402 6021, 077 958 8457

### வேலையாள்கள் தேவை

ரொட்டிபாஸ், ரீமேக்கர், சப்ளை, சமையல் உதவியாளர், பார்சல் கட்டுபவர் ஆகியோர் தேவை. (ஆண்கள் தேவை)

077 380 2329, 077 472 5429, 077 361 7645

### அதிரடி விலைக்குறைப்பு

90% மின்சாரத்தை மீதப்படுத்தும் LED Blub, Panel Light, Rechargable Blub அதிரடி விலைக்குறைப்பில் விற்கப்படுகின்றது.
3w - 50/= இலிருந்து வியாபாரிகளுக்கு விசேட விலைக் குறைப்பில் கொடுக்கப்படும்.
6 மாதம் உத்தரவாதம் உண்டு.
விளையாட்டுப் பொருள்களும் விற்கப்படும்.

**Dollar's Multi Shop**

இல.40, ஸ்ரான்லி வீதி, (மட்டக்களப்பு சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.
077 063 2559

## வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
## மீள் கேள்வி அறிவித்தல் -2016

கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடையினை 2016 ஆம் ஆண்டிற்கு (01.08.2016 - 31.12.2016) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.07.2016– 29.07.2016 ந.ப 12.00 மணி வரை
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 29.07.2016 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 29.07.2016 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை "செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை,தலைமை அலுவலகம்,புத்தூர்"எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் ,எதிர்வரும் 29.07.2016 ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ,அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 458,500.00 | 500.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யுகராஜா ஜெலீபன்
செயலாளர்
வலி கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.
23.07.2016

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.88,241,520/-
கோடிபதி ஷனிதா
030
2016-07-22
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
Y 28 36 51 60
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
22.07.2016
2007
சிவப்பு

வெற்றி இலக்கங்கள்
03 05 50 56
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,559,200/-
2016-07-24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜாதா நிற டிக்கட்டுக்களாகும்.

நியத்த ஜய
481
22-07-2016
நீலம்
03 33 34 51 X
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ-10,000,000/-

## பெறுகை அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
### கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி
### நிகழ்ச்சித்திட்டம் - 2016

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
04. பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணிவரை, 25.07.2016 ஆம் திகதி தொடக்கம் 15.08.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 25.07.2016 தொடக்கம் 15.08.2016 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை 16.08.2016 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
07. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 03.08.2016 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
09. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | வீதிப்புனரமைப்பு (தொகுதி 01) -உடுவில் | 5.84 | 03 மாதம் | M7/C8 | 60,000.00 |
| 2 | வீதிப் புனரமைப்பு (தொகுதி 02) – சுன்னாகம் | 6.44 | 03 மாதம் | M7/C8 | 65,000.00 |
| 3 | வீதிப்புனரமைப்பு (தொகுதி 03) –ஏழாலை | 4.16 | 03 மாதம் | M7/C8 | 42,000.00 |

தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

### திருகேதீச்சரஆலயத் திருப்பணிச்சபை

தொண்டர்நாள்தோறும் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே

பேரவை(ஆட்சிக்குழு)க்கூட்டம்
(Meeting of the Council)

நாள் : துர்முகிவருடம் ஆடி மீ௳ 16தீ௳ ஞாயிற்றுக்கிழமை (31-07-2016)
காலம்: காலை10.00 மணி
இடம் : திருக்கேதீச்சரஆலயம்

கடந்தஆட்சிக்குழுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டஆலோசனைக்-குழுவின் அறிக்கையை ஆராய்தலும் திருப்பணிகள் சம்பந்தமாக மேல் முடிவுகள் எடுப்பதற்குமாகவிசேடமாக இக்கூட்டம் கூட்டப் படுகிறது)
கூட்டறிவித்தல் சகல ஆட்சிக்குழுஉறுப்பினர்களுக்கும் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது.

சரஸ்வதிமண்டபம், 75,லோறன்ஸ் வீதி, கொழும்பு– 04.
தொலைபேசி: 023 2050800, 023 3230034,011 2585975

அ. திருநாவுக்கரசு
செ. இராகவன்
இணைச் செயலாளர்கள்

உ
சிவமயம்

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின்
### 26 ஆவது ஆண்டு விழா

23.07.2016 சனிக்கிழமை மாலை 5.00 மணி- இரவு 9.00 மணி வரை நடைபெறும்.

பிரதம விருந்தினர்
உயர்திரு.**நா.வேதநாயகன்** (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்
உயர்திருமதி.**விஜயகலா மகேஸ்வரன்** (மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்கள்
உயர்திரு.**உமாமகேஸ்வரன்** (பணிப்பாளர், இந்து கலாசார திணைக்களம்)
உயர்திரு.**ஆ.நடராஜன்** (இந்திய துணைத்தூதுவர் யாழ்)
உயர்திரு.**ச.இளங்கோவன்** (வடமாகாண ஆளுநரின் செயலாளர்)

மேற்படி நிகழ்வுகளில் இந்து மத குரு பீடாதிபதி
அதிவந்தனீய சிவஶ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக்குருக்கள்
நல்லை ஆதீன 2ஆவது குரு மஹா சந்நிதானம்
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
சின்மயாமிசன் ஜாக்ரத்சைதன்யா வதிவிட ஆச்சாரியார் சுவாமிகள்
இவர்களின் ஆசியுரைகள், அருள் உரைகள் இடம்பெறும்.
அனைத்து அந்தண குல சமூகம் சார்ந்தவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
இவ்விழாவிற்கான அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத அனைத்து அந்தணர்களும் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
தங்கள் நல்வரவை நாடும் நிர்வாக சபையினர்
சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பெயரை அகற்ற உடன்படாத பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூலை 23

மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளில் உள்ள மகிந்த ராஜபக்சவின் பெயரை நீக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிராந்திய அரசியல்வாதிகளே பிரதமரிடம், மகிந்த ராஜபக்சவின் பெயரை நீக்க வேண்டும் என்று கோரியிருந்தனர். அதற்குப் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க உடன்படவில்லை என்று நாடாளுமன்ற வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்தல ராஜபக்ச பன்னாட்டு விமான நிலையம், அம்பாந் தோட்டை ருகுணு மாகம்புர ராஜபக்ச துறைமுகம் ஆகிய பெயர்களில் இருந்து, ராஜபக்சவின் பெயர் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையே பிரதமரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. (த-5)

## நகர சபையின் பணியாளரை மோதியது உழவு இயந்திரம்

வீதியோரத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சாவகச்சேரி நகர சபையின் பணியாளரை, வேகக் கட்டுப்பாட்டை இழந்த மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் மோதிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி கச்சாய் டாக்டர் வீரசிங்கம் வீதியில் இடம்பெற்றது. காயமடைந்த சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த 28 வயதுப் பணியாளர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(த-9)

## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல்.
தளபாட காட்சி அறைக்கு

1. Electrician
2. Showroom Marketing Sales &Executives. (Girls)
3. Data Entry Operators (Ms Office, MS Excel, Quick Book)..
4. Designer (Corel draw, Photoshop)

விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

KINGS ELECTRONICS PVT (LTD)
No. 12, POINT PETRO ROAD, JAFFNA.
**021 454 6699**

(ஜெ. 3132) (13.18)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

4D180 வலு உடைய டோசர் வாடகைக்கு
அமர்த்துவதற்கான கூறுவிலை

கல்லுண்டாய்வெளி கழிவகற்றல் பகுதி புனரமைப்பு நடவடிக்கைக்கு 4D180 வலுவுடைய டோசர் இயந்திரம் தேவை. குறித்த டோசர் இயந்திரத்தினை வாடகைக்கு வழங்கக்கூடிய சேவை வழங்குநர்கள் 27.07.2016 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக இதற்குரிய கூறுவிலைப் படிவத்தினை மாநகர சபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்று பூரணப்படுத்தி **29.07.2016** ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக **"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்".** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(சி.24810) (13.18)
**மாநகர ஆணையாளர்.**

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, **காப்புறுதி ஆலோசகராக**, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18- 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக்கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை **10.08.2016** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல: 5110**
C/O **உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# இராணுவத்தின் கடத்தல்களை அறிந்திருந்தாரா மகிந்த?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் ராஜித




கொழும்பு, ஜூலை 23

போர்க் காலத்தில் காணாமற்போனவர்களை இராணுவத்தினர் கடத்திச் சென்றதை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கண்டாரா ? அல்லது இராணுவம் கடத்தல்களை மேற்கொண்டதை மகிந்த ராஜபக்ச அறிந்து வைத்துள்ளாரா ?

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ண கேள்வி எழுப்பியுள்ளார். அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் அலுவலகம் எவர் எதிர்த்தாலும் அமையும். இந்த அலுவலகம் ஊடாகக் காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மை

> காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்டு விசாரணை நடத்தப்பட்டால், தாம் சிக்கிவிடுவோம் என்று மகிந்த ராஜபக்ச அச்சப்படுகின்றார். இதனால் தான் இந்தப் பணியகம் நிறுவப்படுவதை அவர் எதிர்க்கின்றார்.

கண்டறியப்படும். காணாமற்போனவர்கள் உயிருடன் உள்ளனரா ? இல்லையா என்பது தொடர்பான உண்மை நிலவரம் அறியப்படவேண்டும். காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்டு விசாரணை நடத்தப்பட்டால், தாம் சிக்கிவிடுவோம் என்று மகிந்த ராஜபக்ச அச்சப்படுகின்றார். இதனால் தான் இந்தப் பணியகம் நிறுவப்படுவதை அவர் எதிர்க்கின்றார். இந்தப் பணியகம் அமைக்கப்பட்டு உண்மை கண்டறியப்படவேண்டும்.

போர்க் காலத்தில் காணாமற்போனவர்களை இராணு வத்தினர் கடத்திச் சென்றதை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கண்டாரா ? அல்லது இராணுவம் கடத்தல்கள் மேற்கொண்டமையை மகிந்த ராஜபக்ச அறிந்து வைத்துள்ளாரா? அப்படி இல்லையாயின் காணாமற்போனோர் பற்றி ஆராயும் நிரந்தர அலுவலகம் அமைக்கப்படவுள்ளமை தொடர்பில் மகிந்த ஏன் அச்சமடைய வேண்டும்?–என்றார்.

"காணாமற்போனோர் விடயத்தில் ஈ.பி.டி.பி. மற்றும் கருணா குழு மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?" என்று செய்தியாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுகின்றது - என்றார். (த-5)

## Vavuniya Campus of the University of Jaffna, Sri Lanka.
## Procurement Notice for providing Security Services , 2016/2017

The Chairman of the Regional Procurement Committee, on behalf of the Vavuniya Campus of the University of Jaffna invites sealed bids from reputed Security Firms registered with the Ministry of Defense, and bearing a valid Annual License for providing security services for the Vavuniya Campus of the University of Jaffna at two locations; Vavuniya Town and Pambaimadu up to 2.00 pm on **15.08.2016.**

Bids received will be opened soon after the closing of bids at 2.00 pm on **15.08.2016** at the Board Room of the Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya. Bidder or an authorized representative is allowed to be present at the time of opening of bids.

Bidding documents could be purchased from **25.07.2016** to **10.08.2016** between 09.00 am to 2.30 pm on working days from the office of the Assistant Registrar, Administration of the Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya on producing the receipt for the cash payment of a non - refundable fee of Rs.2,000/= made to the Shroff of the Vavuniya Campus, or application forms could also be downloaded from the Vavuniya Campus website **(http:www.vau.jfn.ac.lk)** by accompanying the payment of non - refundable fee of Rs.2,000/= paid to any branch of the Bank of Ceylon by using the Bank of Ceylon cash deposit slip drawn in favour of Vavuniya Campus of the University of Jaffna in the bank of Ceylon Account No: **000 2364 602** (Vavuniya Branch).

Pre - BID meeting is scheduled to be held on **05.08.2016** at 10.00 am at the Board room of the Vavuniya Campus.

Perfected sealed bids marked as "Bid for the provision of security service for Vavuniya Campus" on the top left hand corner of the envelope in duplicate including the receipt / bank deposit slip of a non - refundable fee of Rs. 2,000/= should be addressed to Chairman, Regional Procurement Committee. Vavuniya Campus of the University of Jaffna. Park Road, Vavuniya and should reach Vavuniya Campus on or before 2.00 pm on **15.08.2016** by registered post OR placed in the bid box kept in the Administration Branch of the Vavuniya Campus, Park Road, Vavuniya.

Bidders are advised to visit each location before quoting prices.

If you need any clarificaiton, may contact the Assistant Registrar,Administration
T.P.No: **024 222 3316**

**Chairman,**
**Regional Procurement Committee**
**Vavuniya Campus of the University of Jaffna,**
**Park Road,Vavuniya.**
**22.07.2016**

(C/34811) (11.17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ நீதித்துறையே இன்றும் குடாநாட்டில்

## கர்ச்சிக்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜுலை 23

யாழ்ப்பாணத்தில் தமிழீழ நீதித்துறையே இன்றும் காணப்படுகின்றது. தென்னிலங்கைக்கு ஒரு சட்டமும் வடக்குக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவம் மீண்டும் இனக் கலவரத்துக்கான ஆரம்பமோ என்று சிந்திக்கவேண்டியுள்ளது. மகிந்த ஆட்சியில், தெற்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் சுதந்திரமாகச் சென்று வரக் கூடிய நிலை காணப்பட்டது. கல்வி கற்பதற்கு முடிந்தது. இந்த நிலைமை தற்போது இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பமும் இவ்வாறுதான் இருந்தது. பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற சிங்கள மாணவர்கள் மீது முதலில் தாக்குதல் நடத்தினர். அரச கட்டடங்கள் உள்ளிட்ட அரசசொத்துகளுக்குச் சேதம் விளைவித்தனர். இதே போன்ற செயற்பாடே தற்போதும் ஆரம்பமாகியுள்ளது.

தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குரல் கொடுக்கும் சிவில் அமைப்புக்கள் மற்றும்மனிதஉரிமைஅமைப்புக்கள் கூட சிங்கள மாணவர்கள் வடக்கில் தாக்கப்படும்போது மௌனித்துள்ளன.

களனிப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. சிறையில் உள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியும் உடைமைகளை எரித்தும் நாச வேலைகளில் ஈடுபட்ட தமிழ் மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். வடக்குக்கு ஒரு சட்டமும் தெற்கிற்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் தலைவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது என்பது புரியவில்லை. தாக்குதலுக்கு உள்ளான சிங்கள மாணவர்கள் பெரிய காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்கியவர் விடுவிக்கப்பட்டார். இப்படியான சம்பவங்களின்போது பிணை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. பிணையானது சட்டத்தின் நடைமுறையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது - என்றார். (த-5)

## சிகரெட் பையின் 20 % பகுதியிலும் இனி வர்த்தக நாமம் மட்டுமே

### வருகிறது புதிய சட்டம்

கொழும்பு, ஜுலை 23

சிகரெட் பைக்கெற்றுக்களில் 20 சதவீதப் பகுதியை வெறுமையாக விடும் சட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக அரசு தெரிவித்தது.

தற்போது சிகரெட் பைக்கெற்றுக்களின் 80 சதவீதமான பகுதியில் எச்சரிக்கைப் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எஞ்சியுள்ள 20 சதவீதமான பகுதியில் குறித்த சிகரெட்டின் வர்த்தக நாமத்தை மாத்திரமே அச்சிட அனுமதிக்கப்படும்.

இந்த நடைமுறை ஆஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் செயற்பாட்டில் உள்ளது. இதன்படி இலங்கையிலும் விரைவில் அது செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## ஒன்றிணைந்த நிறுவனமாக மாலபே மருத்துவக் கல்லூரி

கொழும்பு, ஜுலை 23

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை அரச மற்றும் தனியார் ஒன்றிணைந்த நிறுவனமாகச் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7 அரச பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும்உயர்கல்விஅமைச்சர்லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோருக்கு இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இது தொடர்பாகப் பீடாதிபதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். மாலபே மருத்துவக் கல்லூரியை, அரச மற்றும் தனியார் ஒன்றிணைந்த நிறுவனமாக, ஒரு சபையின் கீழ் செயற்படுத்துவதற்கு அப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த மருத்துவக் கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகள் அரச விதிமுறைகளின்படி முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் மேலும் அவதானங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (த-4)

ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
5 நாள், 3 வார, 3 மாத ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
077 245 3673

வீடு வளவு விற்பனைக்கு
இராச பாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப்போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக் காணி புதிய வீட்டுடன் மின்சாரவசதி. குழாய்க் கிணறு. பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துடன் விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 978 3206/ 077 815 6522

வீடு வாடகைக்கு
வவுனியா. குளேப் மில் றோட்.
பண்டாரிக்குளம் 5 அறைகள் மற்றும் வாகனங்கள் 5,6 விடக் கூடிய வசதியும் உண்டு. அரசாங்க நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களுக்கும் புதிய வீடு சகல வசதிகளுடன் விரும்பத்தக்கது.
077 802 0989/ 077 208 4386

வரவேற்பாளர் தேவை
யாழ்.நகரில் இயங்கி வருகின்ற பிரபல நட்சத்திர ஹோட்டலுக்கு வரவேற்பாளர் (ஆண், பெண்) தேவை.
✓ கணினி அறிவு மற்றும் ஆங்கில அறிவு
✓ முன் அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.
✓ சம்பளம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும்.
தகுதியானவர்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
பிள்ளையார் இன்
31,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
or
Email: pillaiyar.in@gmail.com

கமலக்கண்ணன் திருமணசேவை
* டாக்டர்கள், எஞ்சினியர்கள், கணக்காளர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், செவ்வாய்க் குற்றமில்லாத, குற்றமுள்ள தகுதியான மணமக்களும், சைவபோசனமுள்ள மணமக்களும், சூரியன், செவ்வாய்க் குற்றமுள்ள குற்றமில்லாத மணமக்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்களும், விவாகரத்துப் பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.
* 1979இல் பிறந்த 8இல் சூரியனும், செவ்வாயும், 70 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்று வந்துள்ள மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

### நலன்புரி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் அவர்கள் புதிய காணியில் குடியேற்றப்படவுள்ளனர். எனினும் நலன்புரி நிலையங்களில் தற்போது வாழும் 330 குடும்பங்களுக்குச் சொந்தக் காணிகள் உள்ளன. ஆனால் அந்தக் குடும்பங்கள் தமது காணிகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு இராணுவம் இன்னமும் அனுமதி வழங்கவில்லை.

இதனால் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரி நிலையங்களை மூடும் பணிகள் தொடர்பில் கடும் குழப்பம் தோன்றியுள்ளது.

இது குறித்து வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

மயிலிட்டி, பலாலி, தையிட்டி, ஊறணி உள்ளிட்ட சில பகுதிகள் விடுவிக்கப்பட்டாலே நலன்புரி நிலையங்களை முற்றாக மூடமுடியும். நலன்புரி நிலையங்களில் உள்ள 641 குடும்பங்களுக்கும் எங்கே காணி வழங்கப்போகின்றார்கள் என்பது தெளிவில்லாமல் இருக்கின்றது. அவ்வாறு அவர்களுக்கு காணி வழங்கினாலும், வலி.வடக்கில் விடுவிக்கப்படாத பகுதியில் காணி உள்ள 330 குடும்பங்களையும் என்ன செய்யப்போகின்றார்கள்? அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. உடனடியாகக் காணிகளை விடுவிக்க வேண்டும். நலன்புரி முகாம்களை மூடுவதால் மாத்திரம் மீள்குடியேற்றப் பிரச்சினை முடிந்துவிடும் என்று கனவு காணவேண்டாம். முகாம்களுக்கு வெளியே உறவினர்கள் - நண்பர்கள் - வாடகை வீடுகளிலும், இந்தியாவிலும் எமது மக்கள் ஏதிலிகளாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இப்படி 8 ஆயிரம் குடும்பங்கள் வரையில் இருக்கின்றன. இவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்.

அந்த மக்களையும் அவர்களது சொந்த நிலங்களில் - பூர்வீகப் பூமியில் குடியமர்த்தினாலேயே மீள்குடியமர்வுப் பிரச்சினைக்குத்தீர்வுகிடைக்கும். அதுவரையில் இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டு இருக்கும் - என்றுள்ளது. (வ-5)

### மாணவர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதம் வழங்கினார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொகான் டி சில்வா.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், உப தலைவர் குணரட்ண உள்ளிட்ட ஏழு பேர் 3 நாள் பயணமாக நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். அவர்கள் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலை தொடர்பில் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் நிறைவில் நேற்று மாலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொகான் டி சில்வா பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள 10 பீடங்களில் 7 பீடங்கள் 100 வீதம் கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளன. மற்றைய 3 பீடங்களும் விரைவில் ஆரம்பமாகும். மாணவர்கள் அனைவரும் கற்கைக்குத் திரும்பலாம்

மாணவர்கள் அரசியல்வாதிகளின் கூற்றை நம்புவதனை விடுத்து, என்றுமே பெற்றோருக்கு அடுத்தபடியாகவுள்ள குருவின் கூற்றை நம்பலாம். சில அரசியல்வாதிகள் மாறுபட்டுக் கருத்து வெளியிடுவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தேசிய நிகழ்வுகளை இணைப்பது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகமே முடிவு செய்யும் –என்றார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அசம்பாவிதத்தில் அரசியல் பின்புலம் உள்ளமை குறித்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் ஆணைக்குழுவினருக்கு எடுத்துக்கூறினர். அதனை ஆணைக் குழுவின் தலைவர் ஏற்றுக்கொண்டதாகக் கலந்துரையாடலில் பங்கேற்றவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை விஞ்ஞானபீட புதுமுக மாணவர் வரவேற்பில் கண்டிய நடனம் ஆடுவது தொடர்பில் மாணவர்கள் சிலருக்கு இடையில் அடிதடி ஏற்பட்டது. இதில் ஒரு மாணவர் படுகாயமடைந்தார். மேலும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். சம்பவம் தொடர்பில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப் பட்டார். (வ-4,101)

### நடுவானில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி விங் கொமாண்டர் அனுபம் பானர்ஜி தெரிவித்தார்.

அன்ரனோவ் 32 ரக போக்குவரத்து விமானமே, சென்னை தாம்பரம் விமானப் படைத் தளத்தில் இருந்து நேற்றுக் காலை 8.30 மணிக்குப் புறப்பட்டது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் போர்ட் பிளேருக்கு முற்பகல் 11.30 மணிக்குச் சென்றடைய வேண்டிய அந்த விமானம், அங்கு சென்று சேரவில்லை. எந்த நேரத்தில் அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. விமானத்தைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக் கப்பலில் இரு நாள்கள் இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி

கொழும்பு, ஜூலை 23
அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். நியூ ஓர்லீன்ஸ் கப்பல் கொழும்பில் நாளை தரித்து நிற்கவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இலங்கைக் கடற்படையுடன் இரு தரப்பு உறவுகளை அதிகரிப்பதற்கும், மனித நேய உதவி மற்றும் இடர் நிவாரணம் தொடர்பில் அனுபவங்களையும், பயிற்சிகளையும் வழங்குவதற்கும் இந்தக் கப்பல் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
கடலோரப் பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றுக்கான பிரதான சக்தியாக மாறுவதற்கு இலங்கைக் கடற்படையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா ஆர்வத்துடன் உள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.
இரண்டுநாள்கள் நடக்கும் மனிதநேய மற்றும் இடர் நிவாரணப் பயிற்சிகளில் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த சுமார் 200 மாலுமிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-4)

# புதிய அதிபர்கள் நேற்று கொழும்பில் போராட்டம்

## பொருத்தமான பாடசாலைகளை வழங்கக்கோரி



கொழும்பு, ஜூலை 23
தமக்குப் பாடசாலைகளை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைக் கண்டித்தும், உடனடியாகப் பொருத்தமான பாடசாலைகளை வழங்கக் கோரியும் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் கொழும்பில் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.
இலங்கையின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர்கள் ஒன்று கூடித் தமது உரிமையை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் விஹாரமாதேவி பூங்காவில் ஆரம்பித்து நடைபவனியாகப் பிரதமர் அலுவலகத்தை அடைந்தது.
பிரதமர் அலுவலகத்தில் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டார். இதன்போது, மூன்றாம் தவணை ஆரம்பிக்கும்போது பரீட்சையில் சித்தியடைந்த புதிய அதிபர்களுக்குப் பாடசாலை வழங்கப்படவேண்டும் எனவும், அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு மாறாக எந்தவொரு நியமனமும் வழங்கக்கூடாது எனவும், இவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் புதிய அதிபர்களை ஒன்றுதிரட்டி மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவோம் எனவும் பிரதமரின் செயலாளரிடம் தெரிவித்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கூறினார்.
(த-4)



## தசாக கிருஹயக்கு அழைப்பு

நிகழும் துர்முகி வருஷம் ஆனி மாதம்
31 ஆம் நாள் (15.07.2016) வெள்ளிக்கிழமை பின் இரவு
சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி
திருமதி ஞானசவுந்தரிஅம்மா
சிவசுப்ரமணியசர்மா
அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

- ஆடி 9 ஆம் திகதி (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தசாகம் (கல்லெடுப்பு).
- ஆடி 10 ஆம் திகதி (25.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடபதானம், ஏகோதிஷ்டம், மாசியம்.
- ஆடி 11 ஆம் திகதி (26.07.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சபிண்டீகரணம்.
- ஆடி 12 ஆம் திகதி (27.07.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிருஹயக்ஞும்

பகல் ஒரு மணிக்கு சமாராதனை
அக்கிரியைகளில் தாங்களும் குடும்பசமேதரராகக் கலந்துகொண்டு
அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)
ஞானியார் கோயிலடி,
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.
(ஜே.3082 (13.18) குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21.01.1946



மறைவு
19.07.2011

### திருமதி பத்மராணி பத்மநாதன்

ஆண்டுகள் ஐந்து சென்றதே அம்மா
ஆனாலும் எங்கள் ஈர விழிகள் காயவில்லையே!
கல்வி தந்து உங்கள் செல்வமெல்லாம் தந்து
நாம் வல்லவராய் நல்லவராய்
வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பான திருமுகத்தை
என்று நாம் காண்போம் தாயே!

உசன், மிருசுவில். (J/3120) (11.18) குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
28 . 08 . 1946

மறைவு
25 . 06 . 2016



### அமரர் விஸ்வலிங்கம் பாலசிங்கம்

(ஓய்வுநிலை உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்)

கடந்த 25.06.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.07.2016) சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
51/4, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (J/3118) (11.18) குடும்பத்தினர்.

# கொழும்பில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 23
கொழும்பு கல்கிஸை சில்வேஸ்டர் பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இரவு 9.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபர் மீது இலக்கு வைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.
தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு கொல்லப்பட்டார். சடலம் தற்போது களுபோவில வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் கல்கிஸைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்புக்காகக் காணிகளை விட்டுக்கொடுக்க முன்வந்த மக்கள்

தென்மராட்சி, ஜூலை 23
வீதி அகலிப்புக்காகத் தமது காணிகளை விட்டுக் கொடுக்க தென்மராட்சிப் பிரதேச மக்கள் ஆர்வத்துடன் முன்வந்தனர்.

பெருந்தெருக்கள் மற்றும் மேல் மாகாண அமைச்சின் தந்திரோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி வடமராட்சி இணைப்பு வீதியான கொடிகாமத்திலிருந்து புலோலி வரையான வீதி சீரமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாகத் தென்மராட்சிப் பிரதேச மக்களுடனான கலந்துரையாடல் நேற்றுப் பிரதேச செயலக மண்டபத்தில் நடத்தப்பட்டது. அமைச்சின் உயர் அதிகாரிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் கொடிகாமம் தொடக்கம் வரணி வடக்கு (முள்ளிப் பாலம்) வரையான பகுதியில் வீதியோரத்தில் வாழும் 100க்கும் மேற்பட்ட மக்களும் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

வீதியின் மையத்திலிருந்து 4.4. மீற்றர் தூரம் (14.6 அடி)வரை விரிவாக்க ஒத்துழைப்புக் கோரப்பட்டது. சீரமைக்கப்படும் வீதியின் அளவு 8.8 மீற்றராக உள்ள போதிலும் மக்கள் தாமாக முன்வந்து 9 மீற்றர் தூரம் வரை விட்டுக் கொடுக்க முன்வந்துள்ள னர்.

வீதி அகலிப்புக்காக வெட்டப்படவுள்ள பயன்தரு மரங்களினால் ஏற்படவுள்ள வாழ்வாதார மற்றும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான தேவைகள் பற்றியும் அதிகாரிகளால் விவரங்கள் கோரப்பட்டன. வரணி வடக்கு கறுக்காயிலிருந்து புலோலி வரையான பகுதிகளில் வீதியின் இருமருங்கும் நெல் வயல்கள் காணப்படுவதால் அவற்றின் உரிமையாளர் கள் காணிக்குரிய இழப்பீடு கோர லாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலமாகத் தென்மராட்சி-வடமராட்சி பிரதேசங்களுக்கிடையிலான இணைப்பு வீதியாகக் காணப்படும் இந்த வீதி திருத்தப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்போருக்கு கருத்தரங்கு இன்று

தென்மராட்சி, ஜூலை 23
வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளின் அதிபர் மாநாடு விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல் தொடர்பாக தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆய்வு முறையியல் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மு.ப. 9.00 மணி தொடக்கம் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை இதில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (த-9)

## பனை அபிவிருத்தி வாரம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
வடக்கு மாகாணப் பனை அபிவிருத்தி வாரத் தொடக்க நிகழ்வு யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இது தொடர்பான கண்காட்சி நிகழ்வு நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்று மாலை 3.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் பனம் பொருள் சார்ந்த பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர், மாகாண அமைச்சர்களான ஐங்கரநேசன், குருகுலராஜா மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

"பனையின் முடி முதல் அடிவரை வருடம்பூராகவும் எங்களுக்குப் பயன் தருகின்றது. மணற்காடாக இருந்த யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் குடியேறக் காரணமாக இருந்தது இந்தப் பனை வளம்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பனைத் தொழில் செய்வோரை குறிப்பிட்ட ஒரு சமூகமாக நாம் ஒதுக்கியதுபோல பனை மரத்தையும் ஒதுக்கிவிட்டோம். ஒரு காலத்தில் பருவத்துக்குப் பருவம் பசளைகளாகப் பயன்படுத்துவதற்காக ஓலைகள் வெட்டப்பட்டுத் தலைமுடி வெட்டப்பட்டதுபோல கம்பீரமாகக் காட்சியளித்த பனை மரங்கள் இன்று தீண்டுவாரற்று காவோலைகளுடன் தலைவிரிகோலமாகக் காணப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். வடக்கின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தூண்களில் ஒன்றாக மீண்டும் பனை மரங்கள் நிமிர வேண்டும். இதற்கு, பனை உற்பத்திகளைப் பயன்படுத்தவும் நவீன காலத்துக்கு ஏற்பப் பனைசார் உற்பத்திகளை நுகர்வோரைக் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யவும் சகல தரப்பினரும் முன்வரவேண்டும்"-என்றார் அமைச்சர் ஐங்கரநேசன். (த-ரி)

## 800 வேலைவாய்ப்புக்களை வழங்க முல்லைத்தீவில் தொழில் கண்காட்சி



முல்லைத்தீவு, ஜூலை 23
15 இற்கும் மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து 800 ற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வர்த்தகக் கண்காட்சி ஒன்று முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அதற்கு ஏற்றவாறு நேர்முகத் தேர்வில் பங்குகொள்வதற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், இளம் பெண்களைத் தயாராகுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை வர்த்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

வர்த்தகக் கண்காட்சியின் போது தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் இளைஞர்கள், இளம் பெண்கள் கண்காட்சியில் கலந்து கொள்ளும் நிறுவனங்களினால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பாக நேற்றைய கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற உள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த வர்த்தகக் கண்காட்சியில் 15 இற்கும் மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. அவர்களிடம் இருந்து 800 இற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவே இந்தக் கண்காட்சி அமையப் போகின்றது. இதனை இளைஞர்கள், இளம் பெண்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கருத்தரங்கில் கலந்து கொண்ட கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-21-ரி7)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதால் சகலரையும் சமுகமளிக்குமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (த-ரி)

## அச்சுவேலி வைத்தியசாலைக்கு ரூ. 12 மில்லியன் செலவில் விடுதி

அச்சுவேலி, ஜூலை 23
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் புதிய விடுதி ஒன்று நிர்மாணிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் நிறுவுனர் சேர் சிற்றம்பலத்தினால் 1946 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட விடுதி சேதமடைந்து பயன்படுத்த முடியாமல் இருந்தமையால் அது அகற்றப்பட்டு அந்த இடத்தில் புதிய விடுதி நிர்மாணிக்கப்படுகின்றது. (த-11)

## வயல்களின் உரிமையை உறுதிப்படுத்தக் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 23
கைதடி கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட அனைத்து வயல் உரிமையாளர்களையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தமது வயல் உரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகளுடன் வருகை தந்து பதிவை மேற்கொள்ளுமாறு கைதடி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இந்த வருடத்திற்குரிய உர மானியத்துக்குப் பதிலாக [illegible] கொடுக்கப்படவுள்ள[illegible] அனைத்து வயல் உரிமையாளர்களும் தமது உரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகளுடன் தத்தமது பிரிவு கமக்கார அமைப்புக்களிடம் அல்லது கைதடியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த வருடங்களைப் போல வயல்களைக் குத்தகைக்கு எடுத்துச் செய்வோரின் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், வயல்களின் உரிமையாளர்களே நேரில் வருகை தந்து பதிவை மேற்கொள்ள வேண்டும் என்றும், பதிவை மேற்கொள்ளத் தவறும் வயல் உரிமையாளர்க ளுக்கு உரமானியத்திற்குப் பதிலாக வழங்கப்படவுள்ள பணம் [illegible] டது. (த-9)

## போர்ப் பாதிப்புக்காகக் காப்புறுதி பெறாத வர்த்தகர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
போர்க் காலத்தில் பாதிப்புக்குள்ளான வாகனங்கள் மற்றும் உடைமைகளுக்கான காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன்தொடர்பு கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் கழகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

2006 முதல் 2009 வரையிலான போர்க்காலத்தின்போது வட பகுதியில் பாதிப்புக்குள்ளான வாகனங்கள் மற்றும் உடைமைகள் என்பன போர், வேலை நிறுத்தம் மற்றும் கலவரம் போன்ற காரணங்களை உள்ளடக்கி முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

பாதிப்புக்குள்ளான காலத்தில் காப்புறுதி செல்லுபடியாகக் கூடியதாக இருந்தும் இதுவரை காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்தும் எவ்வித காப்புறுதி நிவாரணமும் பெற்றுக் கொள்ளாதவர்கள். காப்புறுதி சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் அறிவிக்க முடியும்.

யாழ். வணிகர் கழகத்தில் நேரடியாகவோ அல்லது இல. 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்துக்கு தபால் மூலமாகவோ இதனை அறியத் தரமுடியும்-என்றுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா கண்டி வீதியில் உள்ள சனச வங்கி கிளை அலுவலக ஊழியர்கள் நேற்றுமுன்தினம் பி.ப. ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (த-4)

# கற்சிலைமடு வீரையடியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

## அப்பகுதி மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜூலை 23

கற்சிலைமடு வீரையடி விநாயகர் ஆலய வீதியில் வளர்ந்துள்ள பற்றைக்குள் சுகாதாரத்துக்குத் தீங்கு ஏற்படுத்தக்கூடிய தலைமுடி மற்றும் பிளேட் என்பன கொட்டப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

முத்துஜயன்கட்டுக்குளம் நீர்ப்பாசனத்துக்கு உட்பட்ட கால்வாய்களையும், அதனுடன் இணைந்த வீதியையும் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டவேளையிலேயே இவ்வாறு தலைமுடி, பிளேட் என்பன கொட்டப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. சிகை அலங்கரிப்பு நிலையங்களில் வெட்டப் படும் தலைமுடிகள் உரைப் பைகளில் கட்டப்பட்டு இவ்வாறு போடப்பட்டிருந்தன என்றும், இதனை உடனடியாக நிறுத்துமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரினர்.

"இது தொடர்பாக எவரும் எமக்கு அறியத்தரவில்லை. எனினும் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுக் குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

(த-500-ரி7)

## நீண்டகாலமாக புனரமைப்பின்றி வெருக்கு நாறிக்குளம்

முல்லைத்தீவு, ஜூலை 23

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வெருக்கு நாறிக்குளம் நெடுங்காலமாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் அணைக்கட்டு, துருசு என்பன பழுதடைந்த நிலையில், அந்தக் குளத்துக்குக் கீழுள்ள வயல்நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியாதநிலை ஏற்பட்டது.

இதனால் சிறுபோக காலத்தில் அவற்றைத் தரிசுநிலங்களாகக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மழை காலத்தில் குளத்தில் நீர் தேங்க முடியாத நிலை உள்ளது. அணைக்கட்டு புனரமைக்கப்படாதுள்ளதால் வெள்ளநீர் வழிந்தோடி விடுவதால், கோடை காலத்தில் கால்நடைகளுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதும் சிரமமானதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

எமது ஆளுகைக்கு உட்பட்ட கைவிடப்பட்ட குளங்கள் தொடர்பான விவரங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளோம். அதற்குரிய நிதிகள் எமக்குக் கிடைக்கும்பொழுது முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று ஒட்டுசுட்டான் கமநல சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(த-500-ரி7)

# கிராம அபிவிருத்தி, சமூக சேவை அலுவலர் நியமனத்தில் தாமதம்

## பரீட்சார்த்திகள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடமாகாணப் பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அபிவிருத்தி அலுவலர், சமூக சேவைகள் அலுவலர் பதவிகள் பல இன்னமும் வெற்றிடமாகவே உள்ளன.

கடந்த மே மாதம் இந்த நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் நடைபெற்றும், இன்று வரை அவை வழங்கப்படாமல் இருப்பது குறித்துப் பரீட்சார்த்திகள் விசனம் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் வன்னிப் பெரு நிலப்பரப்பு உட்படப் பல பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பொதுமக்களுக்கு இந்த அலுவலர்களின் சேவை மிக அவசியமானதொன்றாகவே விளங்குகின்றது. இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுக் கடந்த மே மாத நடுப் பகுதியில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இந்தப் பதவிகளுக்கான நியமனங்கள் ஜூலை மாதம் முதலாம் திகதி கிடைக்குமென எதிர்பார்த்திருந்த தமக்கு, இன்னமும் அது தொடர்பான அறிவித்தல் ஏதும் கிடைக்கவில்லை என அவர்கள் கூறினர்.

மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர்கள், விளையாட்டு அலுவலர், கலாசார அலுவலர் நியமனங்கள் என்பவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு மாதங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால், பொதுமக்களுக்குப் பல்வேறு வகையான சேவைகளை வழங்கும் சமூக சேவைகள், கிராம அபிவிருத்தி அலுவலர் போன்ற பதவிகளுக்கு நியமனம் வழங்குவதில் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு தாமதம் செலுத்துகின்றது.

> “மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர்கள், விளையாட்டு அலுவலர், கலாசார அலுவலர் நியமனங்கள் என்பவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இரண்டு மாதங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால், பொதுமக்களுக்குப் பல்வேறு வகையான சேவைகளை வழங்கும் சமூக சேவைகள், கிராம அபிவிருத்தி அலுவலர் போன்ற பதவிகளுக்கு நியமனம் வழங்குவதில் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு தாமதம் செலுத்துகின்றது.”

இந்தப் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதால், வேறு பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் பதில் கடமைச் சேவைகளை ஆற்றி வருகின்றனர். ஓர் அலுவலர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கடமையாற்றுவதால் அவர்களுக்கும் வேலை நெருக்கடி அதிகரிப்பதோடு, பொதுமக்களும் தமது தேவைகளை மேற்கொள்வதற்கு நீண்ட நாள்கள் அலைய வேண்டியுள்ளது எனச் சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டினர்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் இது குறித்துத் தெரிவிக்கையில், ஒவ்வொரு திணைக்களங்களும் குறித்த பதவிகள் தொடர்பாக ஆளணி தேவை என்று அறிவிக்கும் பட்சத்தில் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவானது இந்த நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைகளை நடத்தி, பரீட்சைப் பெறுபேறுகளைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குரிய அமைச்சுகளுக்கு அனுப்பி வைக்கும். அந்தந்த அமைச்சுக்களே நியமனங்கள் தொடர்பாகத் தீர்மானிக்கும்-என்றார்.

(த-ரி-9)

## புதுக்குளம் ம.வியின் இசைத்தட்டு வெளியீடு நாளை

வவுனியா, ஜூலை 23

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இசைத் தட்டு வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ச.சுபாஸ்கரன் தலைமையில் இடம்பெறும்.

ஆசிரியர் கொன்சன்ரைன் நெறியாள்கையில் 6 பாடல்கள் இணைந்த பாடல் தொகுதியாக இந்த இறுவட்டு வெளியிடப்படுகிறது.

(த-402)

## 'அவள் ஒரு தனித்தீவு' நூல் அறிமுகம் நாளை

வவுனியா, ஜூலை 23

திருமலை கவிச்சுடர் சிவரமணியின் 'அவள் ஒரு தனித்தீவு' நூல் அறிமுக விழா வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகைமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும்.

நூல் அறிமுகவுரையை கவிச்சிகரம் கி.உதயகுமார் வழங்குவார். நூல் ஆய்வை தமிழ்மணி கே.கே.அருந்த வராஜா (மேழிக்குமரன்) வழங்குவார். ஏற்புரையை நூல் ஆசிரியர் கவிச் சுடர் சிவரமணி வழங்குவார்.

சிறப்பு நிகழ்வாக 'பேசாப்பொருள் பேசிடத் துணித்தால்' என்ற தலைப்பில் கவிஞர் வே.முல்லைத்தீபன் தலைமையில் கவியரங்கம் இடம்பெறவுள்ளது.

(த-402)

## யாழ்.பாடசாலை அதிபர்களுடன் நீதிபதி இளஞ்செழியன் சந்திப்பு

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களுடனான கலந்துரையாடலை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலைகளின் அதிபர்களைபங்கேற்கஅறிவிக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் [illegible] அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (த-9)

# முதிரைக் குற்றிகளை சேமமடுவில் கைப்பற்றிய ஓமந்தைப் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வவுனியா சேமமடுப் பகுதியில் வைத்து ஒருதொகை முதிரைக் குற்றிகளைத் தாம் கைப்பற்றினர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுங்கேணியிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படவிருந்த நிலையில், அவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

30வருடம் பழைமைவாய்ந்த மரங்களிலிருந்து அவை தறித்து எடுக்கப்பட்டவை எனக் கூறப்பட்டது.

அவற்றை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் வாகனத்துடன் இரு சந்தேகநபர் களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக ஏற்கனவே மரக் கடத்தல் தொடர்பான வழக்கு ஒன்று உள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கை விட்டு இராணுவம் உடன் வெளியேறவேண்டும்

## வலியுறுத்தி வவுனியாவில் இருந்து யாழ். வரை இளைஞர்கள் பேரணி





யாழ்ப்பாணம், ஜூலை 23
வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தி வடக்கிலுள்ள மாவட்டங்களின் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் தங்கியுள்ள இராணுவத்தினருக்கு எதிராக நேற்று முற்பகல் 9 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கிருந்து ஓமந்தை, திருவையாறு, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி, இயக்கச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் வழியாக காங்கேசன்துறையை அது சென்றடைந்தது.

இதன்போது பஸ்களில் பயணித்த இளைஞர்கள் ஒவ்வொரு இடங்களிலும் உள்ள இராணுவ முகாம்களுக்கு முன்னால் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச மற்றும் தனியார் நிலங்களில் தங்கியுள்ள இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் விடுதிகள், உணவகங்கள் போன்றவற்றை அகற்றுமாறும், தனியார் அரச நிலங்களிலிருந்து இராணுவத்தினர் உடனடியாக வெறியேற வேண்டும் எனவும் அவர்கள் கோசம் எழுப்பினர்.

'காணிப் பிரச்சினையில் அரசியல் நாடகம் வேண்டாம்', 'இராணுவம் ஆக்கிரமித்த காணியை உடனடியாக விடுதலை செய்', 'வடக்கில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள இடங்களிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும்', 'தெற்கில் ஜனநாயகம் வடக்கில் இராணுவம்', 'பாடசாலைக்கு முன்னால் படை முகாம் எதற்கு?', எமது நிலம் எமக்கு வேண்டும் போன்ற கோசங்களையும் எழுப்பியவாறு நூற்றுக்கணக்கான இளைஞர்கள், இளம் பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

'ஜனநாயகத்துக்கான வடக்கு இளைஞர்கள்' என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

எமது வாழ்வாதாரத்தின் ஆதாரமாக இருந்த நிலங்களில் இன்று இராணுவத்தினர் விவசாயப் பண்ணையையும், விலங்கு வேளாண்மையையும், வியாபார நிலையங்கள், உல்லாச விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் எனப் பல்வேறு வியாபார நிலையங்களையும் அமைத்துள்ளனர். இதனால் எமது பொருளாதாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

எனவே காணி தொடர்பான முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளில் தேவையான நடவடிக்கைகளை இனியும் காலம் தாமதிக்காது முன்னெடுப்பதன் ஊடாக எமது நிலம் எமக்கே கையளிக்கப்படல் வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசைக் கோரியுள்ளனர். (த-4-402)

# தேசிய தமிழ்த்தினப் போட்டியில் வடக்குக்கு 25 தங்கப் பதக்கங்கள்

## 8 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட மொத்தம் 36 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் வடக்கு மாகாணம் 25 தங்கப் பதக்கங்களும், 8 வெள்ளிப் பதக்கங்களும், 3 வெண்கலப் பதக்கங்களுமாக 36 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

50 வகையான போட்டிகளில் இந்தப் பதக்கங்களை மாணவர்கள் பெற்றுள்ளதாக மாகாணக் கல்வித்திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு கல்வி அமைச்சில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கில் வென்ற மாணவர்கள் மற்றும் பாடசாலைகள் வருமாறு:-

**கட்டுரை வரைதல் பிரிவு - 2**
மூன்றாம் இடம் - அ.டேனுஜா (வவுனியா தெற்கு கனேஸ்வரா மகா வித்தியாலயம்)

**கட்டுரை வரைதல் இலக்கிய நயத்தல் பிரிவு 4**
முதலாம் இடம் - க.சங்கவி (வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் பிரிவு 5**
இரண்டாம் இடம் - பீ.மேரிசிந்துஜா (தென்மராட்சி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

**இலக்கணப் போட்டி பிரிவு - 4**
இரண்டாம் இடம் - பா.காருண்யா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**பிரிவு - 5**
மூன்றாம் இடம் - இ.துவாரகன் (கிளிநொச்சி ம.வி)

**திறனாய்வுப் போட்டி பிரிவு - 5**
முதலாம் இடம் - சி.வர்ணிகா (யாழ். மகாஜனக் கல்லூரி)

**குறுநாடக ஆக்கம் பிரிவு - 4**
முதலாம் இடம்- ஜெ.அனுராதை (யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் ம.வி)

**கவிதை ஆக்கம் பிரிவு - 4**
முதலாம் இடம் - ச.டிலக்சி (வவுனியா வடக்கு நெடுங்கேணி ம.வி)

**சிறுகதை ஆக்கம் பிரிவு - 4**
முதலாம் இடம் - இ.பிரியங்கா (துணுக்காய் யோகபுரம் ம.வி)

**பிரிவு - 5**
முதலாம் இடம் - வ.துஷாளினி (வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் பாடசாலை)

**வாசிப்பு பிரிவு - 1**
மூன்றாம் இடம் - சூ.தர்சிகா (கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தி.)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு - 1**
முதலாம் இடம் - வி.கிருசானி கௌரி(மடு ஆண்டாங்குளம் றோ.க.த.ம.வி)

**பேச்சு பிரிவு - 2**
முதலாம்இடம் -ஷா.திலக்ஷாயினி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**பிரிவு - 3**
முதலாம் இடம் - கே.கிரேசன் (பளை மத்திய கல்லூரி)

**பிரிவு - 4**
இரண்டாம் இடம் - உ.விதுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**பிரிவு - 5**
முதலாம் இடம் - க.பிரகான்(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**பாவோதல் பிரிவு - 2**
இரண்டாம் இடம் - மு.ஹரிணி (மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

**பிரிவு - 4**
இரண்டாம் இடம் - சு.ஸாண்டிகா (மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

**இசையும் அசைவும் பிரிவு - 1**
முதலாம் இடம் - அ.கவிநயா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

**இசை தனி-பிரிவு - 3**
முதலாம் இடம் - சி.சிவாம்சன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**இசை தனி பிரிவு - 4**
முதலாம் இடம் - வி.சஞ்சித் (ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு - 5**
இரண்டாம் இடம் - ஸ்ரீ பிறேமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**இசை குழு - I**
முதலாம் இடம் - வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி

**இசை குழு - II**
முதலாம் இடம் - யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**நடனம் பிரிவு - 2**
இரண்டாம் இடம் - ச.ஜோ எல்ஜெலிடா (இராமநாதன் கல்லூரி)

**பிரிவு - 3**
முதலாம் இடம் - பி.நிவேதனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - 4**
முதலாம் இடம் - ர.சங்கவி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**நடனம் பிரிவு - 5**
முதலாம் இடம் - அ.சாகித்திய கருமாரி (இணுவில் இந்துக் கல்லூரி)

**நடனம் குழு - I**
இரண்டாம் இடம் - வவுனியா தெற்கு இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை

**நாட்டிய நாடகம் (ஆடல்கதை-திறந்த போட்டி)**
முதலாம் இடம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி

**நாட்டார் பாடல் -திறந்த போட்டி**
முதலாம் இடம் - வவுனியா தெற்கு தமிழ் மத்திய ம.வி

**மேடை நாடகம்-திறந்த போட்டி**
முதலாம் இடம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**வில்லுப்பாட்டு-திறந்த போட்டி**
முதலாம் இடம் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

**விவாதம் - திறந்த போட்டி**
முதலாம் இடம் - யாழ்.இந்துக் கல்லூரி

**தமிழறிவு வினாவிடை-திறந்த போட்டி**
முதலாம் இடம் - முத்துத் தம்பி மகா வித்தியாலயம்

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு வி.பிரிவு -1**
முதலாம் இடம் - செதுமி நிகின்சா லியனபத்திரன (வவுனியா தெற்கு பரக்கும் ம.வி.) (த-4-422)

### இன்று மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மின் தடை நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் பரந்தன், பூநகரி, முரசு மோட்டை, தருமபுரம், விசுவமடு, தேராவில், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், ஆனையிறவு உப்பளம், இயக்கச்சி 12 ஆவது வி.ஐ.ஆர்., இயக்கச்சி நவஜீவனம் பாம், 683 ஆவது படைப்பிரிவு முகாம், 681 ஆவது படைப் பிரிவு முகாம், 68 ஆவது படைப் பிரிவு முகாம், எஸ்.எல். என்,எஸ். வட்டுவாகல், முல்லைத்தீவு நகரம், உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு கச்சேரி, சூல்மான் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, சி.இ.சி.பி. ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (த-ரி)

### வடக்கில் 120 இடங்களில் சோலர் மின்விளக்குகள்

மின்வெளிச்சம் இல்லாத மயானங்கள் உட்பட மின் வசதி வழங்கப்படாத கிராமங்களின் முக்கிய இடங்களில் சூரிய ஒளியிலான (சோலர்) விளக்குளைப் பொருத்துவதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மாகாணத்தில் 120 இடங்களில் இந்த மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. அவற்றில் யாழ். மாவட்டத்தில் உள்ள 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 33 சோலர் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, நெடுந்தீவு, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பத்து பிரதேச சபைகளிலும் சாவகச்சேரி நகர சபையிலும் மொத்தம் 33 சூரிய மின்கல விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

பெரும்பாலான சூரிய மின்கல விளக்குகள் பொது மயானங்களிலும் ஏனையவை மின் விநியோகம் வழங்கப்படாத பகுதிகளில் உள்ள சந்திகளிலும் பொருத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் தனங்களப்பு வீதி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் இந்து மயானம், கல்வயல் - வாகையடி வீதி ஆகிய இடங்களிலும், சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பகுதியில் கைதடி சிறுவர் பூங்கா, கைதடி ஊத்தல் மயானம், வேம்பிராய் இந்து மயானம், தச்சன்தோப்பு நாவற்குளி சந்தி ஆகிய இடங்களிலும் சோலர் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரிய மின்கல விளக்குகள் பொருத்தும் பணிகள் தனியார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் விசாரணையில்

## தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பில்



கொழும்பு, ஜூலை 23

றக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை தொடர்பில் நாரஹேன்பிட்டிப் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியின் தொலைபேசி ஆய்வுத் தகவல்களுக்கு அமைய, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பல உத்தியோகத்தர்களைத் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதனைவிட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள மிகமுக்கிய இராணுவ அதிகாரியாகக் கருதப்படும் உதய நந்தன நாகஹ வத்த ஆராச்சி தொடர்பிலும் விசாரணைகள் தொடர்வதாகவும், அவரைப் பலமுறை விசாரணை செய்ததாகவும் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

வசீம் தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த சில்வா முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. மேலதிக விசாரணை அறிக்கை ஊடாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதப் படுகொலைகள் தொடர்பான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரவீந்திர விமலசிறி இந்த விடயங்களை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட நாரஹேன்பிட்டிப் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது அரசின் சிரேஷ்ட சட்டவாதி டிலான் ரத்நாயக்கவுடன் வந்திருந்த விசாரணையாளரான குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதப் படுகொலைகள் தொடர்பான பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரவீந்திர விமலசிறி மேலதிக விசாரணை அறிக்கையை நீதிவான் நிஸாந்த பீரிஸிடம் கையளித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

'புதிய சீ.சீ.ரி.வி. காணொளிகள் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி நீதிமன்றில் பெற்றுக் கொண்ட உத்தரவு அன்றைய தினமே பொலிஸ் சீ.சீ.ரி.வி. பிரிவின் பதில் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கம்லத்திடம் கையளிக்கப்பட்டது.

அதன்படி அப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் 2012.05.16 ஆம் திகதி இரவு 11 மணி முதல் 2012.05.17 அதிகாலை 2 மணிவரையிலான சீ.சீ.ரி.வி. காட்சிகளைச் சமர்ப்பித்துள்ளார்.

கிருலப்பனை ஹைலெவல் வீதி, பேஸ்லைன் வீதியில் பொலிஸ் சீ.சீ.ரி.வி. பிரிவின் கட்டுப்பாட்டில் பொருத்தப்பட்டுள்ள கமெராக்களில் இருந்தும் நாரஹேன்பிட்டி சந்தியில் பொருத்தப்பட்டுள்ள கமெராக்களின் பதிவுகளிலும் இருந்த காட்சிகள் கடந்த 11 ஆம் திகதி 10 இறுவட்டுக்களாகக் கிடைத்தன.

இந்த நிலையில் முன்னர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் இருந்து நாம் கைப்பற்றிய 4 தெளிவற்ற சீ.சீ.ரி.வி. சாட்சிகள் அடங்கிய சீ.டி.க்கள், தற்போது கிடைத்துள்ள காணொளிகளை ஆய்வுக்காகக் கனடாவின் நிறுவனத்துக்கு அனுப்பும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாகக் கடந்த 13ஆம் திகதி கனடா தூதரகத்துக்கு இந்த சீ.சீ.ரி.வி. காணொளிகளை ஆய்வுக்கு கொண்டு செல்லும் இரு புலனாய்வு அதிகாரிகளும் அழைக்கப்பட்டு விசா தொடர்பில் நேர்முகப் பரீட்சையும் இடம்பெற்றது.

எனினும் இதுவரை விசா கிடைக்கவில்லை. பிரிட்டன் நிறுவனமோ காணொளிகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுகளுக்காக சமர்ப்பிக்கக் கோரியுள்ளது.

இதனைவிட இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற போது நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் டேனியல் பெரேராவின் கையடக்கத் தொலைபேசிக்கு உள்வந்த வெளிச்சென்ற அழைப்புக்கள் தொடர்பில் நாம் சூட்சும விசாரணைகளை முன்னெடுக்கிறோம். இதனுடன் தொடர்புபட்டதாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் நான்கு பொலிஸாரிடம் விசாரணைகளை செய்துள்ளோம். சார்ஜன்ட் தர அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலமும் பெறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் தீர்மானமிக்க அதிகாரியாக செயற்பட்டுத் தற்போது ஓய்வு பெற்றுள்ள முக்கிய இராணுவ அதிகாரியான உதய நந்தன நாகஹவத்த தொடர்பிலும் விசாரணைகள் தொடர்கின்றன.

அவரைக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து தொடர்ந்து விசாரணை செய்து வருகிறோம். ஆகவே சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கக் கோருகிறோம் என அவ்வறிக்கையில் கோரப்பட்டிருந்தது.

இதனையடுத்து கருத்துக்களை முன்வைத்த அரசின் சிரேஷ்ட சட்டவாதி டிலான் ரத்நாயக்க மேற்படி விடயங்களை மேலோட்டமாக சுட்டிக்காட்டி, சந்தேகநபர்களுக்கு எதிராகத் தண்டனை சட்டக் கோவையின் 32 ஆம் அத்தியாயத்துடன் இணைந்து பேசப்படும் பிரிவுகளின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளதால் பிணை கோரினால் அதனை நிராகரிக்க வேண்டும் என கூறினார்.

இதனையடுத்து முதலாவது சந்தேக நபரான சுமித் சம்பிக்க பெரேராவின் சட்டத்தரணி அஜித் பத்திரன தனது கருத்துக்களை முன்வைத்தார்.

எனது சேவை பெறுநர் தொடர்பில் நான் மேல் நீதிமன்றில் பிணை மனுதாக்கல் செய்துள் ளேன். பொலிஸார் தாக்கல் செய்த முதல் பீ அறிக்கையிலோ அல்லது ஏனைய விசாரணை அறிக்கையிலோ, எனது சேவை பெறுநர் இந்த விவகாரத்தில் நேரடியாகவோ மறை முகமாகவோ தொடர்புபட்டார் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

தான் ஏன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிந்துகொள்ளும் உரிமை எனது சேவை பெறுநருக்கு உள்ளது. அதனால் அதனையேனும் இந்த மன்று வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் எனது சேவை பெறுநர் அதீத நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே அவருக்கான வைத்திய சிகிச்சைகளுக்கு உத்தரவிட வேண்டும் - என்றார்.

2 ஆவது சந்தேக நபரான அநுர சேனநாயக்கவும் மேல் நீதிமன்றில் பிணை மனுத்தாக்கல் செய்துள்ளதாக நீதிவானுக்கு அறிவித்தார்.

இந்த நிலையில் இலங்கை வைத்தியச் சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தாஜுதீனின் முதல் பிரேதப் பரிசோதனை விசாரணைகளை முன்னெடுத்த மருத்துவர் ஆனந்த சமரசேகர, அவரது இரு உதவியாளர்களுக்கும் எதிரான விசாரணை தொடர்பில் விளக்கம் கோரப்பட்டது. அந்த விசாரணைகள் வைத்திய சபையின் நியமங்களுக்கு அமைவாக உரிய சட்டவாதிகளின் பிரகாரம் இடம்பெறுவதாக நீதிவானுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அவ்விசாரணைகளைத் துரிதப்படுத்த ஆலோசனை வழங்கிய நீதிவான் அந்த விசாரணை அறிக்கை மேலதிக விசாரணையில் தாக்கம் செலுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க தனக்கு அதிகாரம் இல்லை எனக் குறிப்பிட்ட நீதிவான் நிசாந்த பீரிஸ், மேல் நீதிமன்றை நாடி பிணை தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்து விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அதுவரை சந்தேகநபர்களை இது வரையும் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (த-4)

# இந்திய உயர்மட்டக் குழு ஓகஸ்ட் 10 இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 23

இந்திய மத்திய அரசின் உயர் மட்டக் குழுவினர் அடுத்த மாதம் 10ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றனர்.

அரசின் அழைப்பின் பேரில் வரும் இந்த உயர்மட்டக் குழுவினர் 3 நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பதுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளனர்.

அடுத்த மாதம் 11ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மனித வள உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கிலேயே தகவல் தொழில்நுட்ப, உள்ளூராட்சி நிர்வாகம் மற்றும் நகர அபிவிருத்தி மத்தியமைச்சர் கே.ரி. ராம ராவ் தலைமையிலான குழுவினர் இலங்கை வருகின்றனர்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து அரசு மனித வள உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக வங்கியின் பணிப்பாளர் கலாநிதி அமிட்றோர் ஆகியோர் இங்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளனர்.

இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவில் தீர்மானிக்கப்பட்ட உத்தேச பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பக் கூட்டு ஒப்பந்தம் குறித்து இந்திய மத்தியரசின் உயர் மட்டக் குழுவினர் அவதானம் செலுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# நல்லாட்சி அரசுக்கு எதிரான பேரணி வரலாறு படைக்கும்

## கூட்டு எதிர்க்கட்சி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23

நல்லாட்சி அரசுக்கு எதிரான கொழும்பு நோக்கிய எதிர்ப்புப் பேரணி வரலாறு படைக்கும். பொது மக்கள் பல லட்சம் பேர் மகிந்த ராஜபக்ச தலைமையில் ஒன்றிணைந்து புது யுகத்துக்கான சரித்திரம் படைப்பார்கள் எனக் கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்தது.

கண்டியில் இருந்து கொழும்பை நோக்கிய இந்த எதிர்ப்புப் பேரணி குறித்து ஏற்பாட்டுக் குழு உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது:-

நாட்டை நேசிக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அரசுக்குள் இருந்துகொண்டு செய்வதறியாதுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான பக்தர்கள் வெளியில் வர வேண்டும். அனைத்து அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களைத் தாண்டி கூட்டு எதிர்க்கட்சி மிக விரைவில் வெற்றி இலக்கை அடையும்.

எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை கண்டி தலதா மாளிகையில் விசேட வழிபாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதில் மகிந்த உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்வர்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்குக் கண்டி தலதா மாளிகைக்கு முன்பாகக் கொழும்பை நோக்கிய பேரணி ஆரம்பிக்கப்படும். முதலாம் ஆம் திகதி கிரிபத்கொடையில் இருந்து கொழும்பை நோக்கி கூட்டு எதிர்க் கட்சியின் பேரணி செல்லும். அன்று கொழும்பில் கூட்டம் ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

6 விடயங்களை மையப்படுத்தி இந்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்படுகின்றது. புதிய அரசமைப்பில் நாட்டுக்கு எதிரான சதி, தேர்தல் ஒத்திவைப்பு, வரி அதிகரிப்பு, இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம், விவசாயிகளுக்கான மானிய ரத்து மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் ஆகியவற்றுக்கு எதிராகவே கூட்டு எதிர்க்கட்சி எதிர்ப்புப் பேரணியை நடத்துகின்றது - என்றார். (த-4)

# மலேசியச் சிறைகளில் உள்ள இலங்கையர் குறித்து பேச்சு

கொழும்பு, ஜூலை 23

மலேசியச் சிறைகளில் உள்ள இலங்கையர்களை நாடுகடத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்படும் என்று, இலங்கை வந்துள்ள மலேசிய உள்துறை அமைச்சரும் உதவிப் பிரதமருமான அஹமட் சாஹிட் ஹிமிடி தெரிவித்தார்.

குடிவரவுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 50 இலங்கையர்கள் மலேசியாவில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது தொடர்பில் இலங்கை அதிகாரிகள், மலேசிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். இந்த விடயம் எனது கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நிலையில், இது குறித்து ஆலோசிக்கவுள்ளதாக அஹமட் சாஹிட் ஹிமிடி மேலும் கூறினார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்கள் எண்ணிக்கை விரைவில் 255 ஆக உயரும்

## ஒரு கட்சி தனித்து ஆட்சியமைக்கத் தற்போதுள்ள முறை சிக்கலானது என்கிறார் அமைச்சர் டிலான்

கொழும்பு, ஜூலை 23
225ஆக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 ஆக அதிகரிப்பதற்கான தேவை ஒன்றுள்ளது. பெரும்பான்மை ஆட்சிப் பலத்துடன் ஒரு கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு, தற்போதுள்ள முறைமை சிக்கலானதாக உள்ளது. எனவே, இதனை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடு விரைவில் முன்னெடுக்கப்படும்.
நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:-
அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பிலான ஆலோசனையைப் பெறுவதற்கு நோர்வே நாட்டைச் சேர்ந்த வல்லுநர் ஒருவர் வந்திருக்கின்றார். அவர் இந்த விடயம் தொடர்பிலான ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார். ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பல நாட்டுச் சட்டங்கள் தொடர்பிலான அறிவை அவர் பரந்தளவில் கொண்டுள்ளார். அவருடைய



கருத்தும் இந்த அரசமைப்பினுள் உள்வாங்கப்படவுள்ளது.
தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்வு ஆகிய இவ்விரண்டு தேர்வு முறைகளின் மூலமும் 50 சதவீதமான தெரிவு முறைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம். விகிதாசாரமோ, தொகுதிவாரியோ தனித்து நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.
காணமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கான அலுவலகமொன்று அமைக்கப்படுவதானது ஓர் அறிக்கை மாத்திரமே. அது சட்டமாக்கப்படவில்லை. குறித்த அலுவலகத்தினால் தேசத்தின் பாதுகாப்புக்குக் குந்தகம் என அறியப்படுகின்ற பட்சத்தில், உயர் நீதிமன்றம் அதில் தலையிடும்.
குழப்பகரமான அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தற்போதைய அரசு, ஒப்பந்த முறையில் அமைக்கப்பட்ட அரசு எனவும் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.
ஆனால், குறித்த சீர்திருத்தக் குழுவுக்குள், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.
ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒப்பந்த முறையான ஆட்சியைச் செய்யவில்லை. நாங்கள் வெளிப்படையான முறையில் ஒப்பந்தங்களை மேற்கொண்டே ஆட்சியமைத்தோம்-என்றார். (த-4)

## எட்கா குறித்து கலந்துரையாடல் ஓகஸ்ட்டில்

கொழும்பு, ஜூலை 23
எட்கா உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.
எட்கா உடன்படிக்கை தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
குறித்த கலந்துரையாடல்கள் டிசெம்பர் மாதமளவில் நிறைவடையும். எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார். (த-4)

## மிக அதிகளவான கொக்கேயின் முதல்முறை கொழும்பில் மீட்பு

கொழும்பு, ஜூலை 23
இலங்கையில் முதற் தடவையாக மிக அதிகளவாக 274 கிலோகிராம் கொக்கேயின் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது பிரேசிலிலிருந்து போர்த்துக்கல் ஊடாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
பேலியகொடைப் பகுதியில் உள்ள சீனிக் களஞ்சியசாலை ஒன்றிலிருந்து நேற்றுமுன்தினம் இது மீட்கப்பட்டுள்ளது.
பேலியகொடை நுகே வீதியில் அமைந்துள்ள சீனிக் களஞ்சியசாலையில் சந்தேகத்துக்குரிய வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கொள்கலன்களில் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடத்திய சோதனையில் குறித்த கொக்கேயின் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.சில வாரங்களுக்கு முன்னரும் சீனிக் கொள்கலனுக்குள் இருந்து கொக்கேயின்போதைப்பொருள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# ரவிராஜ் கொலை வழக்கில் 6 பேர் மீது குற்றப் பத்திரம்

கொழும்பு, ஜூலை 23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கில் 6 எதிரிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்தார்.
நடராஜா ரவிராஜ் மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலராக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் லக்ஸ்மன் ஆகியோரைப் படுகொலை செய்த விவகாரம் தொடர்பில் கடற்படை அதிகாரிகள் மூவர் உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
பழனிச் சாமி சுரேஷ், ஹெட்டியாராச்சிகே பிரசாத் சந்தன குமார, காமினி செனவிரத்ன, பிரதீப் சமிந்த, சரண் எனப்படும் சிவகாந்தன் விவேகானந்தன், பெபியன் வொய்ஸ்டன் டூசைன் ஆகியோருக்கு எதிராகவே சட்டமா அதிபரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக் கோவையின் விதிவிதானங்களுக்கு அமைவாக இந்தக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய சார்பில் கொழும்பு மேல் நீதிமன்றின் முதலாம் இலக்க விசாரணை அறையின் நீதிபதி மணிலால் வைத்தியதிலக முன்னிலையில் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய இந்தக் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.
இது தொடர்பிலான விசாரணைகளை நீதிமன்று மேற்கொள்ளவுள்ளது.
(த-4)



## அதிகளவு மதுப் பாவனை இலங்கை முன்னணியில்

கொழும்பு, ஜூலை 23
மதுபானம் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது என இலங்கைப் போதை ஒழிப்பு மகா சபையின் செயலாளர் சாக்கியா நாணயக்கார தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
நாட்டிலுள்ள ஒரு கிராமிய சேவைப் பிரிவு ஒரு வருடத்துக்கு 15 மில்லியன் ரூபாவைச் செலவு செய்கிறது.
நாட்டை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்தவேண்டிய பெரும் நிதி இதன் மூலம் வீணடிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு உடன் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.
நாட்டிலுள்ள 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்யக் கூடாது என்ற சட்டம் காணப்படுகின்ற பேதிலும், அது உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.
மதுபானம் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது-என்றார். (த-4)

# ஐ.தே.கவுடன் செய்த ஒப்பந்தம் மூலமே பசிலுக்கு விளக்கமறியல்

## பின்னணியில் அமைச்சர் ஒருவர்

கொழும்பு, ஜூலை 23
ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் ஒன்றுக்கு அமையவே முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
பாரதூரமான பல்வேறு ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் இருக்கும் நிலையில், திவிநெகும திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்று மோசடி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ் பசில் ராஜபக்ச அண்மையில் கைது செய்யப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
அரசின் முக்கிய அமைச்சர் ஒருவருக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் அண்மையில் சினமன் லேக் ஹோட்டலில் உள்ள வி.ஐ.பி. அறையொன்றில் முக்கிய சந்திப்பு நடந்துள்ளது. சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், பிரதமருக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கூறப் படுகின்றது.
இந்தச் சந்திப்பின்போது ஏற் படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையிலேயே பசில் ராஜபக்சவைக் கைது செய்வதற்கானசூழல் உருவாக்கப்பட்டுள்ளது.
பசில் ராஜபக்சவுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான பின்னடைவு, கூட்டு எதிர்க்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் மீது இருக்கும் வெறுப்பைச் சரி செய்து, மக்கள் அவருடன் இருக்கின்றனர் என்பதன் காரணமாகவே அரசு அவரைக் கைது செய்தது என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும் என்றதிட்டத்தைச்செயற்படுத்தும் நோக்கில் இந்தக் கைதுச் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதற்குப் பிரதியுபகாரமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து, அதனைப் பலவீனப்படுத்தி, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையான வகையில் அதிகாரத்தைச் செயற்படுத்தும் சூழலை உருவாக்கித் தரவேண்டும் என அரசின் அமைச்சர், பசில ராஜபக்சவிடம் கேட்டுள்ளார்.



பசில் ராஜபக்சவுக்கு எதிராகப் பாரியளவிலான ஊழல், மோசடிகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் இருக்கும் நிலையில், அவரை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பிணையில் விடுவிக்க வேண்டிய தேவைக்கு அமையவே இவ்வாறு சிறிய குற்றச்சாட்டுச் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பேரினவாதம் இந்த நாட்டில் இருந்து அகலுமா என்ன?

வடக்கு மாகாணத்தில் மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக, மத்திய அரசு, வடக்கு மாகாண சபையைப் புறக்கணித்து, தனது எதேச்சாதிகாரத்தை மேலுயர்த்தி உள்ளது!

அதன் கபட நோக்கம், வடக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்குவதே என்பது, நூற்றுக்கு நூறுவீதம் அப்பட்டமாகப் புலப்படுகிறது.

இந்த விவகாரத்தை, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அக்குவேறு, ஆணி வேறாகப் பிய்த்துக் காட்டி உள்ளார்.

மத்திய அரசின் மீள் குடியேற்றத்துக்கான செயலணியில், வடக்கு மாகாண சபையை உள்வாங்கி ஆக வேண்டும் என்று மாகாண சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

அச்சா. சொல்ல வேண்டிய எந்த விடயத்தையும், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நிலை நின்று வெளிப்படுத்தியாக வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை மட்டுமன்றி, இந்தியாவில் (தமிழகத்தில்) இருந்து வரும் வடக்கு மக்களையும் விரைந்து மீளக் குடியமர்த்த அரசு வகை செய்தாக வேண்டும்.

மீள் குடியேற்ற நடவடிக்கை, கொழும்பு அரசுக்கு மட்டும் உருத்து ஆனதல்ல. மாகாண அரசின் ஆதரவுடனும், அதன் பங்களிப்புடனும், ஆற்றப்பட வேண்டிய முக்கிய பணியாகும் அது.

இந்த நிலைப்பாடு, கொழும்பு அரசுக்குத் தெரியாத, தெரிந்திராத ஒன்று அல்லவே.

ஆகையால், அரசமைப்புக்கான பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், மாகாண சபைக்கு, குறித்து ஒதுக்கப்பட்ட விடயங்களில் நடுவண் - கொழும்பு அரசு, மாகாண சபையுடன் கலந்து ஆலோசித்தே நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால், கொழும்பு அரசு, தனது போக்கில் செயற்பட்டு, மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்களைத் தானே விழுங்கிக் கொண்டு சர்வாதிகாரத்தை மேலுயர்த்தும் போக்கு மேலெழுகிறது.

அதுவும் ஒருவகை சார்ந்த சர்வாதிகாரமே. நல்லாட்சி அரசு இத்தகைய சின்னத்தனங்களை, தனது கொள்கையாகக் கொண்டிருப்பின் முந்தைய கொழும்பு அரசுகளின் அண்ணன் தம்பி என்ற நிலையே மினுங்கித் தெறிக்கிறது.

அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் அண்ணன் தம்பி. அந்தக் கட்டிலில் ஏறிய பின்னர் நீ யாரோ, நான் யாரோ என்ற மெத்தனப் போக்கு.

ஆகாயம் கீழே இறங்கி,பூமி மேலே எழுந்தாலும், பேரினவாதிகள் திருந்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாதே...!

எஸ்.ரி.ஆர்

இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வையும், நல்லிணக்கத்தையும் உருவாக்கி இந்த நாட்டில் வாழும் சகல இனமக்களையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை நல்லாட்சி செய்யப் போவதாகக் கூறிப் பதவிக்கு வந்த இன்றைய அரசு, தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் இழுத்தடிப்பை மேற்கொண்டு வருவதாக உணரப்படுகிறது.

அந்தவகையில், இந்த நாட்டில் தமிழர்களது வாழ்வில் பெரும் திருப்பமொன்றை உருவாக்கி இனங்கள் மத்தியில் நிரந்தரப் பிளவை ஏற்படுத்திய சம்பவமாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் அமைந்தது.

1983ஆம் ஆண்டின் ஜூலை மாதம் ஈழத்தமிழர் வாழ்க்கையில் பெரும் திருப்பமொன்றை ஏற் படுத்திய மாதமாக அமைந்து விட்டது. ஈழத்தமிழர்களது போராட்ட வரலாற்றின் ஓட்டத்துக்கு ஒரு உத்வேகதத்தை உருவாக்கிய சம்பவங்கள் 1983 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்திலேயே இடம் பெற்றுள்ளன.


குட்டிமணி

**பேரினவாதத்தின் கோர முகம்**

சாத்வீக வழியிலான தமிழரின் விடுதலைப் போராட்டம் இந்த நாட்டின் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரப் போவதில்லை என்ற உண்மை உணரப்பட்ட நிலையில் உரிமைகளைப்பெற்றுக்கொள்ள இளைய சமுதாயத்தினர் ஆயுத மேந்திய விடுதலை அமைப்பாக ஒன்றுதிரண்ட காலகட்டம் அது.

அப்போதைய அரசுத்தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எவ்வாறாயினும் தமிழ் மக்கள் மத்தியில் முளைவிட்டு வளர்ந்த சுதந்திர உணர்வை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் எனத்திட்டம் தீட்டினார். அவருக்கு உதவியாகச் சிங்களக் கடும் கோட்பாட்டாளர்களான சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்க போன்றோரும் அரசில் அங்கம் வகித்து வந்தனர்.

இலங்கை அரசியல்போக்கையே திசைதிருப்பி, இனவாதத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்திய சாணக்கியரான ஜே.ஆரும் அவரைச் சூழ இருந்த இனவாத கடும் கோட்பாளர்கள் கூட்டமும் திட்டமிட்டு உருவாக்கியதே 1983 ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரம் .


தங்கத்துரை

தமிழின விடுதலை வேட்கையுடன் ஒன்று திரண்டு அரசுக்கெதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற தமிழ் இளைஞர்களைக் குறிவைத்து, வேட்டையாட அரச படைகளை ஜே.ஆர் ஏவிவிட்ட நிலையில், விடுதலை வேட்கை மிக்க தமிழ் மறவர்கள் மறைந்திருந்து தாக்கி அழிக்கும் 'கெரில்லா' போர் உத்தி மூலம் இராணுவத்துக்கு அடிக்கடி இழப்புக்களை ஏற்படுத்திவந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டம் அது.

**சாள்ஸ் அன்ரனியின் இழப்பு**

1983 ஜூலை மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு ஒன்றின் போது சாவகச்சேரி மீசாலையில் விடுதலைப்புலிககளின் உறுப்பினர்களான சீலன் எனப்படும் லூக்கஸ் சாள்ஸ் அன்ரனி மற்றும் இராமநாதன் அருள்நாதன் ஆகிய இரு போராளிகள் வீர மரணத்தைத் தழுவ நேரிட்டது. இவர்களில் சீலன் எனப்பட்டவரான சாள்ஸ் அன்ரனி திறமையும் துணிவும் மிக்கதொரு போராளியாகத் திகழ்ந்தவர். சாள்ஸ் அன்ரனியின் இழப்பு விடுதலைப் புலிகள், அமைப்பைப் பொறுத்தவரை பேரிழப்பாகக் கருதப்பட்டது.

சாள்ஸ் அன்ரனியின் மரணத்துக்குப் பழிக்குப் பழிவாங்கும் முயற்சியாகத் திட்டமிடப்பட்டதே 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி நள்ளிரவு திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அதிரடித் தாக்குதல் ஆகும்.சுதந்திர இலங்கையின் வரலாற்றின் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஒரே தடவையில் 13 இராணுவத்தினரின் உயிர் பறிக்கப்பட்ட முதலாவது சம்பவமாக இது அமைந்தது.

குறித்த தாக்குதல்களில் 12 இராணுவத்தினர் உயிரிழந்திருந்தனர். காயங்களுடன் ஒருவாறு பதுங்கி மறைந்துகொள்ள முடிந்த மூன்று இராணுவத்தினரில் இருவர் கடும் காயமுற்றி ருந்தனர். அதேவேளை, விடுதலைப் புலிகள் தரப்பில் மிக முக்கிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குத் தலைக்குனிவை ஏற்படுத்திய கறுப்பு ஜூலை

உறுப்பினரான செல்லக்கிளி அம்மான் இராணுவத்தினரின் பதில் தாக்குதலில் வீரமரணமெய்த நேர்ந்தது. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உயிரிழந்த 12 இராணுவத்தினரின் சடலங்களுடன், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், உயிரிழந்த மற்றொரு சிப்பாயின் சடலத்தையும் மற்றும் காயங்களுடன் உயிர்தப்பிய இரு இராணுவத்தினர் ஆகியோரையும் அடுத்த நாள் ஜூலை 24 ஆம் திகதி கொழும்புக்குக் கொண்டு செல்ல எடுத்த தீர்மானத்தால் நாட்டில் பெரும் கலவரம் ஒன்று உருவாக இடமேற்பட்டது.

இந்த உண்மையில் அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடே - என்பது அடுத்து இடம் பெற்ற சம்பவங்களின் மூலம் நிச்சயமாயிற்று. நாட்டில் சமநீதி, வாய்ப்பு, கௌரவம் வேண்டிப் போராட ஆரம்பித்த தமிழ் இளைஞர்களின் கரந்தடி நடவடிக்கைகளால் எரிச்சலும், ஆத்திரமும் கொண்டிருந்த அரச இயந்திரம் தான் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உளவியல் ரீதியாக, நாம் நிர்க்கதியானவர்கள்; அரசுக்கு எதிராகச் செயற்பட நினைத்தால் நாம் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம்; நாம் எப்போதும் சிங்கள பௌத்த ஆட்சியின் தயவில் வாழவேண்டிய இரண்டாம் தரப் பிரசைகள் என்ற எண்ணத்தை, அச்ச உணர்வை தமிழர்களது நெஞ்சில் பதியவைக்கும் நோக்கில் திட்டமிட்டு அரங்கேற்றிய நாடகமே - கலவரமே 1983 ஜூலைக் கலவரம் என்பதை உறுதி செய்வதற்கு கலவரம் இடம் பெற்ற சில நாள்களின் பின்னர் அரசுத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்களை உதாரணம் காட்ட இயலும்.


முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

**1983 ஜூலை 23 ஆம் திகதிய கறுப்பு ஜூலையின் 33 ஆண்டுகள் நிறைவு தினம் இன்றாகும்.**

83 ஜூலை 24 ஆம் திகதி வெடித்த இனக் கலவரத்தின் போது எத்தனையோ தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்து உடைமைகளைக் கொள்ளையிட்டும், தீயிட்டுக் கொளுத்தி நாசம் செய்தும், எத்தனையோ தமிழ்ப் பெண்களை மானபங்கப்படுத்தியும் மனிதத்துவத்தையே மறந்து மிலேச்சத்தனமான மிருகங்களாக மாறி கொடூரம் புரிந்தனர் சிங்களக் காடையர்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றும் பொறுப்புமிக்கப் பாதுகாப்புப் படையினரும் , பொலிஸாரும் காடையர்களைத் தூண்டி விட்டு ஊக்கமளித்து தமிழ் மக்களின் உயிர் உடைமைகளைச் சூறையாட வைத்ததைக் கண்டு உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்த போதிலும் ஆதரவு காட்ட முன்வரவில்லை.

கடைசியில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தமது விசேட தூதுவராக வெளியுறவு அமைச்சர் நரசிம்ம ராவ்வை அனுப்பிவைத்தார். தொடர்ந்து கலவரம் ஆரம்பித்த நாளிலிருந்து வாய்மூடி மௌனியாகப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

**காமினியின் கூற்று**

அதே விதத்தில் அன்றைய அரசில் அமைச்சராக இருந்த காமினி திஸநாயக்க தமிழர்களைத் தாக்கியவர்கள் சிங்களவர் தான் என்றாலும், அவர்களைக் காப்பாற்றியவர்களும் சிங்களவர்களே. தமிழர்களுக்கு உதவ இந்திய இராணுவம் இங்கு வரமுயன்றால் அவர்கள் வருவதற்கு முன்னரே தமிழர்கள் அனைவரையும் சிங்களவர்கள் ஒட்டு மொத்தமாக அழித்து விடுவர் எனப் பூச்சாண்டி காட்டிக் கருத்து வெளியிட்டார். இவை உதாரணங்கள் மட்டுமே. சிங்கள ஏகாதிபத்தியவாத, இனவாத போக்குக் கொண்ட அரசியல் வாதிகள் அத்தனைபேரும் 83 இனக்கலவரம் குறித்து மனம் வருந்தியதில்லை. மாறாக மமதையோடு வீரம் பேசவே செய்தனர். அதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் 54 பேரை மிலேச்சத்தனமாக சிங்களக் காடையர்கள் கசாப்புக்கடையில் மிருகங்களைக் கொலை செய்வது போல வெட்டியும் கொத்தியும் துடிக் கத்துடிக்க கொலை செய்ததன் பின்னணியில் அரசியல்வாதிகள் பலரும் சம்பந்தப்பட்டிருந்தாக செய்திகள் வெளிவந்தன. வெறும் ஒப்புக்கு இவைகளுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டபோதிலும், விசாரணைக்குழுவின் விசாரணைகளினால் கூட உண்மையைக் கண்டறிய முடிந்ததில்லை.

ஆனால், உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடந்திராத மிலேச்சத்தனம் வெலிக்கடையில் நிகழ்ந்தது. விசாரணைக் கைதிகளாக அடைபட்டிருக்கும் தாம் சாவுத்தண்டனை மூலம் இறக்க நேர்ந்தால் தமது கண்களை கண்பார்வையற்றோருக்கு தானமாக வழங்குவதன்மூலம் என்றோ ஒருநாள் விடுதலை அடையப் போகும் தமிழீழத்தைத் தம் கண்களால் பார்க்க விரும்புவதாகத் துணிச்சலுடன் நீதிமன்றில் கூறிய சுதந்திர உணர்வுமிக்க குட்டிமணி, தங்கத்துரை ஆகிய வீர இளைஞர்களின் வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காத சிங்கள மிலேச்சக் காடையர்கள் சந்தர்ப்பம் வாய்த்ததால் அவர்களைத் துடிக்கத்துடிக்க கொலை செய்ததோடு, அவர்களது கண்களை தோண்டி எடுத்து வெறி ஆட்டம் ஆடிய செய்தியைக் கேட்டு உலகமே ஒருகணம் அதிர்ச்சியுற்றது. இன்று நீண்ட 33 ஆண்டுகளின் பின்னர் அந்தக் கறுப்பு ஜூலையை நினைவு கூருகிறோம்.

## தொடரும் மாவடி வீதியின் அவல நிலை

10 வீடுகளின் கழிவு நீர் வெளியேறிச் செல்லும் வடிகால் உடைந்து காணப்படுவதற்கும், ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் வீதி சேதமடைந்திருப்பதற்கும் காரணம், இந்த வடிகால் மாநகர சபை ஊழியர்களினால் ஒழுங்காகச் சுத்தம் செய்யப்படாமையே. இந்த வாய்க்கால் வழியாக கழிவு நீர் மானிப்பாய் வீதியின் கிழக்குப் பக்கத்து பெரிய வடிகாலைச் சென்றடைய வேண்டும். சுத்தம் செய்யப்படாத காரணத்தினால் கழிவுநீர் ஒழுங்காக மானிப்பாய் வீதியின் குறுக்காகச் சென்று பெரிய வடிகாலை அடைவதில்லை.

ஒழுங்காகச் சுத்தம் செய்து பராமரிக்கப்படாத காரணத்தினால் கழிவு நீர் தேங்கி நிற்பதோடு, நல்ல தண்ணீர் கிணற்றடி ஞான வைரவர் கோயிலுக்கு முன்பாக வீதி மிகவும் பள்ளமாக இருப்பதால் கழிவு நீர் உடைப்பெடுத்து எல்லா இடங்களிலும் பரவுகின்றது.

கோயிலுக்கு முன்பாகச் செல்லும் வடிகால் சிமெந்து பாவித்து சீர் செய்யப்படவேண்டியதுடன், சிறிது உயர்த்தியும் கட்டப்பட வேண்டும். அத்துடன் அந்த வீதியும் உரிய முறையில் திருத்தப்பட வேண்டும். அப்போதுதான் மாவடி வீதியின் மேற்குப் பக்கத் தொங்கலில் நீர் தேங்கி நிற்காது சீராக வழிந்தோடும். அத்துடன் இன்னும் சில மாதங்களில் மழை காலம் ஆரம்பித்து விட்டால், நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனைச் சீர் செய்ய வேண்டியது யாழ். மாநகர சபை ஊழியர்களின் பொறுப்பாகும். அவரவர்கள் தத்தமது கடமைகளைச் சீராக நிறைவேற்ற வேண்டும். இதற்கு முன்னரும் இந்த விடயம் தொடர்பாக பல தடவைகள் தங்களுக்கு அறியப்படுத்தியுள்ளோம். எனினும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

வே.குமாரசாமி [illegible]
தலைவர், யாழ். கொட்டடி சுகாதாரக் குழு.

## வடமாகாண விவசாயிகள் பயன்பெறும் வகையில் எமது தலைவர்கள் செயற்படுவார்களா?

நீண்ட சர்ச்சைகளை ஏற்படுத்தி வந்த விவசாய பொருளாதார மையத்தை அமைக்க ஓமந்தையே பொருத்தமானது என பெரும்பான்மையான எமது தலைவர்கள் தீர்மானித்து இருந்தபோதிலும் தொடர்ந்தும் ஒரு சில அரசியல் தலைவர்கள் வவுனியாவுக்கு அண்மித்து இது அமைந்தால் நடந்து வந்தே உற்பத்திகளை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும், (UDA) அனுமதி தாண்டிக் குளத்துக்கு தான் உண்டெனவும், ஓமந்தையில் புகையிரதக் கடவையை தாண்ட வேண்டி உள்ளது எனவும் அரச பண்ணையால் விதைநெல் தேவையை முழுமை செய்ய முடியாதுள்ளது என பல்வேறுபட்ட தவறான தகவல்களைத் தெரிவிக்கின்றனர்.

அரச பண்ணைகளில் 10 வீத விதை நெல்லையே உற்பத்தி செய்து வழங்க முடியும். அவை புதிய திருந்திய இனங்களாக பல்வேறு சூழல், மண் (உவர்) பூச்சி, நோய் போன்ற காரணிகளுக்கு எதிர்ப்பு அல்லது சகிப்பு தன்மைகளுடன் ஆய்வுக்கு உட்படுத்திய அடிப்படை, ப்திவு, பரிந்துரை போன்ற நிலையில் விநியோகம் செய்யக் கூடியதாக இருக்கும். இந்த நிலையில் 100 வீதம் விதைநெல் தேவையை முழுமை செய்ய வில்லை என்பதில் நடுவன் அரசின் கதையுடன் இணைந்து துணை போகத்தான் முடியுமா?

மதிப்புக்குரிய எமது அரசியல் தலைவர்களே! இங்கு பேய்கள் இல்லை. எம்மவர் சிலரில் சிறு சிறு பேதங்களே உள்ளன. அதனை உதறித்தள்ளி ஓரணியில் இருந்து கோருகிறோம். எமது வடக்கு மக்கள் விரும்புவது ஓமந்தையே என வலியுறுத்திப் பெற்று மக்களுக்கான சேவையை தங்களிடம் இருந்து எதிர்பார்க்கும்

முல்லை விவசாயிகள்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உ[illegible] குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



லிபியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போர் இடம்பெற்று வருகின்றது. ஐ.நாவின் உதவியுடன் அரச படையினர் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் தீவிர தாக்குதல்களை ஆரம்பித்தனர். (த-ரி4)

# வீதி விபத்துக்களைத் தடுக்க ஆஸியில் கலைப் படைப்பு

சிட்னி, ஜூலை 23
ஆஸ்திரேலியாவில் வீதி விபத்துக்களைக் கருத்திற் கொண்டு கலைப் படைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
ஹெல்மட் போன்ற பெரிய தலையுடன், விலா எலும்புக் கூடு, மரக்கட்டை போன்ற கால்கள் ஆகியவற்றை உள்ளடக்கி விசித்திர மனித உருவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
கிராம் எனப் பெயர் கொண்ட இந்த உருவம், ஆஸ்திரேலிய வீதிப் பாதுகாப்பு அமைப்பினரால் விழிப்புணர்வுக்காக உருவாக்கப்பட்டது. பற்றீசியா பிக்னினி என்ற கலைஞரால் இந்தப் படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
வாகனத்தில் உள்ள காற்றுப் பையின் பயன்களைக் குறித்த விசித்திர உருவத்தில் உணர முடியும்.
மனித உயிரின் பெறுமதியையும், வீதி ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கும் கட்டாயத்தையும் உணர்த்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலைப்படைப்பு பலராலும் பாராட்டப்பட்டதுடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)



# இணையத்தள விளையாட்டால் சீனப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## அந்த நாட்டு அரசு மக்களுக்கு எச்சரிக்கை

பீஜிங், ஜூலை 23
போகிமொன்-கோ என்ற விளையாட்டு, சீனாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என நிபுணர்கள் தெரிவித்தனர்.
இதன்மூலம் மறைவிடங்களில் உள்ள இராணுவ அரண்கள் மற்றும் முகாம்களை வெளிநாட்டு உள வாளிகளால் இனம் காணமுடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.
ஆனால், குறித்த விளையாட்டு சீனாவில் இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. போகி மொன்- கோ என்ற இணைய விளையாட்டு நன்கு ஆராயப்பட்ட பின்னர் இந்த விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.
அத்துடன் பலர் விளையாடி உடல் உபாதைகளுக்கு உள்ளானதாகவும் கூறப்படுகின்றது.




விளையாடும் நபரின் ஒவ்வொரு அசைவுகளும் அமெரிக்க உற்பத்தி நிறுவனத்தில் பதியப்படும். இதனால் இராணுவ ரீதியிலான சவால்கள் அதிகம் என அறியப்பட்டுள்ளது.
இந்த நிலையில், இந்த விளையாட்டை விளையாடவேண்டாம் என சீன மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.
ஆனால் சீனாவைச் சார்ந்த 330 மில்லியன் மக்கள் போகிமொன்-கோ இணையப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். இந்த நிலையில், உலகளாவிய ரீதியில் குறித்த இணைய விளையாட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)

# இனப் பாகு... தூண்டுகிற...

## டொனால்ட் ட்ரம் குற்றச்சாட்(டு)

வொஷிங்ரன், ஜூலை 23
ஒபாமா, அமெரிக்காவை மேலும் அபாயத்துக்கு இட்டுச் செல்கிறார். அத்துடன், ஜனாதிபதி ஆசனத்தைப் பிரசங்க மேடை போன்று பயன்படுத்தி இனவாதத்தைத் தூண்டுகிறார் எனக் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம் குற்றஞ்சாட்டினார்.
அமெரிக்காவில் குடியரசுக் கட்சி யின் மாநாடும் வேட்பாளரை அறிவிக்கும் நிகழ்வும், கடந்த திங்கட்கிழமையில் இருந்து நேற்றுமுன்தினம் வரை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கட்சியின் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் டொனால்ட் ட்ரம் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் ட்ரம் நேற்றுமுன்தினம் சிறப்புரை ஆற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
பணிவுடனும், மரியாதையுடனும் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்ற அறிவிப்பை ஏற்றுக்கொள்கிறேன். நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்படும் தேர்தல் முடிவை அனைத்து மக்களும் சமத்துவ மானதுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்.
அமெரிக்காவில் கிட்டத்தட்ட, ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் குடியுரிமை இன்றி வசித்து வருகின்றனர். நான் ஜனாதிபதி...
அவற்றுக்கு தக்க நட...
களை மேற்கொள்...
நாட்டை அச்சுறுத்தும்...
களில், இவ்வாறா...
விரோத குடியிருப்பு...
உள்ளடக்கம்.
உலக மயமாதல் எனது...
மல்ல. எனது திட்டம், எ...
கொள்கையை வ...
தனித்துவத்துடன் செய...
கும். இந்த திட்டம் அ...
வைத் தனித்துவமாக...
டும் அமெரிக்கா முன்...
ஏனைய நாடுகளில்...
குடியேற்றங்களைத் த...
நாட்டில் தீவிர வாத...
வகுக்கும். வேறு நாட்...
எமக்குத் தேவையில்...
முதல் ஆபிரிக்க- அ...
பாராக் ஒபாமா இனவ...
பிளவுபடுத்தியுள்ளார்...
வழங்கினாரே தவிர ...
படுத்தவில்லை. ஒப...
அபாயத்துக்கு இட்டுச்...
ஜனாதிபதி ஆசனத்...
போன்று பயன்படு...

# சீனா-பாகிஸ்தான் படைகள் இணைந்து ராணுவப் பயிற்சி

புதுடில்லி, ஜூலை 23
பாகிஸ்தான்- சீனா ஆகிய நாடுகளின் எல்லைப் படைகள் இணைந்து நேற்றுமுன்தினம் முதல் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. காஷ்மீருடனான பாகிஸ்தான் எல்லையும், சின்ஜியாங் ஆகிய பகுதிகளும் இணையும் இடத்தில் இந்தப் பயிற்சி இடம்பெற்று வருகின்றது.
குறித்த பகுதியில் இருந்து 100 பேர் இஸ்லாமியப் போராட்டங்களில் இணைந்ததை அடுத்து இந்தப் பயிற்சிகளை அங்கு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியது.
சீனா-பாகிஸ்தான் இடையே இடம் பெறும் முதல் இராணுவப் பயிற்சி இதுவாகும்.
இதற்கிடையே, காஷ்மீருடன் இணைந்த இந்திய எல்லைப் பகுதியில் இந்தப் பயிற்சி இடம்பெறு(வ)தாகப் புதுடில்லி அதிகாரிகள் தெரிவித்தனர். போக் என அழை(க்)கப்படும் இந்தப் பகுதி இந்தியா... பாகிஸ்தானின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
ஐ.எஸ்ஸுடன் இணைந்த 3 ஆயி(ர)ரத்து 500 வெளிநாட்டுப் போரா(ளி)ளிகளில் 114 பேர் சின்ஜியாங் பகுதியில் இருந்து சென்றவர்கள் என அமெரிக்க உளவுத்துறை தெரிவி(த்)துள்ளது. குறித்த பிரதேசத்துக்கு அடுத்ததாகச் சவூதி அரேபியா... துன்சினியா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.
சீனப் படைகளின் வரவை பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்த நிலையில், பயிற்சி குறித்து வெளியிடப்பட்ட புகைப்படம் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாகுபாட்டை
# றோர் ஒபாமா

## ாட்டு

னாதிபதியானால்,
க்க நடவடிக்கை
கொள்வேன்.
றுத்தும் விடயங்
வாறான சட்ட
யிருப்புக்களும்

ல் எனது நோக்க
திட்டம், எமக்கான
ய வளர்த்துத்
ன்செயற்படுவதா
ட்டம் அமெரிக்கா
வமாக காண்பிப்பதுடன், மீண்
கா முன்னிலை வகிக்க உதவும்.
களில் இருந்து வரும் மக்கள்
ளைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
ர வாதம் வளர இவை வழி
று நாட்டுக் குடியேற்ற வாசிகள்
வயில்லை.

க்க- அமெரிக்க ஜனாதிபதியான
ா இனவாத ரீதியில் தேசத்தைப்
ள் ளார். அவ்வாக்குறுதிகளை
தவிர அவற்றை நடைமுறைப்
ல. ஒபாமா நாட்டை மேலும்
இட்டுச் செல்கிறார். அத்துடன்,
ூசனத்தைப் பரப்புரை மேடை
பன்படுத்தி இனவாதத்தைத்



தூண்டுகிறார்- என்றார்.

டொனால்ட் ட்ரம் இவ்வாறு தெரிவித்தமைக்கு, மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் பதாகைகளை அசைத்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால், ட்ரம்பின் பேச்சு சில நிமிடங்களுக்குத் தடைப்பட்டது.

உலகளாவிய ரீதியில் சிறந்த உள வாளிகளை உருவாக்கி, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவேன் என்றும், இஸ்ரேலுடன் இணைந்து செயற்படுவதுடன், சிரியாவில் இருந்துவரும் அகதிகளை முற்றாகத் தடை செய்வேன் எனவும் ட்ரம் சூளுரைத்தார்.

இந்த நிகழ்வில், டொனால்ட் ட்ரம் பின் மகளும் கலந்து கொண்டு, எனது தந்தை மக்களின் வேட்பாளர் எனத் தெரிவித்தார். (த-ரி4)

# கூட்டுப்படைத் தாக்குதல்களால் சிரியாவில் 77 பொதுமக்கள் சாவு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

டமஸ்கஸ், ஜூலை 23

சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப் படையின் தாக்குதலில் இந்த வாரம் மட்டும் 77 பேர் கொல்லப் பட்டனர் எனச் சிரியாவின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐ.எஸ். அமைப்பைத் தாக்குவதற்கு ஏவப்பட்ட ஏவுகணைகள் மக்களின் உயிரைப் பறித்தாக அவர் குற்றஞ் சாட்டினார்.



கடந்த செவ்வாய்க்கிழமை, மான்பிஜ் நகரில் 56 பொதுமக்கள் வான் தாக்குதலில் உயிரிழந்தனர். கடந்த திங்கட்கிழமை, அதே குறித்த பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 21பேர் உயிரிழந்தனர் என மனித உரிமைகள் அவதானிப்புத் தகவல்கள் தெரிவித்தன.

மனித உரிமை அவதானிப்புக் குழுவின் பணிப்பாளர் ரமி அப்டெல்ரஹ்மான் தெரிவிக்கையில், அமெரிக்கக் கூட்டுப் படை விமானங்களின் ரோந்துப் பணியின் போது, தவறுதலாகத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் 11 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்-என்றார்.

சிரியாவின் எதிர்க்கட்சித் தலைவர் அனாஸ்-அல்-அப்டா, இந்தப் படுகொலைகளை விசாரணை செய்யும்வரை அமெரிக்கக் கூட்டுப்படைத் தாக்குதல்கள் இடைநிறுத்தப்படவேண்டும். அத்துடன், அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, போராளிகள் அமைப்புக்கு ஆட்சேர்க்கும் கருவியாக உள்ளது-என்றார்.

இதுகுறித்துசிரியவெளிவிவகார அமைச்சு அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், விசாரணைகளைக் கட்டாயப் படுத்தவேண்டும். இவ்வாறான வன்முறைச் செயலுக்கான பொறுப்புக் கூறலையும் மேற்கொள்ளவேண்டும். எதிர்காலத் தாக்குதல்களில், இவ்வாறான தவறுகளைத் தவிர்த்து, சட்டங்களுக்குட்பட்ட விதத்தில் செயற்படவேண்டும் என்று கோரப் பட்டுள்ளது.

கடந்த மே மாதத்தில் இருந்து தாக்குதல்களால் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 167 என மனித உரிமை அவதானிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஆஷ் காட்டர் தெரிவிக்கையில், மான்பிஜ்ஜில் அமெரிக்கப் படையினரால் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பான அறிக்கையை நாம் கருத்திற் கொள்கிறோம்-என்றார். (த-ரி4)

# கள்
# ற்சி

டம்பெறு
காரிகள்
அழைக்
இந்தியா,
ணைந்த

3 ஆயி
ப் போரா
ாங் பகுதி
கள் என
தெரிவித்
சத்துக்கு
ரேபியா,
நாடுகள்

வ பாகிஸ்
து வந்த
து வெளி
இதற்கு
ளதாகக்
(த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பெண்களின் சாமுத்திரிகா லட்சணம்



**வாசம் :**
பெண்களின் உடம்பில் கர்ப்பூர வாசனை, சந்தன வாசனை, தென்னம்பாளை வாசனை, இலுப்பைப்பூ வாசனை, எலுமிச்சை வாசனை, தாழம்பூ வாசனை, தாமரைப்பூ வாசனை ஆகியவை முன்பக்கமும், பின்பக்கமும் வருமானால் செல்வச் செழிப்புடன் வாழ்வாள்.

**மூக்கு :**
மூக்கு உயர்ந்து காணப்படுவது நலம். மூக்கின் நுனி அமைப்பு தான் முக்கியமாக சொல்லப்படுகிறது. மூக்கின் நுனி கூராக இருந்தால் அதிபுத்திசாலி. அரசாளும் யோகம் அமைச்சராதல் போன்ற யோகம் உண்டு.
எலியைப் போன்ற மூக்கு அதாவது லேசாக தூக்கியபடி இருந்தால் காம உணர்வு அதிகமாக இருக்கும் என்பார்கள்.
ஒரு சிலருக்கு மூக்கின் நுனிப் பகுதி உருண்டு காணப்படும். அவர்கள் புத்திசாலியாக இருப்பார்கள். பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் குணம் இருக்கும் சந்தைப்படுத்தல் துறையில் சிறந்து விளங்குவார்கள்.
சிலர் மூக்கு மண்ட மூக்கு என்று சொல்வது போல் இருக்கும். அவர்கள் மற்றவர்களை இம்சைப்படுத்துவார்கள். சிலருக்கு மூக்கு கொடை மிளகாய்போல் இருக்கும். அவர்களும் மற்றவர்களது உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் அடக்கி ஆள முயற்சிப்பார்கள்.
மூக்கின் அடிப்பகுதி நடுப்பகுதி நுனிப் பகுதி என மூன்று அமைப்பையும் வைத்து சொல்லப்படுகிறது. ஒரே சீரான மூக்கைக் கொண்டவர்களுக்கு சீரான வாழ்க்கை இருக்கும்.கொடை மிளகாய் மூக்குக் கொண்டவர்கள் தான் கொஞ்சம் பயங்கரமானவர்கள்.
ஒரு சிலருக்கு அடிப்பகுதி ஒரு மாதிரி இருக்கும் நடுப்பகுதி வேறு மாதிரி இருக்கும் நுனிப் பகுதி வேறு ஒரு மாதிரி இருக்கும். இவர்களுக்கு மாறுபட்ட சிந்தனை இருக்கும். மூக்கு பார்க்கும்போதே வளைந்து நெளிந்து இருக்கும்.
வாசிம் யோகம். வாசிம் என்றால் மூக்கு பயிற்சி செய்வதை குறிக்கும். அதாவது சித்தர்கள் மூக்கு பயிற்சி செய்வார்கள். அவர்களுக்கு கிட்டத்தட்ட பென்சில் போல் இருக்கும் மூக்கு. அது போன்ற மூக்கு இருந்தால் பிரணாயாமம் வாசியாம் செய்பவர்கள் என்பதை அறிந்துக் கொள்ளலாம்.
அந்த மாதிரி மூக்கு அமைப்பு இருந்தால் எதிர் காலத்தைப் பற்றி அறிவும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று சொல்வார்கள்.

**நெற்றி:**
சாமுத்திரிகா லட்சணத்தில் நெற்றி மிக முக்கியமான இடத்தில் உள்ளது. உயர்ந்த நெற்றி அறிவின் அடையாளம். கொஞ்சம் மேடாக பரந்து இருந்தால் சிறப்பாக இருக்கும்.
நெற்றியின் பரந்து விரிந்த அமைப்பைவிட அதில் உள்ள கோடுகளுக்குத்தான் மிக முக்கியம். 2 அல்லது 3 கோடுகள் இருப்பது நலம். பலதரப்பட்ட சிந்தனை அறிவுகொண்டவர்களாக இருப்பார்கள். அதற்குமேல் இருப்பது நல்லதற்கல்ல.
செவியின் அதாவது காதின் அமைப்பு பரந்து விரிந்து இருக்க வேண்டும். செவி குறுக குறுக மனநிலையும் குறுகி இருக்கும். சிந்தனையும் குறுகலாக இருக்கும். (முற்றும்)

செல்வா சாவகச்சேரி

# மானம் காப்பதற்கே ஆடை இது பெண்ணுக்கு பெருமை

அடிமைப் பெண்ணுக்கு சுதந்திரமும் விடுதலையும் வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்திய மகாகவி பாரதியார் இன்று அரைகுறை ஆடையுடனும் தலைவிரிகோலமாய் திரியும் பெண்களைக் கண்டு தவறாய்ப் புரிந்து கொண்டாய் பெண்ணே இதுவா சுதந்திரம் ஆடைக்கும் விடுதலையா? நான் இப்படி சொல்லவே இல்லையே என்று மனம் நொந்து கண்ணீர்விட்டுக் கலங்குவார்.
பெண் பெருமைக்குரியவள், சக்தியின் வடிவானவள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பல சாதனைகள் புரிந்தவள். இன்னும் எழுத்தில் வடிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. இது தான் பெண்ணின் வரலாறு. இன்று நம்மினத்தின் கலாசாரம் ஒழுக்கம் மறந்த நிலையில் சேலை அணியும் குடும்பப் பெண்கள் கூட சட்டை கழுத்தின் முதுகை மிகவும் ஆழமாய் பல நாடாக்கள் இணைத்தும் தொப்புள்தெரிய பிறரின் பார்வையைக் கூச வைப்பதும் நகைப்புக்குரியதும் அநாகரிகமான அருவருப்பைத் தரும் காட்சிகள் சமூக முன்னேற்றத்தை தமிழரின் பண்பாடு ஒழுக்க விழுமியங்கள் குழிதோண்டிப் புதைக்கும் அவலமாய் தொடர்ந்துகொண்டிருப்பது அவமானமாய் தோன்றுகிறது.
குட்டைப்பாவாடை சட்டையுடன் பறங்கியர் போல் திரியும் இவர்களைத் திருத்துவது யார்? சாவீடுகளில் கூந்தல் அவிழ்த்து மாரடித்து ஒப்பாரி வைப்பது வழமை. இன்று ஆலய தரிசனம் செய்வோரும் மங்கல நிகழ்வுகளின் போதும் அவிழ்த்த கூந்தலுடன் பிசாசின் கோலமாய் அவதாரம் எடுப்பது பற்றி வீட்டுப் பெரியோர், கணவர் கவனத்திற் கொள்ளாதது ஏனோ? சமயப் பெரியோரும் கல்விமான்களும் சிறுபராயத்தினரை கலாசார சீரழிவிலிருந்து பாதுகாக்க முயற்சி எடுப்பது நன்மையே. ஆனால் இவர்களைப் பெற்றவர்கள் பாட்டிகளை எதை சொல்லித்திருத்துவது. கல்வியில் நற்பண்புகளில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இன்று போதையில் தள்ளாடுகிறது. இன்று பரவலாக நடந்தேறிக் கொண்டு இருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி ஏன் என்ற கேள்வி எழுந்ததால் சினிமா கதாநாயகியின் கவர்ச்சி உடையுடன் உலாவரும் பெண்ணைக் காணும் இளைஞர்கள் தங்கள் உணர்வை சிறுமிகளிடத்து வசப்படுபவர்கள் என்றே நினைக்கத் தோன்றுகின்றது. பெண்களே உங்கள் வீட்டுக் குழந்தையை பண்போடும் ஒழுங்கோடும் உடையை அணிவித்து தலைவாரிப் பூச்சூடி தமிழிச்சி என்ற உணர்வை ஊட்டி வீட்டையும் நாட்டையும் கலாசாரச் சீரழிவிலிந்து காப்பாற்றுங்கள் சிறுமை வேண்டாம் பெருமையைத் தேடுங்கள்.



> **குடும்பப் பெண்கள் கூட சட்டை கழுத்தின் முதுகை மிகவும் ஆழமாய் பல நாடாக்கள் இணைத்தும் தொப்புள்தெரிய பிறரின் பார்வையைக் கூச வைப்பதும் நகைப்புக்குரியதும் அநாகரிகமான அருவருப்பைத்தரும் காட்சிகள் சமூக முன்னேற்றத்தை தமிழரின் பண்பாடு ஒழுக்க விழுமியங்கள் குழிதோண்டிப் புதைக்கும் அவலமாய் தொடர்ந்துகொண்டிருப்பது அவமானமாய் தோன்றுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பணியில் ஒரு காவலர் நா.முத்தையா



கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையில் சைவத்தையும், தமிழையும், ஒழுக்கத்தையும் சீராக வளர்த்துச் சிறப்பாக்கிய பெரியார்களுள் முதன்மை இடத்துக்கு நகர்த்தப்பட வேண்டியவர் ஆத்மஜோதி நா.முத்தையா ஆவார். ஆன்மிகப் பணியில் முழுமையான நம்பிக்கையைக் கொண்ட காரணத்தினால், தமிழர் தம் பண்பாடு சோடைபோகாமல், சோர்வு படாமல் கட்டிப்பாதுகாத்த பெருமைக்கு ஆத்மஜோதியே சொந்தக்காரர் ஆகின்றார். வடக்கு–கிழக்கு மட்டுமல்லாது மலையகத்திலே சமயப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் அதியுன்னத சாதனைக்கு வழிசமைத்தவர். சைவமும், தமிழும் நொந்து போகாமல், நலிந்துபோகாமல் வல்லமை பெற்றிட வாழ்ந்து காட்டியவர் ஐயா முத்தையா ஆவார். நாவலப்பிட்டியிலேதான் தமிழுக்கும், சைவத்துக்கும் உயிரூட்டி உணர்வூட்டியவர் என்ற காரணத்தால், அவருக்கு நாவலப் பிட்டி முத்தையா என்ற சிறப்புப்பெயர் வரக்காரணமாயிற்று.

ஸப்த திருப்பதிகள், ஸப்த ரிஷிகள், ஸப்த தீர்த்தங்கள், ஸப்த மடாலயங்கள், ஸப்த கேணிகள் நிரம்பிய புண்ணியப் பதியாம் ஏழாலை என்ற கிராமத்தில், இலந்தைகள் சூழ்ந்த இலந்தைக்கட்டி குறிச்சியில், பாதாள பைரவரின் வரம் பெற்ற புத்திரனாக, 1918 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இவர் அவதரித்தார். வேளாண்மை யில் கொடிகட்டிப் பேறுபெற்ற நாகமணி–பதிவிரத பத்தினி பொன்னுப்பிள்ளை தம்பதியினருக்கும் கிடைக்கப்பெற்ற பாக்கியமே முத்தையா என்ற முத்து ஆவார்.

> தன்னை விளம்பரம் செய்து விலாசப்படுத்துவது என்பது இவரிடம் ஒரு போதும் இருந்ததில்லை. பொது ஆலயங்களில் இவரது தொண்டை இப்பொழுதும் போற்றுவதுண்டு. மேலும், ஆலயங் களில் பொறுப்பான பதவிகளில் இருந்த போதும் தனது பெயரை ஒருபோதும் முதன்மைப்படுத்தாது, நிர்வாக சபையையே பொறுப்பாக்கி, நிர்வாக சபையை (எழுதி) மகிமைப்படுத்துவார். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே முன்னுக்கும் பின்னுக்கும் பட்டங்களைச் சுமக்காமல் நா. முத்தையா என்று மட்டும் எழுத அனுமதிப்பார்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்த 'முத்து' ஏழாலையிலேயே ஆன்மிக வரங்களோடு பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அந்த நாள்களிலே விவசாயம் செய்பவர்கள் எவருமே வீட்டையும், நாட்டையும் நிர்வாகம் செய்யக்கூடிய ஆற்றலை கொண்டிருந்தார்கள். ஆனதினால் ஊருக்குப் பெரியவரான நாகமணி முத்துவுக்கு ஏற்ற குரு ஆசான்கள் விளைந்த மல்லாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், வேதாந்தமடம் ஆகியவற்றிலும் மற்றும் பண்டிதமணியிடமும் முறையாகக் கல்வி பயிலச்செய்தார். முறையான கல்வி முத்துவுக்கு பிறையாக வளர்ந்தது. ஆசிரிய பயிற்சியில் முத்து விசேடசித்தி பெற்று, மலையகத்தின் கண்ணமைந்த நாவலப்பிட்டி சென்.ஜோன்ஸ் வித்தியாசாலையிலும், நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்திலும் 1939ஆம் ஆண்டிலிருந்து பல ஆண்டுகள் பணிபுரிந்தார். 1960களில் அதிபராக விளங்கி, முத்தையா என்ற மந்திரமாகி மலையகத்தில் உச்சரிக்கப்பட்டார்.

மலைய 'லயன்' வாழ்வும் மற்றும் அதன் வறண்ட பயன்கள் பற்றியும், ஆழமாகச் சிந்தித்த பரோபகாரத்தின் பலாபலன்போலும், மலையகத்துக்கு கல்வி மட்டுமன்றி வாழ்வாங்கு வாழும் படியாக நீதி நெறிகளையும், ஒழுக்க விழுமியங்களையும் மேலதிகமாகப் போதித்தார். ஒரு குருவானவருக்கு இருக்க வேண்டிய சகல தகைமைகளையும் முழுமையாகக் கொண்டிருந்தார். எந்தவிதமான பலவீனங்களும் அவரை நெருங்கவில்லை. நெருங்காத படி திருமுறைகள் வழி வாழ்ந்து காட்டினார். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கவல்ல திருமுறைகளை ஆலயந்தோறும் பாடிப்பாடி சைவசமய வாழ்வுக்கு உரமூட்டினார். மலையகத் தேயிலைத் தோட்ட லயன்கள் தோறும் இந்து வாலிபர் சங்கங்களை நிறுவி, அங்கெல்லாம் சமய உபந்நியாசங்களை நிகழ்த்தி சமய ஒழுக்க விழுமியங்களுக்கு உயிரூட்டினார். பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, தியானம், தீட்சை, பிரசங்கம், உபந்நியாசம், புராணபடனம், பேச்சு, சொற்பொழிவு, போட்டிகள், மனனம், பண்ணிசை, கோலம், சிவசின்னங்கள் போன்ற முழுமையான சைவசமய அடையாளங்களை செவ்வாய், வெள்ளி தோறும் கிரமமாகச் சிரமமின்றி நேர்த்தியாக இந்துக்கள் கடைப்பிடிக்கத் தானும் முன்மாதிரியாகச் செயற்பட்டு, மலையக வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். இது ஓர் ஆன்மிக எழுச்சியை ஏற்படுத்தியது.

### சாதனை

பிஞ்சுகள் தொடக்கம் பெரியோர்கள் வரை தனது ஆன்மிக உடல், உள, உடை, நடை, பாவனையால் ஒவ்வொரு இந்து மகனும் இந்த மண்ணில் சிவமயமாகப் பொலிந்திடத் தன்னைப் பேறாக்கினார். பொழுதாக்கினார்.

சமய குரவர்கள் எவ்வாறு திருத்தலங்கள் மூலமாகவும், பாதயாத்திரை மூலமாகவும், கூட்டுப் பிரார்த்தனை மூலமாகவும், அற்புதங்கள் மூலமாகவும், அதிசயங்கள் வாயிலாகவும் திருவருளைப் பெருக்கினார்களோ அவ்வாறே ஆத்மஜோதி முத்தையாவும் மக்களுக்கு வேண்டிய குருவருளையும், திருவருளையும் அள்ளி அள்ளி வழங்கினார். உள்ளொளி பெருக்கும் தன்மையினாலும், தகைமையினாலும், தாற்பரியத்தினாலும் ஆத்மஜோதி என்ற பட்டம் அகில உலக சைவசமய ஆசார சீல ஒப்புரவாளர்களால் மிகமிகப் பெறுமதியாக வழங்கப்பட்டது. கௌரவ கலாநிதி என்ற பட்டம் போன்று சிறப்புடையது. ஆத்மஜோதி என்ற பட்டம். எழுதிய ஆய்வின் மூலம் அங்கீகரிக்கப்படுவது ஒன்று . எழுதாமலே கௌரவமாக வழங்குவது ஒன்று. இறைவனும் சேர்ந்து வழங்கப்பட்டதே, ஆத்ம ஜோதி என்ற பட்டம். இதுவே இன்றுவரை அவரை வாழவைக்கிறது. ஆத்மஜோதி என்று இலங்கையில் தமிழ்–சிங்கள, இஸ்லாமிய, மூவினத்தராலும் போற்றப்பட்டவர் இவரொருவரேயாவார்.

எமது மண்ணில் சிமெந்தும், மண்ணும், கல்லும், பணமும், வாகனமும், விலாசமும் இருந்தால் சமயத்தை வளர்த்துவிடலாம் என்று எண்ணுகின்ற காலமதில், சைவ சமயத்தில் மக்களைப் பணமோ பலமோ இன்றி பயபக்தியோடு, பரபரப்பின்றி, பாங்காக ஈடுபடச்செய்த ஆன்மிகப் பரோபகாரியே ஆத்மஜோதி முத்தையா ஆவார். தன்னை விளம்பரம் செய்து விலாசப்படுத்துவது என்பது இவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. பொது ஆலயங்களில் இவரது தொண்டை இப்பொழுதும் போற்றுவதுண்டு. மேலும், ஆலயங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்தபோதும் தனது பெயரை ஒருபோதும் முதன்மைப்படுத்தாது, நிர்வாக சபையையே பொறுப்பாக்கி, நிர்வாக சபையை (எழுதி) மகிமைப்படுத்துவார். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே முன்னுக்கும் பின்னுக்கும் பட்டங்களைச் சுமக்காமல் நா.முத்தையா என்று மட்டும் எழுத அனுமதிப்பார். சமயம் என்பது பட்டங்களைச் சுமக்க முடியாமல் சுமக்கவைப்பதல்ல. எழுமைப்படுத்துவதேயாகும். யாழ்ப்பாண மண்ணின் பெருங்கோயில் நிர்வாகத்தை அடிக்கடி ஞாபகமூட்டி "அப்படி இருக்க வேண்டும்" என ஆசைப்படச்சொல்வார். நா.முத்தையா சமயத்துக்காக பணத்தை ஒருபோதும் வசூலித்ததில்லை. மாறாகப் பணத்தில் மிதந்ததும் இல்லை. பணத்தில் மாடி மனை கோடி தேடி அலைந்ததுமில்லை. அதி சொகுசு வாகனத்தில் பவனி வந்து அரசியல்வாதிபோல ஆலயத்தில் குதிப்பதில்லை. எவ்வளவுக்கு எவ்வளவு எளிதாக ஆலயத்துக்கு எல்லோரும் வரவேண்டும் என்பதற்காகவே பாத யாத்திரையைத் திரும்பத் திரும்பச்செய்து சாதனை புரிந்தார் முத்தையா.

### பாதயாத்திரை

சம்பந்தர், அப்பர் சுவாமிகள் ஆலயம் தோறும் பாதயாத்திரை செய்து எப்படிச் சைவசமயத்தைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்களோ, அதேபோலவே ஆத்மஜோதி அவர்களும், வலி.வடக்குப் பிரதேசத்தில் அருளாட்சி புரிகின்ற சுமார் முந்நூறு ஆலயங்களுக்கு அடியார் சங்கமத்துடன் சேர்ந்து பாதயாத்திரை மேற்கொண்டு சைவசமயத்திற்குப் புத்துயிரும் விழிப்புணர்வும் அளித்தார். இதுவரை இதுபோல் எந்தவொரு ஆன்மிகவாதியுமே தொழிற்பட்டதேயில்லை. உயர்வு தாழ்வுபாராமல் குலம் கோத்திரங்களுக்கப்பால் ஆற்றிய தொண்டாக இது வரலாறு பதிவு செய்கிறது. இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ்லாந்து நாடுகளி லும் யாத்திரைகள் மூலமாக சமயம் வேரூன்ற வழிசமைத்தார். பதினைந்துக்கும் மேற்பட்ட இலகு தமிழ் பாய்ச்சிய சைவசமய நூல்களையும் மாணவர்களுக்கான சமய பாட நூல்கள் பத்தினையும் சமய தத்துவ நூல்கள் எட்டினையும் நீதிநூல்களின் சாராம்சங்களையும் வெளியிட்டு சாஹித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டார். 1948, 1954, 1965, 1970, 1979 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற்ற இந்துமாநாடுகளில் இலங்கையில் இருந்து சிறப்பித்த பெருமகான் இவராவார். நாவலர் பணியில் 1995ஆம் ஆண்டு வரை சைவசமயத்தின் காவலராக விளங்கிய ஆத்ம ஜோதி முத்தையா ஐயாவை ஆன்மிக உலகம் வரமாக்குவது அடுத்த சந்ததிக்கு வழிகாட்டுவதற்குப் பாலம் அமைப்பதுபோல அமையும். எவர் செய்வார்கள்? ஆத்மஜோதி சஞ்சிகைகளைச் சம்பாதிக்கவும், சேகரிக்கவும் முடிந்தால் சமயத்தின் காவலர் என்பதை 1948 இல் இருந்து பொன் எழுத்துக்களால் வடிக்கமுடியும்! 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி இவர் இறைவனடியில் சங்கமமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1881 - சிலி மற்றும் ஆர்ஜென்ரீனா இடையே 1881 எல்லை ஒப்பந்தம் புவனெஸ் அயரில் கைச்சாத்திடப்பட்டது.
1903 - போர்ட் மோட்டார் கம்பனி தனது முதலாவது மோட்டார் காரை விற்பனைக்கு இட்டது.
1927 - இந்தியாவின் முதலாவது ஒலிபரப்பு நிலையம், பம்பாயில் தனது முதலாவது ஒலிபரப்பைத் தொடங்கியது.
1929 - பாஸிஸ்ட் அரசு இத்தாலியில் பிறநாட்டு மொழிப் பயன்பாட்டைத் தடைசெய்தது.
1942 - பல்கேரியாவின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் கவிஞருமான நிக்கலோ வப்ற்சறோவ்க்கு துப்பாக்கி அணியினரால் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.
1952 - ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.
1961 - நிகாராகுவாவில் சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது.
1962 - லாவோஸில் நடுநிலை சர்வதேச ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
1967 - ஆபிரிக்க அமெரிக்கரின் ஆதிக்கமுள்ள 12ஆம் வீதி டெற்றொயிற்றில் அமெரிக்க வரலாற் றில் மிகமோசமான வன்முறையில், 43பேர் உயிரிழக்க, 342 பேர் காயமடைந்ததுடன் 1400 கட்டடங்கள் எரியூட்டப்பட்டன.
1983 - 13 சிறிலங்கா இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பதுங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.
1984 - வெனிஸா வில்லியம் - அமெரிக்காவின் அழகு ராணிப் பட்டத்தை இழந்தார். அவரது நிர்வாணப் படங்கள் பென்கவுஸ் சஞ்சிகையில் பிரசுரமானதையடுத்து, மிஸ் அமெரிக்காப் பட்டத்தைத் துறந்தார்.
1992 - அப்காஷியா ஜோர்ஜியாவிடமிருந்து சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது.
1995 - தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு 100 கோடி ரூபா நிதி தேவையென நிதிப்பொறுப்பாளர் கோரிக்கை.
- வாழைச்சேனையில் மூவர் பொலிஸாரின் சூட்டுக்குச் சாவடைந்தனர்.
2002 - அமைச்சர்கள் மீது ஜனாதிபதி வக்கணம் கூறி விளாசல்.
- தமிழருக்கு சமூக பொருளாதார கலாசார விடயங்களிலேதான் அதிகாரப் பகிர்வு. அமெரிக்காவில் பிரதமர் ரணில் அறிவிப்பு.
- கறுப்பு ஜூலையையொட்டி கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியாவில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்.
- புதுக்குடியிருப்பில் இணுவையூர் சிதம்பர செந்திநாதனின் 2 நூல்கள் வெளியீடு.
2005 - எகிப்து ஷாம் எல் ஷேக் பகுதியில் மூன்று குண்டுகள் வெடித்ததில் 88பேர் உயிரிழந்தனர்.

# அன்னை தெரேசா



*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

அன்னை தெரேசா டப்ளினில் ராத்பார்மன் என்ற இடத்திலுள்ள லொரேட்டோ பயிற்சியகத்தில் விருப்ப நிலையில் இரண்டு மாதங்கள் மட்டுமே செலவழித்தார். எனினும் அங்குள்ள ஒரு சில இடங்களும் ஆள்களும் அன்னையின் இதயத்தில் அழிக்க முடியாத முத்திரையைப் பதித்துள்ளதை அறியமுடிகின்றது. அங்குள்ள சிற்றாலயம், பொதுக் கூடம், அன்னை போர்ஜியா இர்விந்- இவர்தான் அன்னை தெரேசாவுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தவர். இனிமேல் இம்மொழிதான் அன்னைக்கு பேசும் மொழியாகப் போகின்றது. 1928 ஆம் ஆண்டு நவம்பரில் கப்பல் வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டார். ஏழு வாரங்களுக்குப் பின் பம்பாயில் கரையிறங்கினார். பம்பாயிலிருந்து ஒரு சகோதரியுடன் ரயில் மூலம் புறப்பட்டார். ஒரு கண்டத்தின் அகலத்தை ஒத்த அன்னிய நாட்டின் ஒரு திசையிலிருந்து இன்னொரு திசைக்கு வந்து சேர்ந்தார்.

கல்கத்தாவைப் பற்றி அன்னை தெரேசாவின் உள்ளத்தில் என்ன என்ன முதல் பதிப்புகள் ஏற்பட்டன என்று எமக்கு ஒருபோதும் தெரியாது. ஏனெனில் அன்னையின் முதல் பார்வையில் கல்கத்தா எப்படிப்பட்ட ஓர் ஓவியத்தை வரைந்ததோ அதைப் பற்றி அவர் பேச விரும்பவில்லை. இந்த ஓவியத்தின் வண்ணங்களைப் பற்றி அவர் எதுவும் கூற விரும்பவில்லை. பம்பாய் மெயில் வழியாக அவர் கல்கத்தா ரயில் நிலையத்தில் இறங்கியபோது கல்கத்தாவின் வினோதமான பல வண்ணங்கள் அன்னையின் இதயத்தில் படிந்திருக்க வேண்டும். பல வண்ணங்கள், இரைச்சல்கள், வாசனைகள் பயணிகளை வரவேற்க வந்திருக்கும் மக்கள் கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு மூட்டை முடிச்சுகளைத் தூக்கிப் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்தப் போட்டி போடும் கூலிகள்... அன்னை கல்கத்தாவில் தங்கியிருந்தது சில நாள்கள்தான்...

ஏனெனில் 1929 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி மலை வாசஸ்தலமான டார்ஜிலிங்கிலுள்ள லொரேட்டோ பயிற்சியகத்துக்கு அனுப்பப்பட்டார். கல்கத்தாவுக்கும் வடக்கேயுள்ள டார்ஜிலிங்கிற்கும் இடையே 400 மைல் தூரம். இங்கே வெண்பனியை ஆடையாக உடுத்திய காஞ்சன் ஜங்கா என்ற இடத்தில்தான் அன்னை துறவற வாழ்வைப் பற்றிய பாடங்களையும் பயிற்சியையும் பெறும் சீடர் ஆனார்.

டார்ஜிலிங் கவர்ச்சிகரமான ஒரு மலை வாசஸ்தலம். 1911 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு இந்தியாவின் தலைநகரமாயிருந்த கல்கத்தாவை நீக்கி விட்டுப் புதுடில்லியைத் தலைநகராக மாற்றுவதற்கு முன் ஆளுநரும் அவருடைய பரிவாரங்களும் கோடை காலத்தில் வெயில் உக்கிரமாகும் முன் டார்ஜிலிங் சென்று விடுவார்கள். நான்கு மாதங்களுக்கு டார்ஜிலிங் நகரம் களைகட்டிவிடும். உருகும் பனியின் பின்னணியில் குளிர்ந்த காற்று, சுகம் தேடிவரும் மக்கள், பலவிதமான கேளிக்கைகள், நடனம், கொண்டாட்டம் இவற்றினால் நகரமே கலகலப்பாக இருக்கும்.

*(அடுத்த சனிக்கிழமை தொடரும்)*

# அவசரப் புத்தியால் அழிவு



ஒருவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அது வேட்டைக்குப் பயன்பட்டதோடு, திருடர்களைக் கவ்விப் பிடித்துக் கடித்து விடும். ஒரு அவசரத் தேவைக்காக, அடுத்த ஊரில் நாய்க்குச் சொந்தக்காரன், ஒருவனிடம் தன்னுடைய நாயை அடமானம் வைத்து, நூறு ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பினான்.

அந்த வீட்டில் ஒரு நாள் இரவு திருடன் வந்து பணப்பையை எடுத்துக்கொண்டுபோகும்போது, நாய் அவனைக் கடித்துக் கொன்றுவிட்டது. பின்னர் குரைத்து எஜமானை எழுப்பியது. அவன் எழுந்து பார்த்து நாய் செய்த உதவிக்கு மகிழ்ச்சி அடைந் தான்.

மறுநாள் காலையில், "வட்டியுடன் அசல் நூறு ரூபாவையும் பெற்றுக் கொண்டேன்" என்ற ஒரு சீட்டு எழுதி, அதோடு நாய் செய்த உதவியையும் தெரிவித்து நாயின் கழுத்தில் அதைக் கட்டி, "உன் எஜமானிடம் போ" என்று அனுப்பி விட்டான்.

நாய் உடனே ஆசையோடு ஓடி வீட்டுக்கு அருகில் வந்து கொண்டிருக்கையில், "எமக்கு ரூபாய் தந்தவனை மோசம் செய்துவிட்டு நம்முடைய பேச்சுக்கு மதிப்பு இல்லாமல் ஓடி வருகிறதே" என்று கோபத்தோடு அவசரப்பட்டு, தடியை எடுத்து ஓங்கி அதன் மீது வீசினால் நாய் மண்டை உடைந்து அப்பொழுதே செத்துவிட்டது.

நெருங்கி அதைப் பார்க்கும்போது, கழுத்தில் கட்டப்பட்டிருந்த சீட்டைப் பிரித்துப் பார்த்தான்.

நன்றியுள்ள நாயை, அவசரப் புத்தியால் கொன்றதை நினைத்து, வருந்தி அந்தத் தடியால் தன்னுடைய தலையில் அடித்துக் கொண்டு அவனும் இறந்து போனான்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையில் பல ஆபத்துக்கள் வரலாம்..! சிந்தியுங்கள்..! பிரச்சினைகளை நேருக்குநேர் சந்தியுங்கள்..!

கல்வி என்பது அடிப்படை உரிமை. அதனைப் பெற்றுக் கொள்வதில் எந்தவித இடர்பாடுகளும், இடைநிலைகளும் இருக்கக்கூடாது. அதற்கான சந்தர்ப்பங்கள் தோற்றமுறும் போது அவற்றை எதிர்கொண்டு முன்னகரவேண்டும். தமிழ் மக்களின் வரலாற்றிலே அவர்கள் தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த குழந்தைச் செல்வங்கள் எத்தனை இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். நல் மாணாக்கர்களாய், அறிவுடமை கொண்ட பட்டதாரிகளாய் சமூகத்தில் முந்தியிருக்க வேண்டும் என்பதற்காய் எத்தனை தியாகங்களைச் செய்துள்ளனர்.

மிக நீண்ட உரிமை வேண்டிய போராட்டப் படிநிலைகளின் வழியே தமிழ் மாணவர்களை அடக்குமுறைக்குட்படுத்தும் வகையிலே கடந்தகால அரசுகள் திட்டமிட்டுச் செய்துவந்த தரப்படுத்தல் செயன்முறைகளும், அவற்றின் வழித்தோன்றலான செயலூக்கங்களும் எத்துணைத் துன்பங்களை ஊசிமுனைபோலக் குத்தியிருக்கிறது. சொல்லொணாத வேதனைகளைத் தந்திருக்கிறது. செய்திருக்கின்றது. இன்றும் அவற்றின் தொடர்நிலைகள் தொடர்புறுகின்றன. தமிழ் மாணவர்கள் செய்துவிட்ட பாவவினையாக அவர்களின் பாதச்சுவடுகளின் வழியே பின்தொடர்கிறது. மாறாத வடுவாக இப்போதும் அவர் மனங்களில் பதிந் துள்ள அந்த வலிகளை, ரணங்களை சுமந்துகொண்டுதான் நகர்கிறார்கள்.

இதனை யார் ஏற்றுக்கொள்வர்..? புரிந்துகொள்ள யார் உளர்...? ஒருதரப்பு நியாயங்களைத் திட்டமிட்டு சுவாத்தியம் செய்யவும் அதற்காக வாதிடவும்தான் இங்கு பலர் இனவாத முகம் கொண்டு சுற்றித்திரிகின்றனர். ஆனால் தமிழ் மாணவர்களின் இருப்புத் தொடர்பிலும் அவர்களின் நலன் தொடர்பிலும் பேசுவதற்கு ஆத்மார்த்தமாக யாரும் செயற்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே பலர் முன்னிறுத்தப்படுகின்றனர். இந்தச் செயல் நிலைகள் முடிவுறுத்தப்படவேண்டும். அனுபவத்தின் வழி ஆரோக்கியமாகச் சிந்திக்கவும் தமிழ் மாணவர்களை ஆற்றுப்படுத்தி வழிநடத்தவும் செய்யவேண்டும். அதுவே இன்றைய தேவை. கல்வியிலும், வழி நடத்தலிலும், ஆற்றுப்படுத்தலிலும், ஊக்கப்படுத்தல்கள் ஊடான தட்டிக்கொடுப்புக்களில் சிறந்திருந்து அறிவுடமையாலும் நற் திட்டமிடல்களாலும் பாதுகாப்பு அரணாக இருந்தவர்கள் எம்மிடமிருந்து தூர விலக்கப்பட்டமை தமிழர்களின் துரதிர்ஷ்டமே...! ஆழக் காலூன்றிச் சிந்திப்பவர்கள் இதன் யதார்த்தங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த சந்தர்ப்பத்திலே அரசு தன் பயணப்பாதைகளை-நடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்க வேண்டும். தமிழ் மாணவர்கள் மீது மகிழ்தலோடு எந்தவித சலனமுமின்றி தாங்கள் திட்டமிட்டுச் செய்த துரோகங்களையும், சுற்றி வளைப்புக்களையும், ஆள் கடத்தல்களையும், தளும்புகள் மாறாது கொடுத்துவிட்ட அடி உதைகளையும் இரைமீட்டிப் பார்க்க வேண்டும்.அவற்றைப் பாடமாக ஏற்று இனியும் தொடராது நல்லாட்சி அரசாகத் திருந்த வேண்டும். நல்லிணக்கம்,சமத்துவம் என்பவற்றில் உறை நிலைகளை ஏற்படுத்திக் கிளர்ச்சி என்கின்ற புரட்சி நிலைக்கான உடைவுகளை தூபமிடலாகச் செய்திருக்கக்கூடாது. நல்வழிப்பட்டுக் கொள்ளவேண்டும். இல்லாது போனால் நல்வழிப்படுத்துவதற்கான மாற்றங்கள் இதன் வழி முனைப்புப் பெறலாம்...!

இந்த நிலையிலே சிங்கள மக்களும் புரிந்துணர்வை நன்முறையிலே பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள சமூகமாக தாங்கள் ஜனநாயக உரிமையின் வழி வழங்கிய வாக்குறுதியின் நிலைபெறலில் வந்த அரசுகள் திட்டமிட்டு திடமற்று தமிழர்கள் மீது செய்த அழிவின் அசைவு நிலைகளை உணர்ந்துகொள்ள அறிந்துகொள்ளத் தலைப்பட வேண்டும்..! யாழ். பல்கலைக்கழகத்தில் தம் பிள்ளைகள் பெரும்பான்மையினம்,அதிகாரவர்க்கம் என்ற சொல்லுருபுகளின் ஓர்மத்தில், போதையில் செய்ய நினைத்தவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.மாறாக தமிழ் மாணவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சாட்டுதல் செய்யக்கூடாது.அமைதியின் உருவம் என்று சொல்பவரை வணங்குபவர்களாக, தமிழர் பிராந்தியங்கள் எங்கும் அதன் வடிவங்களை நிலைநிறுத்துவதில் வேகம் கொள்பவர்களாக தங்கள் பிள்ளைகளை அமைதிப்படுத்த வேண்டும்..! நல் அறிவுரைகளையும் அதன் மொழிவுகளையும் இடித்துரைத்து கற்றல் செயற்பாடுகளுக்கு அனுப்ப வேண்டும்..!




இவற்றை விடுத்து ஊடக சந்திப்புக்களையும், விதண்டா வாதங்களையும், [illegible] யாடல்களையும் ந[illegible] எந்தவித பயனுமில்லை..!

## இனியாவது பெண்களை வாழவிடுங்கள்

உடுவிலூர்கலா

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது நேற்று இன்று உருவான ஒன்றல்ல. பெண் இவ்வுலகில் உருவான நேரமே வன்முறையும் உருவானது. பெண் ஜென்மத்தின் முதற் படைப்பான ஏவாள், இறைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அதனால் ஏவாள் மட்டுமல்ல பெண்ஜென்மமே பிரசவ காலத்தில் வலியை அனுபவிக்க வேண்டுமெனச் சபிக்கப்பட்டதாக விவிலியம் கூறுகிறது. இவ்வாறு விவிலியம் மட்டுமல்ல சங்க காலம் தொட்டு சங்கமருவியகாலம் வரையான நூல்கள் யாவுமே பெண்களை இரண்டாம் பட்சமாகவே நோக்குகின்றன. வன்முறைகளால் பெண்களை வதைசெய்துள்ளன. இன்று பெண்களின் பெருமதிப்பைப் பெற்றுவிட்ட மெகாத் தொடர்கள் யாவுமே பெண்ணினத்தைச் சகல வழிகளிலும் வன்முறை செய்வதை அவ



தானிக்க முடிகிறது.

ஈரடிகளில் இகத்தையே உள்ளடக்கி வாழ்க்கைத் தத்துவங்களை கருத்துக்களாக அள்ளிச் சொரிந்த வள்ளுவன் ஆங்காங்கு பெண்களை வன்முறை செய்துள்ளான். 'படிசொற் தவறாத பாவாய்' என்றும் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பு என்னும் தன்மை உண்டாகப் பெறின்' என்றும் பெண்ணின் கற்பையும் ஒழுக்கத்தையும் கூறி நிற்கிறான். ஒழுக்கமும் கற்பும் பெண்ணுக்கு மட்டும்தானா? ஆண் எப்படியும் வாழலாமா? ஒரு பெண் ஒழுக்கம் கெட்டவளாவதும் கற்பு நெறி தவறுவதும் ஆணினால் என்பதை வள்ளுவன் அறியவில்லைப்போலும். பெண் புலவர் எனப் பெருமை கொண்ட ஔவையே பெண்களை வார்த்தைகளால் வதை செய்துள்ளார். 'மைவிழியார் மனை அகல்' என ஆத்திசூடியில் கூறிய ஔவை 'மைவிழியார் தம்மனையகன் றொழுகு' என கொன்றை வேந்தனில் கூறியுள்ளார். பெண்ணை விலைமாது என அடையாளப்படுத்தும் ஔவை ஆணைப் பெண்ணிலிருந்து ஒதுங்கி ஒழுக்கமாக வாழப்பணிக்கிறார். ஏன்? ஔவை வாழ்ந்த காலத்தில் ஆண்கள் புனிதர்களாகவே வாழ்ந்தனரா? இல்லை ஆண்களைப் பெண்ணடிமை செய்யத் தூண்டினாரா ஔவை? புரியவில்லை. கணவனுக்கு கீழ்ப் படிந்து வாழவேண்டும் எனவும் கணவனின் இறப்பின்போது உடன் கட்டை ஏற வேண்டும் எனவும் சங்ககால நூல்கள் கூறுவதைக் காணலாம். மகாபாரதத்தில் தாயின் சொல்லைத் தவறாகப் புரிந்துகொண்ட பாண்டவர் திரௌபதையை மணப்பதும் பின்னாளில் துரியோதனன் ஆணையை நிறைவேற்ற மாதவிலக்கோடு இருக்கிறேன் என திரௌபதை கத்தியபோதும் துச்சாதனன் இழுத்துச் செல்வதும் ஆணாதிக்க அசிங்கமல்லவா?

இன்னும் விலைமகள், மைவிழியாள் என ஔவையும் வேசி, பரஸ்திரி, விபச்சாரி, என விவிலியமும் பரத்தை, காதற்பரத்தை, சேரிப் பரத்தை, காமக்கிழத்தி என தொல்காப்பியமும் ஓடுகாலி, விதவை, வாளாவெட்டி, வாயாடி, விபசாரி எனச் சமுதாயமும் பெண்களை இழிந்துரைக்கிறது. இளமையில் ஆடியவள் வயது சென்றும் காலைக் காலை ஆட்டுவா[illegible]வாள். வெள்ளாடு [illegible] பெண்சாதி சொற்கேட்பவர் பேய்போல் அலைவர்.

தாயைச் சந்தையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்க வேண்டுமா? போன்ற பல பழமொழிகள் கூடப் பெண்களை நாளாந்தம் வாழ்க்கையில் இழிவுபடுத்துகின்றன. பெண்களுக்கு மட்டும் கற்புநெறியைப் போதிக்கின்ற பண்டைக்கால நூல்களும் குடும்பங்களில் நிகழ்கின்ற வன்முறைகளும் சமுதாயத்தில் தொடர்ந்தும் அரங்கேறுகின்ற பாலியல் குற்றங்களும் ஆணாதிக்கத்தின் திருந்திய வடிவமே.

பால்நிலையில் பாரபட்சம் கண்ட பாரதி, பாரதிதாசன், காந்தி போன்றோர் பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். பால்நிலை சமத்துவத்தைப் பேணவேண்டும் என வார்த்தைகளால் இடித்துரைத்தான் பாரதி. இதன் விளைவாக பெண்ணடிமையினின்று தம்நிலையுணர்ந்து கிளர்ந்தெழுந்த பெண்கள் கல்வி என்னும் ஆயுதத்தை இறுகப் பற்றினர். இதன் விளைவாக பட்டி, தொட்டி எல்லாம் பரவி நின்றனர். சாதனையின் சிகரத்தில் தம்மை அழகாக அடுக்கடுக்காகப் பதிவு செய்கின்றனர். பெண்களின் முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்க முடியாத ஆண்கள், அவர்களை அடக்கப் பாலியல் பலாத்காரம் என்னும் ஆயுதத்தை ஆணாதிக்கத்தோடு இணைத்துக் கொண்டனர். இதன் விளைவே இன்று பச்சைக்குழந்தை முதல் பொக்கைவாய் கிழவி வரை பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். பெண்சமத்துவம் உடனடியாக வேண்டும். பெண்கள் தமது சொந்தக்காலில் நிற்க வேண்டும். எவருக்கும் அடிமையாக வாழும் நிலை வேண்டவே வேண்டாம். பெண்களுக்கெதிரான வன்முறையிலிருந்து மீள, பாதுகாப்புப் பெற தன்னம்பிக்கையோடு போராட வேண்டும். பணியிடங்களிலும் சாதாரண வாழ்க்கை இடங்களிலும் கூட நிகழ்கின்ற பாலியல் சுரண்டல்களுக்கு பலமான முற்றுப் புள்ளி பெண்களாலேயே இடப்பட வேண்டும். ஆணாதிக்க இச்சைச் ஆளாகி மடியும் கொடுமைகளைச் சுட்டெரி வேண்டும். சமுதாய இழிவுபடுத்தல்க வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். போ பொருள்களாக ஏகபோகமாகப் பெண்க ஏற்கும் மனநிலையை ஆணாதிக்கத் வதை செய்ய வேண்டும்.

ஆக வரலாறு வரலாறாக, காலம் கால பெண்களை வன்முறை செய்ததுபோ பெண்களை சுயமாக நிம்மதியாக மன வோடு வாழவிடுங்கள். வரலாறுகளில் காசங்களில் பெண்களுக்கெதிரான முறைகள் பதிவாகியது போதும். இனிவ விதிசெய்து பெண்களால் ஆண்களும் தாயமும் அனுபவிக்கின்ற வசந்தகாலத் பதிவு செய்யுங்கள். அண்டத்தையே அ யல் தொட்டுச் செல்லும் இவ்வேளையில், கான பெண்கள் ஆணாதிக்கத்தில் மடிவ பெண்ணின்றி பெண்ணின் துணையி பெண்ணின் சுகமின்றி ஆண்களால் போதும் வாழமுடியாது. பெண்ணின் சக்தி முழுமையாக உறிஞ்சுகின்ற ஆண் அவளை முழுமையாக ஆணாதிக்கம் தது முறையானதா? வன்முறைகள் மு பெறத்தவறின் அன்று பெண்களுக்குப் காப்புக்குக் கொடுக்கப்பட்ட தீ ஆண்கள் உணவு சமைக்கப் பயன்பட்டதுபோல, தீ பெண்ணின் உடலிலும் மூச்சிலும் கொண்டு ஆண்மையை எரித்து வி என்பதைப் பெண்களை வன்முறை செ ஒவ்வொரு ஆணும் உணர்ந்துகொ வேண்டும். வன்முறைகள் சமுதாய இருந்து அறவே ஒழிய வேண்டும். ஆ திக்கத்தின் வக்கிர கரங்களில் வதங்கி ம பெண்கள் ஆணினத்துக்கு சபிக்கும் க ஒன்றை உருவாக்காதீர்கள். பெண்க வாழவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# அழகான அம்மாவாக ஸ்ரேயா

'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தில் சிம்புவுக்கு அம்மாவாக நடிக்க சில கதாநாயகிகள் மறுத்த நிலையில், ஸ்ரேயா மட்டும் நடிக்க சம்மதித்தார். சிம்பு, ஸ்ரேயா சம்பந்தப்பட்ட காட்சிகள் இப்போது படமாக்கப்பட்டு வருகின்றன.

சிம்புவுக்கு அம்மாவாக நடிப்பது பற்றி ஸ்ரேயா கூறும்போது, “இந்தப் படத்தில் நான் வயதான அம்மா அல்ல. இளம் வயதுள்ள அழகான அம்மாவாகவே வருகிறேன்” என்றார்!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**இடபம்:** சாதுரியத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும். ஆதாயம் கூடும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும்.

**மிதுனம்:** மனதில் குழப்பம் தோன்றி மறையும். எவருடனும் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. கண்களைப் பாதுகாப்பதில் கவனம் தேவை.

**கடகம்:** உங்களின் நற்குணத்தைச் சிலர் விமர்சிப்பர். பொறுமை மிக அவசியம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**சிங்கம்:** கடந்த காலத் தவறை உணர்ந்து திருந்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகும் போட்டியை, திறம்பட சமாளித்து, இலாபம் காண்பீர்கள். நண்பர்களுடன் இளமைக்கால இனிய நினைவுகளைப் பேசி மகிழ்வீர்கள்.

**கன்னி:** சவாலை ஏற்று, திறம்பட செயற்படுவீர்கள். தடைகளை தகர்த்தெறியும் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பணவரவு கூடும். சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** உங்கள் கருத்தை, மற்றவர் ஏற்கத் தயங்குவர். குடும்ப விடயத்தை, பிறரிடம் பேச வேண்டாம். விடாமுயற்சியால், தொழில், வியாபார நடைமுறை சீராகும். பெண்களுக்கு, வீட்டுச் செலவில் சிக்கனம் அவசியம்.

**விருச்சிகம்:** செயல்களில் நிதானத்தை பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஏற்பட்ட குறைகளை, உடனடியாக சரி செய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். குடும்ப விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** குடும்ப சூழ்நிலையில், அதிருப்தி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். சீரான ஓய்வு உடல் நலனுக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** சமூகத்தில் நல்ல வரவேற்பு கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும். இயன்ற அளவு, தான தர்மத்தில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** சிலர் சுயநல எண்ணத்துடன் உங்களிடம் நெருங்கலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் கவனத்துடன் படிப்பதால், தரத்தேர்ச்சி பெறலாம்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | 5 | | | 2 |
| | 1 | | 7 | | | | | |
| | | | | 9 | 3 | | | |
| | | | | | | | | 7 |
| | 6 | | | | | | | 4 |
| 2 | | | 8 | | 4 | | 1 | |
| | | 3 | | 5 | | 8 | 6 | |
| | | | 4 | | | | 7 | 9 |
| 8 | | | | | 6 | 2 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 3 | 7 | 6 | 2 | 5 | 4 | 9 |
| 6 | 4 | 7 | 5 | 9 | 8 | 3 | 1 | 2 |
| 5 | 9 | 2 | 1 | 3 | 4 | 7 | 6 | 8 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 8 | 5 | 1 |
| 1 | 8 | 9 | 6 | 2 | 5 | 4 | 3 | 7 |
| 4 | 7 | 5 | 8 | 1 | 3 | 2 | 9 | 6 |
| 3 | 5 | 1 | 2 | 7 | 9 | 6 | 8 | 4 |
| 7 | 6 | 4 | 3 | 8 | 1 | 9 | 2 | 5 |
| 9 | 2 | 8 | 4 | 5 | 6 | 1 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கபாலி ஸ்ரையிலடா......



கல்யாண அல்பம் பாக்கும் போது, இப்படித்தான் தோனுதுப்பா இப்பவெல்லாம்...



ஒருத்தன் கபாலியை தியேட்டரில பார்க்கனும் என்கிறான், ஒருத்தன் நெட்ல பார்ப்போம் என்கிறான்.



நானெல்லாம் எந்திரன் படத்தையே போன மாதம் தான் ரீ.வியிலேயே பார்த்தேன்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த உணவை எந்த நேரத்தில் உட்கொள்ள வேண்டும்



### தயிர்

தயிரை பகல் நேரத்தில் உட்கொள்வது தான் நல்லது. அப்படி பகல் நேரத்தில் உட்கொள்வதால், செரிமான செயற்பாடுகள் எளிமையாக நடைபெற்று செரிமான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கலாம்.

தயிரை இரவில் எந்த வடிவிலும் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். இப்படி எடுப்பதால் சுவாசக் குழாய்களைப் பாதித்து, அதனால் சளி, இருமல் போன்ற பிரச்சினையால் அவஸ்தைப்பட வேண்டி வரும்.



### பருப்பு வகைகளை

பருப்பு வகைகளை இரவில் சாப்பிடுவது நல்லது. பருப்பு வகைகளில் நார்ச்சத்துக்கள் வளமாக உள்ளது. இவற்றை இரவில் எடுப்பதன் மூலம் செரிமானத்திற்கு உதவும். மற்றும் கொலஸ்ரோல் அளவைக் குறைக்கவும் செய்யும். மேலும் பருப்பு வகைகள் இரவில் நிம்மதியான தூக்கத்தைப் பெற உதவும்.

பருப்பு வகைகளை காலையிலேயே உட்கொள்ளக்கூடாது. ஏனெனில் இதில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து எளிதில் உணவுகளை செரிமானமடையச் செய்து பசியை அதிகரிக்கும். இதனால் அடிக்கடி எதையேனும் சாப்பிடத் தோன்றும். இதன் விளைவாக உடற் பருமனை அடைய நேரிடும்.



# பலாப்பழ அல்வா

**தேவையான பொருள்கள்**

பலாப்பழம் - 20 சுளைகள்
சீனி - 1 கப்
ஏலக்காய்த் தூள் - கால் கரண்டி
நெய் - தேவையான அளவு

**செய்முறை**

ஒரு கப் வெல்லத்தை தண்ணீர் ஊற்றி கரைத்து வைக்கவும். பலாப்பழத்தை மிக்ஸியில் போட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் நெய் ஊற்றி பலாப்பழச் சுளையைப் போட்டு 3 நிமிடம் வதக்கவும். பின் தண்ணீரில் கரைத்து வைத்துள்ள வெல்லப் பாகை தூசி எதுவும் இல்லாமல் பலாப்பழ விழுதுடன் கலந்து 2 நிமிடங்களுக்கு கிளறி விரும்பினால் ஏலக்காய்த் தூள் போட்டு அல்வா பதத்துக்கு வரும் வரை கிளறவேண்டும். பின்னர் சிறிது நெய் கலந்து கொள்ளவும். விரும்பினால் முந்திரி, திராட்சை சேர்த்துக் கொள்ளவும்

## நாளை

ஆடி-09
ஞாயிற்றுக்கிழமை
-24.07.2016
திதி: பஞ்சமி
மு.இ.10.56 வரை
நட்சத்திரம்:
பூரட்டாதி பி.ப.03.19
ராகுகாலம்:
04.32-06.02 வரை
சுபநேரம்:
09.02-10.32 வரை

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 120 | 40 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 100 | 110 | 120 | 100 | 80 | – | 70 |
| கரட் | 250 | 180 | 200 | 180 | 200 | 160 | – | 140 |
| மரவள்ளி | 100 | 120 | 120 | 80 | 100 | 80 | – | 50 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 120 | 120 | 140 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 250 | 240 | 200 | 160 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 150 | – | 140 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 90 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 110 | 100 | 140 | 100 | 100 | – | 100 |
| பூசணி | 150 | 120 | 120 | 120 | 100 | 100 | – | 130 |
| தக்காளி | 180 | 180 | 140 | 160 | 140 | 150 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 80 | – | 50 |
| கீரை | 25 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 60 | 100 | 80 | 80 | – | 60 |
| கோவா | 150 | 140 | 160 | 160 | 150 | 80 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 60 | 120 | 60 | 80 | – | 80 |
| போஞ்சி | 200 | 140 | 150 | 180 | 160 | 160 | – | 140 |
| லீக்ஸ் | 150 | 140 | 120 | 180 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 25–30 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 120 | 120 | 200 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 200 | 300 | 600 | 300 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 450 | 350 | 360 | 400 | – | 300 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 500 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 800 | 500 | – |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 400 | 400 | 450 |
| முரல் | 300 | 300 | 350 | 400 | 350 | 350 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 600 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 400 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 370 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 150 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 300 | 200 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 350 | 350 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 200 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 300 | 200 | – |

## இது புதுசு




ஆண்களுக்கான கம்பளித் தொப்பிகள் அறிமுகமாகியுள்ளன. மேலை நாட்டு நாகரிக பாணியில் இவை உருவாகியுள்ளன. இவற்றின் விலை 400 ரூபா தொடக்கம் 500 ரூபா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### மகப்பேற்று மருத்துவமனையில் ரோபோ

மகப்பேற்று மருத்துவத்துறையில் ரோபோ பயன்பாடு குறைவு என்பதால் தற்போது அதற்கென பிரத்தியேகமாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ரோபோவை உருவாக்கி யுள்ளனர்.

பாஸ்டனில் உள்ள ஒரு மருத்துவமனையில் ஹரிசோர்ஸ் நேர்ஸ் என்கிற பெயரில் பயன் பாட்டில் உள்ள இந்த ரோபோ 10 நர்ஸ், 20 நோயாளிகள், 20 அறைகளை ஒருங் கிணைத்து பணி செய்கிறது.

இக்கட்டான நிலமையில் மருத்துவர்கள், நர்ஸ்கள் என்ன முடிவெடுக்க வேண்டும் என் பதை உடனிருந்து ஆலோசனை வழங்கு கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.





### புதிய தொழில்நுட்பத்தை கையாளவுள்ள பேஸ்புக்

இணைய வசதியை அனைவருக்கும் வழங் கும் முயற்சியில் களமிறங்கியுள்ள பேஸ்புக் நிறுவனம் லேசர் தொழில்நுட்பத்தைக் கொண்டு அதனைச் சாத்தியமாக்க முயற் சித்து வருகிறது.

கம்பிவழி அதிவேக தகவல் பகிர்வு வலை யமைப்புகளில் (highdspeed wired communication) பொதுவாகத் தகவல் களை அனுப்புவதற்கு லேசர் தொழிநுட்பம் பயன்படுத்தப்படும்.

அதேசமயம் கம்பியில்லா நுட்பம் மூலம் தக வல் பரிமாற்றம் செய்கையில் அலை வரிசை கள் அல்லது நுண்ணலைகள் பயன்படுத் தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பேஸ்புக் நிறுவனம் ஒரு ஒளிரும் பொருள்களின் மீது லேசரைச் செலுத்தி அதன் மூலம் இணைய சேவையை வழங்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

உலகம் முழுவதும் 4 பில்லியன் மக்கள் இணைய வசதி இல்லாமல் இருக்கும் நிலை யில், இந்தத் தொழில்நுட்பம் மூலம் அவர் களுக்கு இணைய வசதியை அளிக்க முடி யும் என்று அந்த நிறுவனம் நம்பிக்கை தெரி வித்துள்ளது. (கு)

# இலங்கையில் தொழில் முனைவோரை வலுப்படுத்தும் மக்கள் வங்கி ஸ்மைல் 3

இலங்கையின் பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத அங்கமாக சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்கள் நீண்ட காலமாக இருக்கின்றன. புத்தாக்கம் மற்றும் புதிய எண்ணங்களுக்கான வினையூக்கியாக செயற் படும், இந்தத் தொழில்களும், மக்களும் வங்கியின் வர்த்தக பண்பாட்டின் மிகவும் முக்கியமான பாகமாக உள்ளன.

கடந்த 54 வருடங்களாக சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்களுக்கு நிலையான மூலமாக கடன் மூல தனத்தை வழங்கும் நோக்குடன் பல்வேறு கடன் திட் டங்களை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடன் இணைந்து மக்கள் வங்கியினால் ஆர்வமிகு தொழில்முனை வோர் சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதற்கு ஸ்மைல் 3 எனப் பெயரிடப்பட்ட புதிய திட்டம் ஒன்று அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.




புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வர்த்தகச் செயற் பாடுகளில் முன்னேறும் தொழில்முனைவோருக்கு பெறுமதி மிக்க உள்ளடக்கம் மற்றும் வர்த்தகச் சூழலை வழங்கும் ரூ. 25 மில்லியன் வரையான கடன்களைப் பெறுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் களுக்கு ஸ்மைல் 3 வசதியளிக்கும்.

விவசாயம், அபிவிருத்தி தொழிற்சாலைகள் போன்ற துறைகளை மேம்படுத்துவதும், கிராம மக்களின் அடிப் படை நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் ஆரம்பித்த நாள் முதலாய் வங்கியின் நோக்கமாக உள்ளன. வங்கியானது தமது நோக்கத்தை பெருமளவு பூர்த்தி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் கடன்கள் உதவியுள்ளன. பத்து வருடங்கள் என்ற அதி கூடிய மீள்செலுத்தல் காலப்பகுதியுடன், வருடம் ஒன் றுக்கு 8வீதம் என்ற நிலையான மற்றும் மாறும் வட்டி வீதத்துடன், ரூ. 25 மில்லியன் வரை கடன் பெறுவதற்கு ஸ்மைல் 3 வசதியளிக்கின்றது. அத்துடன், தேவையின் அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு கடன் பெறு பவர்கள் வட்டியை மட்டும் செலுத்துவதற்கான சலு கைத் திட்டத்தையும் வழங்குகின்றது. தமது தொலை நோக்குக்கு அமைய மக்கள் வங்கியானது சமுதாயத் தினை தொடர்ந்து மேம்படுத்தும்.

தேயிலை, தேங்காய் நார், இறப்பர், சப்பாத்துகள், உணவு உற்பத்தி, சில்லறை மற்றும் ஆடைகள், ஆயுள்வேத மருந்து, தொழில்நுட்பம், மாணிக்கக்கல் மற்றும் நகை கள், கைத்தறி மற்றும் கைவினைப்பொருள்கள், பொதி யிடல், நறுமணப் பொருள் கள், பலகை மற்றும் இரும்பு உற்பத்தி மற்றும் இலத்திரனியல் போன்ற பிரிவுகளில் தொழில் களுக்கு இந்தக் கடன் திட் டம் ஆதரவளிக்றுறுகும். நிலையங்கள் மற்றும் நாடெங்கிலும் உள்ள கிளை களின் ஊடாக ஸ்மைல் 3 கடன் திட்டம் தொடர்பான தக வல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆலோசனை சேவைகள் மற்றும் வேகமாக ஆவணப் பணிகளை செயற்படுத்தல் ஊடாக அணுகும் வசதியை வழங்கு வதற்கு இந்த நிலையங்களில் ஊழியர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தொழில் உள்ள மற்றும் செயற்படுத்தும் தொழில்முனை வோருக்கு ஆலோசனை சேவைகளை மக்கள் வங்கி வழங்குகின்றது. இந்தத் துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்களை மேம்படுத்து வதற்கு அயராது உழைப்பதன் மூலம் இலங்கைப் பொரு ளாதாரத்தின் மேம்பாட்டில் மக்கள் வங்கியானது தொடர்ச்சியாக முக்கிய பங்கை வகிக்கின்றது. (த்)

## சர்வதேச மீன்பிடிக் கண்காட்சியில் பங்கேற்க இலங்கைக்கு அழைப்பு

நோர்வே ட்ரொண்டிம் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச மீன்பிடித்துறைக் கண்காட் சிக்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நோர் வேயின் தூதுவரால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த கண்காட்சியின்போது சர்வதேச கடலுணவு ஏற்று மதி தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.

அண்மையில் இலங்கைக் கான கடலுணவுப் பொருள் களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கி இருந் தது.

இந்த நிலை யில் குறித்த கண்காட்சி முக்கியமான வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. (த்)

வணிகம்

## குவைத்தில் வாழிக்கையாளர்களை கௌரவித்தது கொமர்ஷல் வங்கி




புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கு கொமர் ஷல் வங்கி வழங்கிவரும் சேவைகளுடன் தொடர் புடைய பிரமுகர்களை வர வேற்றுக் கௌரவிக்கும் இரு நிகழ்வுகளை அண்மையில் குவைத்தில் நடத்தியதாகக் கொமர்ஷல் வங்கி தெரிவித் தது.

முதலாவது நிகழ்வு குவைத் நகரில் உள்ள ரெடிஸன் புளூ ஹோட்டலில் இடம்பெற் றது. குவைத்தில் உள்ள இலங் கைத் தூதுவர் காண்டீபன் பாலா இதில் கலந்துகொண்டார். குவைத்தில் வெவ்வேறு துறைகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் பலரும், வங்கியின் பங்காளிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர் எனக் கூறப்பட்டது.

கொமர்ஷல் வங்கியின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றி அங்குள்ள வர்களுக்குத் தெளி வான விளக்கம் அளிக் கும் வகையிலும் அவர் களை இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்ளத் தூண்டும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இரண்டாவது நிகழ்வு குவைத்தில் உள்ள நாணயமாற்று நிலையங்களில் ஆதரவு சேவைகளை வழங்கும் இலங் கையர்களைப் பாராட்டிக் கௌரவிக் கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. குவைத்தில் உள்ள கிரவுன் பிளாஸா ஹோட்டலில் இந்த வைபவம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுகளில் கொமர்ஷல் வங்கி யின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். ரெங்கநாதன் உட்பட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர். குவைத் தில் சுமார் 150,000 இலங் கையர்கள் தொழில் புரிவதால் பணம் அனுப்பும் சந்தையில் அந்த நாடு பிரதான இடம் வகிக்கின்றது. இவர்களுக் குத் தேவை யான சேவைகளை வழங்குவதற்காக கொமர்ஷல் வங்கி 13 பங்காளி நாணய மாற்று இல்லங்களோடு தொடர்பு பட்டுப் பணியாற்றுகின்றது. (த்)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| | | 22/7/2016 | | |
| | | www.cse.lk | | |
| [illegible] | | [illegible] | [illegible] | |
| ASPI | ⇧ | 11.31 | 6,428.77 | 6,417.46 |
| S&P SL20 | ⇧ | 1.43 | 3,428.58 | 3,427.15 |
| வியாபாரப்புரள்வு | | | 619,984,000 | 585,725,760 |
| உள்நாடு- கொள்வனவு | | | 536,116,512 | 345,846,688 |
| விற்பனை | | | 534,968,928 | 387,603,680 |
| வெளிநாடு- கொள்வனவு | | | 83,867,464 | 239,879,088 |
| விற்பனை | | | 85,015,056 | 198,122,096 |

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | CSEC.N | 21.30 | 6,925,299 | 145,432,179 |
| செலான் வங்கி | SEYB.X | 67 | 1,394,341 | 93,462,929 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 130 | 239,350 | 31,114,914 |
| [illegible] | GRAN.N | 81.4 | 376,394 | 30,758,810 |
| [illegible] | LOLC.N | 82 | 370,500 | 30,381,000 |
| [illegible] | DIST.N | 234.00 | 108,507 | 25,426,706 |
| [illegible] | BFL.N | 173 | 105,303 | 18,468,329 |
| [illegible] | JKH.W | 6.9 | 1,734,398 | 12,193,962 |
| [illegible] | AEL.N | 23.2 | 502,878 | 11,709,657 |
| [illegible] | TAFL.N | 139 | 76,361 | 10,673,185 |




அறிவித்தல்கள் -

பங்குலாபம்
லங்கா ஐ.ஓ.சி (LIOC) - பங்கு ஒன்றுக்கு Rs. 1.25

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 225 |
| விலை உழைப்பு | 13.2 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தல்செவன

அமைப்பினர், காங்கேசன்துறை நோக்கிச் சென்றனர்.

இதன்போது மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிலை அடுத்துள்ள இராணுவ தடுப்பு அரண்களுக்கு முன்பாக வடக்கிற்கான இளைஞர் அமைப்பினரைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தடுத்தனர். தல்செவனவில் கவனவீர்ப்பு போராட்டம் செய்தால் கைது செய்யப்படுவீர்கள் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததாக போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

"வவுனியாவில் இருந்து எங்களைப் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்தனர். யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தலையிட்டு கைது செய்வதாக மிரட்டுகின்றார்கள். நல்லாட்சி அரசில் இவைதான் நடக்கின்றன. கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்வதற்கு தடைவிதிக்கின்றார்கள். அத்தோடு காணிகளுக்கான ஆவணங்களை மக்கள் கொண்டுவந்தால் தாங்கள் காணிகளை விடுவதாக கூறுகின்றார்கள். மக்களுடைய காணிகளுக்கும் பொலிஸாருக்கும் என்ன தொடர்பு உள்ளது. பொலிஸாருடைய இந்த விடயங்கள் கண்டிக்கத்தக்கது." இவ்வாறு வடக்கிற்கான இளைஞர் அமைப்பினர் தெரிவித்தனர். (வ-21,ரி5)

(மற்றொரு செய்தி பக். 9)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தண்டராசா

**(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்-தபாலகம் வட்டுக்கோட்டை)**



அராலி மத்தி, வட்டுக்கோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தண்டராசா கடந்த (20.07.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அமுதபிள்ளை தம்பதியரின் மகனும் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான தர்மராசா (மலேசியா), தங்கரத்தினம், தங்கராஜா(மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசலச்சுமி (மலேசியா), காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் சரஸ்வதி (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் வைத்தீஸ்வரன் (கனடா), மனோரஞ்சிதம் (ஆசிரியர்-அ.மி.த.க. பாடசாலை,அராலி வடக்கு), சுதாகரன்(கனடா), கிருபாகரன்(ஆசிரியர்-இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிறிசெல்வராணி (கனடா), சற்குணராஜா (M.R.S), நந்தினி(கனடா), சுஜித்தா(ஆசிரியர்-அ.மி.த.க.பாடசாலை, அராலி கிழக்கு), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதிபூரனன், கஜன், சங்கவி, டிராகவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 7754560**

## மரண அறிவித்தல்

# தியாகராசா சற்குணம் (JP)

தோற்றம்
01
.
02
.
1930



மறைவு
19
.
07
.
2016

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும் யாழ். கைதடியையும், அதன்பின் பிரித்தானியாவில் Ilford ஐயும் வசிப்பிடமாகக் கொண்ட தியாகராசா சற்குணம் (செட்டி-இலங்கை நெடுஞ்சாலை துறையின் முன்னாள் தொழில்நுட்பஊழியர்), கடந்த (19.07.2016) செவ்வாய்க் கிழமை பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், சுமித்திரன், துஷ்யந்தி, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உமா, நிர்ம லன், ஷாந்தி ஆகியோரின் மாமனும், இனோஷ், ஏகா, ஹரினி, சௌம்யா, ஷாரிகா, கௌதிக் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சத்யலஷ்மி காலஞ்சென்ற மயில்வாகனம் (மானா), ராஜலஷ்மி (கிளி), கங்காதேவி ஆகியோரின் சகோதரனும், சுப்பிர மணியம், தெய்வ நாயகி, காலஞ்சென்ற ராசம்மா ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

viewings: H.L Hawes & Son Ltd 106 Tanners Lane Bankingside Essex IG6 1QE Saturday 23rd July 2016 From 8.30am to 4.30 pm Funeral Arrangements 24th July 2016 Prayers from 8.30-11.30 at the Shri Guru Ravidass Sabha Temple Carlyle Road Manor Park London E12 6BN Cremation Service Service Starts at 12 Manor Park Cemetery and Cremattorium Sebert Road, Forest Gate, London E7 ONP Followed by Lunch at Blake Hall Club Blake Hall Road East

**Contacts: Sumi 0044 7956202027**
**Sendoor: 0044 77943419472**
**Nirmalan: 0044 7850999999**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**31**
.
**03**
.
**1942**



**மறைவு**
**23**
.
**06**
.
**2016**

## அமரர் பொன்னுத்துரை பரமநாதன்

கடந்த 23.06.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.07.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பபைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**40, யமுனா வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**விஷ்ணு (மகன்-விஷ்ணு நகைத் தொழிலகம்)**
**224/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 077 7293676**

## மரண அறிவித்தல்

# திருமதி கமலாதேவி பாலகிருஷ்ணன்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பாலகிருஷ்ணன் 19.07.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்- தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் பாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், திருமதி வி.கலாவதி (ஜேர்மனி), கோபிரமணா (ஆசிரியர்), திருமதி.ஞா.அனுஷா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயும், மு.விக்னேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி.கோ.சியாமினி (ஏழாலை), ச.ஞானறாஜன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷிகா (ஜேர்மனி), வினோஜிகா (ஜேர்மனி), கோகுலன் (ஏழாலை),கோவர்த்தினி (ஏழாலை), லக்ஷயா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சி.இராமச்சந்திரன், சி.தெய்வநாயகி, மு.வள்ளிநாயகி, சி.வரதராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆ.கமலாம்பிகை, கு.ஞானாம்பிகை, ஆ.இராதாகிருஷ்ணன் மற்றும் திருமதி.சி.லோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கம்பனை,**
**சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.**

(J/3135)
(11,17,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 669 0232, 077 959 3159**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vavuniya Campus of the University of Jaffna, Sri Lanka.
# Procurement Notice for the Cleaning and Janitorial Services 2016/2017

The Chairman of the Regional Procurement Committee, on behalf of the Vavuniya Campus of the University of Jaffna invites sealed bids from the competent registered Business Organizations, having minimum of three years experience in providing Cleaning and Janitorial Service, to provide the Cleaning and Janitorial service for Vavuniya Campus of the University of Jaffna, at two locations; Vavuniya Town and Pambaimadu up to 3.00 pm on 15.08.2016.

Bids received will be opened soon after the closing of bids at 3.00 pm on 15.08.2016 at the Board Room of the Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya. Bidder or an authorized representative is allowed to be present at the time of opening of bids.

Bidding documents could be purchased from 25.07.2016 to 10.08.2016 between 09.00 a.m to 2.30 p.m on working days from the office of the Assistant Registrar, Administration of the Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya on producing the receipt for the cash payment of a non-refundable fee of Rs.2,000/- made to the Shroff of the Vavuniya Campus, or application forms could also be downloaded from the Vavuniya Campus website (***http:www.vau.jfn.ac.lk***) by accompanying the payment of non-refundable fee of Rs.2,000/- paid to any branch of the Bank of Ceylon by using the Bank of Ceylon cash deposit slip drawn in favour of Vavuniya Campus of the University of Jaffna in the Bank of Ceylon Account No. 0002364602 (Vavuniya Branch).

Pre-BID meeting is scheduled to be held on 08.08.2016 at 10.00 am at the Board room of the Vavuniya Campus.

Perfected sealed bids marked as "Bid for the provision of Cleaning and Janitorial service 2016/2017 for Vavuniya Campus" on the top left hand corner of the envelope in duplicate including the receipt/ bank deposit slip of a non-refundable fee of Rs. 2,000/- should be addressed to Chairman, Regional Procurement Committee, Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya and should reach Vavuniya Campus on or before 3.00 p.m on 15.08.2016 by registered post OR placed in the bid box kept in the Administration Branch of the Vavuniya Campus, Park Road, Vavuniya.

Bidders are advised to visit each location before quoting prices.

If you need any clarification, may contact the Assistant Registrar, Administration

T.P. No: 024-222 3316.

**Chairman,**
**Regional Procurement Committee**
**Vavuniya Campus of the University of Jaffna,**
**Park Road, Vavuniya.**
**22.07.2016**

(C/[illegible]) ([illegible])

## மரண அறிவித்தல்
## இராசப்பு இராசசூரி



புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி கிழக்கு வத்திராஜன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசப்பு இராசசூரி கடந்த (21.07.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசப்பு-எலிசபெத் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அம்பிகாபதியின் அன்புக் கணவரும் சாள்ஸ்(கனடா), சாளினி(நோர்வே), சாந்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சனின் அன்பு மாமனும் குணசாந்தம்மா, லூர்த்தம்மா, இராசமணி, காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் பவளம், சின்னமணி, லில்லி, அற்புதம், ராசா (கனடா), செல்வம், காலஞ்சென்றவர்களான பசுங்கிளி இன்பம் மற்றும் றூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான இந்திராணி, பசுபதிஅம்மா மற்றும் பாலச்சந்திரன் (நோர்வே), திருஞானசம்பந்தர் (நோர்வே), பாலசுந்தரம்(டென்மார்க்), மகேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான இராசப்பு, அவுராம் பிள்ளை மற்றும் சிங்கராஜர் காலஞ்சென்ற மணியம் மற்றும் சிங்கராஜதுரை, அருளானந்தம், ஜான்சி ராணி (கனடா), ஜோய்சி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக 25.07.2016 திங்கட்கிழமை செம்பியன்பற்று பிலிப்புநேரியார் தேவாலயத்தில் காலை 9.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் பிலிப்புநேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வத்திராஜன் தெற்கு,**
**தாளையடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 3496101**

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி (பூமணி) இரங்கநாதன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோயிலடி, தாவடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி (பூமணி) இரங்கநாதன் நேற்று முன்தினம் (21.07.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரங்கநாதனின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் கமலராணி, ஜெயராணி, புஸ்பராணி (ஆசிரியை, விநாயகர் முன்பள்ளி, தாவடி), நகுலேஸ்வரன், விஜயலட்சுமி, ஜெகதீஸ்வரன் (காந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாம்பிகை, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் தவராசா, லோகேஸ்வரன் (பவா), ஜெயலட்சுமி, யோகரத்தினராசா, ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன் (Abi Fashion World), மயூராஜ், காலஞ்சென்ற மகீசன் மற்றும் மதுஷன் (Damro), நிவேதா, சுவேதா, விஜிதா, அனித்தா, அனுராஜ், நர்மதா, நரேன், அபர்ணா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜனார்த்தனன், சுரேன் (ஆசிரியர், மன்/சித்தி விநாயகர், இந்துக் கல்லூரி), சுஜீபன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி), தக்ஷாயினி (விரிவுரையாளர், பொறியியற் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), சுரேஷ், சுபா ஜினி, விசாகன், யோவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிராம், அனுராம், அக்ஷயன், யதுசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.07.2016) வெள்ளிக்கிழமை தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் கோயிலடி,**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்

குருதி வெள்ளம் ஓடியது. அந்தக் கசப்பான அனுபவங்கள் மறக்கப்பட்டு சமாதானமும், நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்படும் சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நல்லிணக்கத்தை அரசால் மாத்திரம் ஏற்படுத்திவிட முடியாது. நல்லிணகத்தை ஏற்படுத்த மதகுருமார் முதல் நாட்டில் வாழும் அனைத்துக் குடிமக்களும் கைகோர்க்கவேண்டும். இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் சுதந்திரமாக வாழ்வதே நல்லிணக்கம். அதனையே அரசு செய்ய முயற்சிக்கின்றது.

நான் ஒருபோதும் நல்லிணக்கத்துக்கு எதிரானவன் அல்லன். 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோதும் மற்றும் பல சந்தர்ப்பங்களின்போதும் என் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தற்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பில் ஊடகங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இன்று சமூகத்தில் விதைக்கப்படும் கருத்துக்கள் பெரும்பாலும் ஊடகங்களால் கொண்டுசெல்லப்படுபவையாகும். நல்லிணக்கம் ஏற்படுமாயின் மீண்டும் இந்த நாட்டில் போர் ஏற்படாது. ஊடகங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் தெற்கிலும், வடக்கிலும் வேறுபட்டவையாக உள்ளன.

தெற்கில் உள்ள பத்திரிகைகள் சிங்களவர்களைத் தூண்டுகின்றன. வடக்கிலுள்ள பத்திரிகைகள் தமிழ் மக்களைத் தூண்டுகின்றன. ஆனால், அதுவல்ல உண்மை. செய்திக்குப் பதிலாக எழுதுபவர்களின் அபிப்பிராயங்களே அதிகம் உள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்குச் சிங்கள மாணவர்களைத் தூண்டியது நான் எனச் செய்திகள் வெளியிடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் எனக்கு எதுவுமே தெரியாது. இவ்வாறான கருத்துக்கள் இனவாதத்தை மீண்டும் தூண்டும். நயினாதீவில் புத்தர் சிலையை உருவாக்குவதும் நான் என்கின்றனர். எனக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு பொய்யான செய்திகள் வெளியிடப்படுவதால், என்னைப் பற்றிய தப்பான அபிப்பிராயம் தமிழர்கள் மத்தியில் தோற்றுவிக்கப்படும் என்பதுடன், என்னை இனவாதியாகப் பார்ப்பார்கள். யாழ். பல்கலைக்கழகப் பிரச்சினையைத் தமிழ் மாணவர்கள் தான் ஆரம்பித்தனர் என நான் கூறியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அவ்வாறு நான் சொல்லவில்லை. யார் செய்தாலும் தவறு தவறுதான் என்றுதான் தெரிவித்தேன் - என்றார். (வ-4)

## கொன்ஸ்ட

அடையாளம்காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நள்ளிரவு 11.50 மணி யளவில் சங்குப்பிட்டி பாலத்துக்கு அண்மையில் சடலம் ஒன்று இருப்பதாக பூநகரி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கிடைத்தது. அங்கு விரைந்த பொலிஸார் தலை சிதைந்த நிலையில் காணப்பட்ட கொன்ஸ்டபிளின் சடலத்தை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

அதிகாலையில் தொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் சங்குப்பிட்டிக் கடற்கரையில் ஒரு சடலம் கிடப்பதாக அறிவித்தனர். விரைந்த பொலிஸார், நீதிவான் விசாரணையின் பின்னர் அந்தச் சடலத்தையும் மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இவர்களின் இறப்புக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். விபத்தாக இருந்தால் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டும் பொலிஸார், மோட்டார் சைக்கிள்களில் பாதிப்பு அதிகம் இல்லை என்று தெரிவித்தனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் சங்குப் பிட்டி பாலத்திற்கு அருகில்நடந்த விபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். (வ-21, 101, 9, ரி3)

**வேலை ஆள்கள் தேவை**
இணுவிலில் மில் வேலைக்கு பெண் வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு. 0778893415, 0214919780

**விற்பனைக்கு**
கலப்பின ஊர்க்கோழிக் குஞ்சுகள், தனி கழுத்து வெட்டி, Nel Farm முட்டைக் கோழிக்குஞ்சுகள், புறொய்லர் குஞ்சுகள், எம்மிடம் முற்பதிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு. 0775315382

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் பஸ் ஆசன பதிவகத்திற்கு தங்கி நின்று ஆசன பதிவுகளை மேற்கொள்ள ஆள்கள் தேவை.
குறிப்பு: தங்கும் இடம் இலவசம்.
ஆண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு : 0773258492

**10% தொடக்கம் 50% வரையான விலைக்கழிவு**
வெளிநாட்டு உறவுகளே!
என்றும் நம்ப முடியாத விலைகளில்
- கல்வி சம்பந்தமான பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரையான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்.
- முன்னணி எழுத்தாளர்களின் எல்லா வகையான அரிய படைப்புக்களும் மலிவு விலையில்.
- ஆய்வுகூட உபகரணங்கள், பேப்பர் வகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், எழுதுகருவிகள், அலுவலக உபகரணங்கள், பினானல் போட்கள், வைற்போட்கள், பிலிப்சாட் போட்கள்,
- புறொயெக்டர்கள், இசைக்கருவிகள் ...

எந்த வகையான அன்பளிப்புபொருள்கள், நன்கொடை வழங்கும் பொருள்கள் எதுவானாலும் நாட வேண்டிய இடம்....
**ஆல் சிலோன் டிஸ்ரியியூட்டர்ஸ்**
இல. 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:021 222 5542 acdil@ymail.com

## மரண அறிவித்தல்



### நடராஜா விசாகப்பெருமாள்

(இளைப்பாறிய இ.போ.ச.நடத்துநர் - பருத்தித்துறை)

பருத்தித்துறை, பூதராயர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராஜா விசாகப்பெருமாள் கடந்த (20.07.2016) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - இராசமணி தம்பதியரின் அருமை மருமகனும், இலட்சுமிப்பிள்ளை (செல்லக்கிளி) அவர்களின் நேசமிகு கணவரும், இராசேந்திரம், மகேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரரும், திருமதி கிருஸ்ணநாதன் இராசயோகம், காலஞ்சென்றவர்களான விஜயலக்ஸ்மி இராசேந்திரம், தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், விஜயசேகர் (கனடா), விஜயசுதா (கனடா), விஜயகீதா (ஜேர்மனி), விஜயமாலினி (டென்மார்க்), விஜயபிரகாஷ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தி (கனடா), சிவகுமார் (கனடா), கிருஸ்ணதாஸ் (ஜேர்மனி), கணேசலிங்கம் (டென்மார்க்), உஷாநந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், விஜயராஜ், சுமித்திரா, துளசிதாஸ், நகுலதாஸ் ஆகியோரின் பெரியப்பாவும், நிர்மலனின் தாய்மாமனும், சாமினி, அஸ்வின், லக்ஷன், நிதர்சினி, அஜய், ஹரிஸ், கபிஷ், தனிஷ், துஷாகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு காலை 9.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(c 24392) (13.18) **021 226 0341 / 075 076 1094**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் நா.ஹரிதரன்
(உரிமையாளர் - ராதா ரெக்ஸ் சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
**மாரிமுத்து நாகையா**

அவர்கள் 20.07.2016 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

**மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு**
**பொது வேலையாட்கள்**
சேவைகளும், நிபந்தனைகளும்
- ★ மூன்று வருட ஒப்பந்தம்
- ★ சம்பளம 900RM + 07676 = 1576 RM
- ★ தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும். மாதாந்தம் 50 RM அறவிடப்படும்.
- ★ சாப்பாடு சம்பளத்தில் உள்ளடக்கப்படவில்லை.
- ★ வேலை நேரம் 09 மணித்தியாலங்கள்
- ★ 01 மணி ஓய்வுநேரம்
- ★ மேலதிக வேலைநேரம் (Over.time) 6.50 RM மணித்தியாலத்திற்கு.

**SULAIMAN INTERNATIONAL TOURS & TRAVELS**
7 1/1, Mihindu Mawatha, Colombo 12. Sri Lanka.
Tel : +94 114383170, 114492161 Fax : +94 114383170.
Mob : 072 7661662, 077 8889974
Web: www.sulaimaninternational.lk,
Email: info@sulaimantours.lk
L.LNO:3078

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வினி மகாலிங்கம்



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் ஒஸ்க்கா லேன், உரும்பிராய் தெற்கையும், மட்டுவில் தெற்கையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வினி மகாலிங்கம் 21.07.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந் தார்.

அன்னார் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கத்தின் (பப்பா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான செல்வவதி, சிவசோதி, கமலாட்சி ஆகியோரின் சகோதரியும், சுகந்தி (ஜேர்மனி), சத்தியா (ஜேர்மனி), நித்தியா (சுவிஸ்), பிரதீபன் (பிரான்ஸ்) காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பருத்தித்துறைறோட்,**
**மட்டுவில் தெற்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(ஜே. 3138) (13.18)

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜாதேவி நடராஜா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், படித்த மகளிர் திட்டம் மிருசு விலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜாதேவி நடராஜா 20.07.2016 புதன்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு -ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராஜாவின்(ஓய்வுநிலை பொலிஸ் அதிகாரி) அன்பு மனைவியும், கவிதா, அஜந்தா (ஜேர்மனி), அச்சுதன் (கொமர்ஷல் கிரடிட் கம்பனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நல்லகுருநாதன், ஈஸ்வரன்(ஜேர்மனி), தாரணி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தாளன் (ஆசிரியர்), டயதுனா, டினாளன், கிருத்திகா, பிருந்தாளன், கிதுஷா, கிஷானி, பிரக்ஷா, நர்த்தகி, ஜக்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கமலராணி, காலஞ்சென்றவர்களான மல்லிகாராணி, மனோன்மணி தேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியள வில் படித்த மகளிர்த்திட்ட இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**படித்த மகளிர் திட்டம்,**
**மிருசுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 553 4434, 021 227 1524**

## சிம்பாப்வேயில் நியூசிலாந்து

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்காக அந்த நாட்டுக்குச் சென்றுள்ளது வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் இந்தத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஒரு வாரத்துக்கு முன்னதாகவே நியூசிலாந்து அணி சிம்பாப்வேக்குச் சென்றுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர்களைச் சிறப்பாக எதிர்கொள்ளவும், ஆடுகளங்களின் தன்மை தொடர்பாக அறியவும், வீரர்கள் நீண்ட இடைவெளியின் பின்னர் போர்முக்குத் திரும்பவும் சிம்பாப்வேக்கு எதிரான தொடர் உதவும் என நியூசிலாந்தின் தலைவர் வில்லியம்சன் தெரிவித்தார். (ம)





## ஒலிம்பிக்கில் தாக்கத் திட்டம்; ஐ.எஸ். ஆதரவாளர்கள் கைது

ரியோ ஒலிம்பிக் தொடரில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகத் தெரிவித்து பிரேஸில் பொலிஸாரால் சிலர் கைது செய்யப்பட்டனர்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் தம்மால் தாக்குதல் நடத்தப்படும் என கடந்த வருடமே ஐ.எஸ். அமைப்பினர் எச்சரித்தனர். ஆரம்பத்தில் இந்த எச்சரிக்கை பெரிதாக எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலும் பிரான்ஸின் பரிஸ் நகரில் ஐ.எஸ். அமைப்பினர் இரண்டு பெரும் தாக்குதலை அரங்கேற்றிய பிற்பாடு, ரியோ ஒலிம்பிக் தொடருக்கு வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. மட்டுமல்லாமல் அந்த நாட்டில் இணையத் தளங்களும் கடுமையாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவான 29 நபர்களைக் கொண்ட ஒரு குழு பிரேஸிலில் உருவாகியுள்ளமையும், அவர்கள் ரியோ ஒலிம்பிக் தொடரில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டமையும் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தக் குழு தொடர்பான விவரங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டு வந்தன. அந்த 29 நபர்களும் மிகவும் நுணுக்கமாக அவதானிக்கப்பட்டனர். இதனையடுத்து அவர்களில் பத்துப் பேர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். ஏனைய 19 நபர்களையும் தேடும் பணி தொடர்கிறது.

"தாக்குதல் நடத்த தற்காப்புக் கலை, வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களை கையாள்வது குறித்து பயிற்சி தொடங்கவேண்டும் என்று அவர்களுக்குள் பேசிக்கொண்டனர். இது நடந்து கொண்டே இருந்தது. அவர்களில் ஒருவன் பராகுவேயில் உள்ள ஆயுத விற்பனை கும்பலுடன் தொடர்பு கொண்டு ஏ.கே. 47 துப்பாக்கி வாங்க கேட்டுக்கொண்டுள்ளான்" என்று பிரேஸில் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## உருத்திரபுரம் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், ஜூலை 23

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உருத்திரபுரம் வி.கழக அணி வென்றது. எவரெஸ்டின் மைதானத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கோக்லியின் சதத்தால் இந்தியா பலமான நிலை

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின முதலாம் நாள் முடிவில் இந்தியா 302-4 என்று வலுவான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ரோகித் சர்மா, லோகேஸ் ராகுல், ஜடேயா மூவரும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் சேர்க்கப்படவில்லை. தவான், புஜாரா, மிஸ்ரா மூவருமே கோக்லியின் தெரிவாக அமைந்திருந்தனர்.

ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் முரளி விஜய். ஏழே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் விஜய். புஜாரா, தவான் இருவரும், இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதில் தவானின் பங்களிப்பே அதிகம். அதிகம் நிதானித்தார் புஜாரா. 16 ஓட்டங்களுடன் புஜாராவை வெளியேற்றினார் பிஸ்கூ.

வந்தார் கோக்லி. கூடவே தீவுகளுக்கு ஆபத்தும் வந்தது. ஆடுகளத்துக்கு ஏற்ப தன்னைத் தயார்ப்படுத்த வழக்கம்போல் அவருக்கு நீண்ட நேரம் எடுக்கவில்லை. தவான், கோக்லி இணை துல்லியமான ஓர் இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. அதிரடியும் அல்ல. அளவுக்கு அதிக நிதானமும் அல்ல. பந்துப்பரிமாற்றத்துக்கு நான்கு ஓட்டங்கள் என்ற சராசரியைப் பேணத்தக்க வகையிலான ஆட்டம். இருவரும் அரைச் சதம் கடந்தனர்.

84 ஓட்டங்களுடன் தவானையும் வெளியேற்றினார் பிஸ்கூ. ரகானேயும் பிஸ்கூவின் சுழலில் சிக்க களமிறக்கபட்டார் அஸ்வின்.

23 பந்துப் பரிமாற்றங்கள் எஞ்சியிருந்தது. சஹா களமிறங்க வேண்டிய நேரத்தில் அஸ்வின் களமிறக்கப்பட்டார். வர்ணனையாளரான சுனில் கவாஸ்கர் ஆரம்பத்தில் இதை எதிர்த்திருந்தார். இருப்பினும் அஸ்வினின் சிறப்பான துடுப்பாட்டத்தையடுத்து அவர் அஸ்வினின் களமிறக்கத்தை ஏற்றுக் கொள்ளவும் செய்தார்.

சதம் கடந்தார் கோக்லி. இருவரதும் இன்னிங்ஸில் பதட்டம் இல்லை. முதல் நாள் முடிவில் இந்தியா 302-4 என்றுள்ளது. கோக்லி 143 ஓட்டங்களுடனும், அஸ்வின் 22 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## கரீபியன் பிரீமியர் லீக்கை கைவிடுகிறார் வில்லியர்ஸ்

கரீபியன் பிரீமியர் லீக்கை கைவிட்டு உடனடியாக நாடுதிரும்புமாறு வில்லியர்ஸ், பார்நெல், ஸ்ரெய்ன் மூவரையும் உத்தரவிட்டது தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை.

தென்னாபிரிக்க வீரர்களான வில்லியர்ஸ், பார்நெல், ஸ்ரெய்ன் மூவரும் நடைபெற்றுவரும் கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் விளையாடி வருகின்றனர். இந்த மாத இறுதியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் வருடாந்த விழா நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக உடனடியாக நாடு திரும்புமாறு மூவருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)





## இங்கிலாந்து வரும்; மோர்ரசா நம்பிக்கை

பங்களாதேஷுக்கு இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்தார் பங்களாதேஷின் தலைவர் மோர்ரசா.

இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள், மூன்று ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடர்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தொடருக்காக இங்கிலாந்து அணி செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி பங்களாதேஷுக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் பங்களாதேஷில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களால் இங்கிலாந்து அங்கு செல்வது சந்தேகமாகியுள்ளது. இந்த நிலையிலேயே மோர்ரசா இங்கிலாந்து தமது நாட்டுக்கு வரும் என்று நம்புவதாகத் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்ஹென்றிஸின் கால்பந்தாட்ட இறுதியில் டயமன்ஸ்–ஞானமுருகன் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 23
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் சவால் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ், மயிலங் காடு ஞானமுருகன் அணிகள் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

சென். ஹென்றிஸ் கல்லூரியின் மைதானத்தில் நாளை இரவு 7.30 மணிக்கு ஆட்டம் நடைபெறவுள்ளது. டயமன்ஸ் அணி தனது அரையிறுதியில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஞானமுருகன் தனது அரையிறுதியில் முல்லைத்தீவு சென். யூட் அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தவிர இந்தத் தொடரில் டயமன்ஸ் அணி எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியடையாது இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. மயிலங்காடு ஞான முருகன் அணி ஒரு ஆட்டத்தில் தோல்வியடைந்து இறுதிக்குத் தகுதிபெற்றது. இரு அணிகளும் ஆகச் சிறந்த போர்மில் இருப்பதால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா கலந்து கொள்கிறார். (ம-422)


டயமன்ஸ் அணி


ஞானமுருகன் அணி

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

*வடமராட்சி லீக்கின் கால்பந்தாட்டம்*
வடமராட்சி கால்பந்தாட்ட லீக், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கால்பந்தாட்ட லீக்குகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் நெற்கொழு கழுகுகள் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருகோணமலை லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி லீக் மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மடுமாந்தை லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி மோத வுள்ளது. மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் லீக் அணியை எதிர்த்து மூதூர் கால்பந்தாட்ட லீக் அணி மோத வுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அம்பாறை லீக் அணியை எதிர்த்து வவுனியா லீக் அணி மோத வுள்ளது.

*இருதயராஜா வி.க. தொடர்*
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் அணி மோதவுள்ளது. (ம-23)

*எவரெஸ்ட் வி.க. தொடர்*
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23-108)



## இந்திய ரெயில்வே கபடி அணி வீழ்ந்தது யாழ். மகளிரிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். மாவட்ட கபடிச் சங்கத்தால் நடத்தப்பட்ட இந்திய ரெயில்வே அணிக்கும் யாழ். மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான கபடிப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ். தெரிவு அணி வெற்றி பெற்றது. பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மகளிர் அணி 19:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ரெயில்வே அணியை வீழ்த்தியது. (ம-422)

## காயம் காரணமாக விலகினார் அபிகரன்

யாழ்ப்பாணம், ஜூலை 23
பல்கலைக்கழகங்களின் தேசிய அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ். பல்கலைக்கழக வீரர் பு.அபிகரன் காயம் காரணமாக விலகினார். சீனாவில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாடும் தனது பல்கலைக்கழகங்களில் உள்ள ஆகச் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்து ஒரு அணியைக் கட்டமைத்து களமிறக்கியுள்ளன. இலங்கை அணியின் சார்பில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் பி.அபிகரனும் இடம் பெற்றிருந்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் இலங்கை அணியை எதிர்த்து புருனே அணி மோதியது. இதில் பு.அபிகரன் காயமடைந்து ஆட்டத்தை விட்டு பாதியில் விலகினார். அவரது காயத்தை பரிசோதித்த மருத்துவர் குழு, தசைநார் கிழிவு ஏற்பட்டுள்ளதாகவும் இரண்டு மாதங்கள் ஓய்வில் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது. (ம-23)



## ஆண்கள் அணி கபடியில் தோல்வி

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். மாவட்ட கபடிச் சங்கத்தால் நடத்தப்பட்ட இந்திய ரெயில்வே அணிக்கும் யாழ். மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இந்திய ரெயில்வே அணி வெற்றி பெற்றது.
பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டு கழகத்தின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற இந்த ஆட்டத்தில் 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்திய ரெயில்வே அணி வெற்றி பெற்றது. (ம-422)

## 400 மில்லியன் செலவில் யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானமாம்

400 மில்லியன் ரூபாய் செலவில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானமொன்று யாழ். மாவட்டத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார். கிட்டத்தட்ட 50 பரப்பு நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள இந்த மைதானத்தின் கட்டுமானப் பணிகள் நவம்பர் மாதம் தொடங்கும். 3 ஆண்டுகளில் பணிகள் முழுவதுமாக முடிந்துவிடும். மைதானத்துக்கான மொத்தச் செலவும் இலங்கை கிரிக்கெட் சபையினுடையது. இருப்பினும் இது கட்டப்படும் இடம் இன்னும் [illegible] வாக முடிவு செய்யப்பட[illegible] என சுமதிபால மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவுக்குத் தடை உறுதி



ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவுக்கு விதிக்கப்பட்ட தடையைத் தொடர்ந்து ரஷ்யத் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு, விளையாட்டுக்குரிய சர்வதேச தீர்ப்பாயத்தால் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யா உறுதியாகத் தடைசெய்யப்பட்டது.

2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரிலும், அதன் பின்னரான சர்வதேச தடகளத் தொடர்களிலும் ரஷ்ய நாட்டின் சார்பாக களமிறங்கிய வீரர் வீராங்கனைகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியமை அம்பலமானது. அரசின் ஆதரவு அல்லாமல் இவ்வாறு பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்த வாய்ப்பில்லை என்பதால் ரஷ்ய அரசும் இந்த விவகாரத்தில் உடந்தை எனக் குற்றம் சுமத்தப்பட்டது. இதன் எதிரொலியாக பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடையை எதிர்த்து ரஷ்யத் தரப்பில் மேன்முறையீடு செய்யப்பட்டு, விளையாட்டுகளுக்கான சர்வதேச தீர்ப்பாயத்தில் நேற்றுமுன்தினம்விசாரணைக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் மேன்முறையீட்டிலும் ரஷ்யாவுக்குத் தோல்வியே எஞ்சியது. அந்த நாட்டின் மீதான தடை உறுதிப்படுத்தப்படுவதாக தீர்ப்பாயம் தெரிவித்ததையடுத்து, ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டது. ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்ய வீரர், வீராங்கனைகள் ரஷ்ய கொடியின் கீழ் அல்லாமல் ஒலிம்பிக் கொடியின் கீழேயே களமிறங்க முடியும். (ம)

## மத்தியூஸுக்கு சமரவீர ஆதரவு



இலங்கை அணித் தலைவர் மத்தியூஸுக்கு முன்னாள் வீரரான சமரவீர தனது ஆதரவைத் தெரிவித்தார்.

இலங்கை அணி சமீப காலமாகத் தொடர்ந்து சறுக்கலைச் சந்தித்து வருகிறது. இதனால் அணித் தலைவரான மத்தியூஸை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று பல தரப்பிடமிருந்தும் அழுத்தங்கள் வந்து குவிந்தன. ஆனால் மத்தியூஸே தலைவராகத் தொடர வேண்டும் என்று சமரவீர ஆதரவு தெரிவித்தார்.

என்னைப் பொறுத்தவரை இலங்கை அணியின் தலைவரை மாற்றுவது தேவையற்றது. ஆனால் சில விடயங்களை கண்டிப்பாக அவர் கற்றுக் கொள்ள வேண்டும். சூழ்நிலைகளை நன்கு அறிந்து நடக்கக்கூடிய சில முடிவுகளை அவர் எடுக்க முன்வர வேண்டும் என மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)



## ரஷ்யா மீதான தடைக்கு உசைன் போல்ட் ஆதரவு

ரியோ ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா தடை செய்யப்பட்டமைக்கு, மின்னல் வேக மனிதர் என்றழைக்கப்படும் உசைன் போல்ட் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஊக்க மருந்தை ஒரு தொற்று நோயாகவே நான் கருதுகிறேன். ஊக்க மருந்துப் பிரச்சினையால் ரியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க ரஷ்ய தடகள அணிக்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டிருப்பது நியாயமானது என்பதே எனது எண்ணம். விதிமுறை என்பது எல்லோருக்கும் பொதுவானது தான். ரஷ்யா மீதான தடை ஏனைய வீரர், வீராங்கனைகளுக்கான ஓர் எச்சரிக்கையாகவே அமைய வேண்டும் என போல்ட் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் முதன் முறையாக..
Attention! After A/L Students



உங்கள் எதிர்கால பல்கலைக் கழகத்திற்கான இலவசச் சுற்றுலா
மலேசியா உயர்கல்வி கருத்தரங்கு
ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10.00 மணி
BCAS வளாகம், யாழ்ப்பாணம்
16, பருத்தித்துறை வீதி
இலவசம் விமான டிக்கட் போக்குவரத்து தங்குமிடம்
செல்லுமிடங்கள்...
• Manipal International University (MIU)
• Melaka-Manipal Medical College (MMMC)
• Kuala Lumpur City Tour
BCAS Campus வழங்கும் இலவச மலேசியா சுற்றுலா பயணத்தினால் மாணவர்கள் அடையும் பயன்கள்
• நீங்கள் தெரிவு செய்யப் போகும் மலேசியா பல்கலைக் கழகத்தை பற்றிய முழுமையான அறிமுகம்
• மலேசியா பல்கலைக் கழகங்களில் மாணவரின் வாழ்க்கை முறை மற்றும் கற்றல் வசதிகளை நேரடியாக அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம்
• பெற்றார்கள் தமது பிள்ளைகளின் எதிர் காலத்தைப் பற்றி முடிவெடுக்கும் அருமையான வாய்ப்பு
MEDICINE | BIOMEDICAL SCIENCE | BIO TECHNOLOGY | DENTAL
COMPUTER SCIENCE | CIVIL ENGINEERING | MECHANICAL ENGINEERING | BUSINESS MANAGEMENT
ENGINEERING FOUNDATION | SCIENCE FOUNDATION
மாணவர்களே, பெற்றோர்களே..!
உயர் கல்விக்கான எமது இலவச வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்து கொண்டு இப்பொன்னான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
CALL 077 960 3753 076 520 4503 077 311 4105
முன் பதிவு Type Name & NIC No. & Send to 077 960 3753
17 YEARS
ISO 9001:2008 CERTIFIED
BCAS JAFFNA CAMPUS 16, point Pedro Road, Jaffna.
HOTLINE : 021 221 9910 info@bcas.lk | www.bcas.lk

## நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே முரளிதரனால் குழப்பம் ஏற்பட்டதாம்



ஆஸ்திரேலிய அணிக்கு முத்தையா முரளிதரன் பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏமாற்றமும் குழப்பமும் அடைந்ததாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் 2 ரி–20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ளது. டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணிக்குப் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளிதரன் நியமிக்கப்பட்டார். இலங்கையின் ஆடுகளத் தன்மை, பலம், பலவீனம் ஆகியவற்றைப் பற்றி அறியவே முரளிதரன் நியமிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிருப்தி அடைந்தார்களாம்.

நாட்டுக்கு முக்கியத்தும் கொடுத்து விளையாடும் முத்தையா முரளிதரன் போன்ற சிறந்த வீரர்கள் எதிரணிக்கு எப்படி உதவலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்தனர். முரளிதரன் இப்படி செய்வது கண்டிப்பாக நெறிமுறையற்ற செயல் இல்லை. ஒரு வீரராக அவர் நினைத்ததைச் செய்ய அவருக்கு முழு உரிமையும், சுதந்திரமும் இருக்கிறது என சுமதிபால மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸிக்கு எதிரான டெஸ்ட்; இலங்கை அணி அறிவிப்பு

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

நான்கு அறிமுக வீரர்களுடனேயே அணி அறிவிக்கப்பட்டது. ஆசித பெர்னாண்டோ, விஸ்வ பெர்னாண்டோ, லக்சன் சண்டாகன் மற்றும் ரோசன் சில்வா ஆகியோரே அவ்வாறு இடம்பிடித்துள்ள புதுமுக வீரர்களாவர். திரிமன்னே, சிறிவர்தன இருவரும் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இலங்கை அணி விவரம்: மத்தியூஸ் (தலைவர்), தினேஸ் சந்திமல் (துணைத் தலைவர்), திமுத் கருணாரத்ன, கௌசால் சில்வா, குசல் ஜெனித் பெரேரா, குசல் மெண்டிஸ், தனஞ்ஜெயா டி சில்வா, ரோசன் சில்வா, நுவான் பிரதீப், விஸ்வா பெர்னாண்டோ, அசிதா பெர்னாண்டோ, ரங்கன கேரத், தில்ருவான் பெரேரா, லக்சன் சண்டாகன், சுரங்க லக்மல்.

முதலாவது டெஸ்ட் ஆட்டம் பல்லேகல மைதானத்தில் இந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகும். (ம)

PERSONAL CLASSES
A/L Chemistry
குழு, தனியாக வீடுகளில் கற்பிக்கப்படும்.
தொடர்பு:
V.Nantha
076 845 4365

A/L PERSONAL CLASS
Biology
Chemistry
Theary&37வருட Pastpaper
கற்பிக்கப்படும்.
தொடர்பு:0756295662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.